புதிய பாடத்திட்டம் - 2018

தரம் 9

# தமிழ் மொழியும் இலக்கியமும்

* பாட அலகு விளக்கங்களுடன்
* பயிற்சிகள் - விடைகளுடன்
* ஆக்கத்திறன் செயற்பாடுகள்
* மொழிவளம்

கீதா கணேஷ்
M.A, B.A (Hons in Tamil), PGDSNE

LBD Publication

Lanka Book Depot-Pvt Ltd.
0773911998
E-mail : lankabookdepot@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய அறிவித்தல்

பொது நூலகம்,
நல்லூர் பிரதேச சபை

..............................

நீங்கள் எடுத்துச் செல்லும் புத்தகத்தில் கீறுதல், வெட்டுதல், அழித்தல், அழுக்குப் படியவிடல் மற்றும் ஊறுபாடுதல்களைச் செய்ய வேண்டாமெனக் கேட்டுக் கொள்கின்றோம். புத்தகங்களை நீங்கள் எடுக்கும் பொழுது இப் படியான குறைபாடுகளைக் கண்டால் நூலகப் பொறுப்பாளருக்கு உடன் தெரிவிக்கவும். அல்லாவிடில் நீங்கள் எடுத்துச் சென்ற புத்தகம் நல்ல நிலையில் இருந்ததெனக் காணப்படுவதுடன், ஊறுபாடுகளுக்கு நூலகப் பொறுப்பாளரினால் விதிக்கப்படும் தண்டத்தை நீங்கள் ஏற்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L 16166
L
894.811076
கீதா

புதிய பாடத்திட்டம் - 2018

# தமிழ் மொழியும் இலக்கியமும்

# தரம் 9

பாட அலகு விளக்கங்களுடன்
பயிற்சிகள் விடைகளுடன்
ஆக்கத்திறன் செயற்பாடுகள்
மொழிவளம்

**கீதா கணேஷ்**
**M.A, B.A(Hons in Tamil), PGDSNE**

கொக்குவில் பொது நூலகம்
நல்லூர் பிரதேசசபை

Lanka Book Depot - Pvt Ltd.
0773911998

வெளியீடு
லங்கா புத்தகசாலை (தனியார்) வரையறுக்கப்பட்டது
F.L.1- 14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் பதிப்பு விபரம்


நூலின் பெயர் - தமிழ்மொழியும் இலக்கியமும்

ஆசிரியர் - கீதா கணேஷ்

பதிப்புரிமை - நூலாசிரியருக்கு

வெளியீடு - லங்கா புத்தகசாலை (தனியார்)
வரையறுக்கப்பட்டது,
F.L.1 14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர,
கொழும்பு-12.
தொலைபேசி: 0112341942

முதற்பதிப்பு - தை 2018

பக்கங்கள் - vi + 272




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

**அன்பு மாணவர்களே,**

தமிழ்மொழியும் இலக்கியமும் வழிகாட்டி நூல் மூலமாக உங்களை தொடர்ச்சியாக சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி. எமது தாய்மொழி ஆழங்காண முடியாதது. இது அமுதம் போன்ற இனிய மொழி. எனினும் தமிழ்க்கடலில் நீந்துவதற்கு சிறந்த ஆரம்பம், தேடல் என்பன அவசியமாகின்றன. அதற்கான வழிகாட்டியாக இந்நூல் அமையப்பெற்றுள்ளது.

உங்கள் தேடலுக்கு உதவும் வகையிலும் ஆசிரியர்கள் தம் கற்பித்தலுக்கு பயன்படுத்தக்கூடிய வகையிலும் பாட அலகுகளுக்கான விளக்கங்கள், மொழித்திறன் விருத்திசார் வழிகாட்டல்கள், மொழிவளம் என்பனவும் இணைக்கப்பட்டுள்ளன. இது உங்களின் தமிழ் ஆர்வத்தை மேலும் வலுப்படுத்துவதாக அமையும் என்பதில் ஐயமில்லை. இந்நூலாக்கத்திற்கு உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் இந்நூலினை வெளியிட்டு வைக்கும் லங்கா புத்தகசாலை நிறுவனத்தினருக்கும் என்றும் என் நன்றிகள் உரித்து.

**-நூலாசிரியர்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நில மடந்தைக்கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமதில்
தக்க சிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெரும் தமிழணங்கே!

பல் உயிரும் பல உலகும் படைத்து அளித்துடைக்கினும் ஓர்
எல்லை அறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளவும்
உன்னுதிரத்து எழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக்கு அழிந்து சிதையா உன்
சீர் இளமைத் திறம் வியந்து செயல்மறந்து வாழ்த்துவமே!

மனோன்மணியம்
பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினும் தண்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்க தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வான மறிந்த தனைத்து மறிந்து
வளர் மொழி வாழியவே!

-மகாகவி சுப்பிரமணிய பாரதியார்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 1) | நல்லெண்ணங்களைத் தேர்ந்தெடுப்போம் ....... | 1-12 |
| 2) | உண்மைக்குப் பரிசு ........ | 13-25 |
| 3) | ஒரு சின்னஞ் சிறு பூச்சி ........ | 26-32 |
| 4) | இதயம் அழுகிறது ........ | 33-43 |
| 5) | மருமகனுக்கு விருந்து ........ | 44-55 |
| 6) | யார் சிறந்தவர்? ........ | 56-66 |
| 7) | மலைநாட்டுப் பிரயாணம் ........ | 67-76 |
| 8) | இனியவை கூறல் ........ | 77-84 |
| 9) | வியக்கும் மனம் வேண்டும் ........ | 85-96 |
| 10) | செய்யும் தொழிலே தெய்வம் ........ | 97-105 |
| 11) | செய்யுளை மனனஞ் செய்யும் வழி ........ | 106-114 |
| 12) | எறும்புக் குடும்பம் ........ | 115-127 |
| 13) | தந்தை மகளுக்கு எழுதிய புகழ் பெற்ற கடிதம் ... | 128-132 |
| 14) | வான்குருவியின் கூடு ........ | 133-140 |
| 15) | நளவெண்பா ........ | 141-159 |
| 16) | சகுந்தலை நாடகம் ........ | 160-168 |
| 17) | தோற்றுப் பார் ........ | 169-175 |
| 18) | நகரத்தின் நிழல் ........ | 176-186 |
| 19) | காட்டுவழி ........ | 187-195 |
| 20) | சகுந்தலை நாடகம் II ........ | 196-203 |
| 21) | பிசிராந்தையார் கண்ட சமுதாயக் காட்சி ....... | 204-210 |
| | மொழிவளம் ........ | 211-267 |
| | விடைகள் ........ | 268-272 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. நல்லெண்ணங்களைத் தேர்ந்தெடுப்போம்

நல்லெண்ணங்களைத் தேர்ந்தெடுப்போம் என்ற கட்டுரையின் ஆசிரியர் **எம்.எஸ்.உதயமூர்த்தி** ஆவார்.

எம்.எஸ்.உதயமூர்த்தி தமிழ்நாடு நாகபட்டினம் மாவட்டத்தில், மயிலாடுதுறையில் விளநகர் கிராமத்தில் பிறந்தார். மயிலாடுதுறையில் பள்ளிப்படிப்பை முடித்து, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அங்க வேதியியலில் பட்டம் பெற்றார். அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தில் மருத்துவ வேதியியலில் முனைவர் பட்டம் பெற்றார்.

ஆசிரியராகப் பணிபுரிந்த இவர் பேராசிரியராக அமெரிக்காவிலும் பணியாற்றினார். 1987ஆம் ஆண்டில் மக்கள் சக்தி இயக்கம் எனும் அமைப்பை உருவாக்கினார். இவர் உளம் சார்ந்தும், மனித வாழ்வியல் மேம்பாட்டிற்குமான பல நூல்களை எழுதியுள்ளார்.



- எண்ணங்கள்
- பிரார்த்தனை மனம் மந்திரம்
- தலைவன் ஒரு சிந்தனை
- உயர் மனிதனை உருவாக்கும் சிந்தனைகள்
- பிரச்சனைகளுக்கு முடிவு காண்பது எப்படி?
- ஆத்ம தரிசனம்
- தட்டுங்கள் திறக்கப்படும்
- நாடு எங்கே செல்கிறது.

இவர் 85ஆவது அகவையில் 2013ஆம் ஆண்டு ஜனவரி 21இல் இறந்தார்.

* எண்ணங்கள் எனப்படும் சிந்தனையே மனிதனை வளப்படுத்துபவை.

* செயல்களின் வெளிப்பாட்டுக்குக் காரணமாக விளங்குபவை எமது எண்ணங்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நல்ல எண்ணங்கள் நல்ல செயல்களைத் தரும் தீய எண்ணங்கள் தீய செயல்களுக்கு இட்டுச் செல்லும்.

* எமது மனம் எத்தகைய எண்ணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பது பற்றியே நல்லெண்ணங்களைத் தேர்ந்தெடுப்போம் என்ற கட்டுரையில் ஆசிரியர் கூறுகிறார்.

* உலகில் பல வகையான எண்ணங்கள் உள்ளன.

  - சுகநினைவுகளை எழுப்பும் எண்ணங்கள்
  - துக்கத்தை மூட்டிவிடும் எண்ணங்கள்.
  - சுறு சுறுப்பையும் உற்சாகத்தையும் தரும் எண்ணங்கள்.
  - சோகத்தையும் சோர்வையும் உண்டுபண்ணும் எண்ணங்கள்.

* கோபக்காரன், தன்னம்பிக்கை இல்லாதவன், கையாலாகாதவன், கவலைப்படுபவன் போன்றோர் நல்லெண்ணங்களைக் கொண்டிருப்பவர்கள் அல்லர்.

* ஒருவருடைய முகத்தில் அவரது எண்ணங்கள் வெளிப்படும். தன்னம்பிக்கை. துக்கம் என்பன முகத்தில் வெளிப்படும்.

* கீழே தரப்பட்ட எண்ணங்களைத் தேர்ந்தெடுப்பவர்களின் வாழ்வு கீழ்நிலைக்குச் செல்ல, மேம்பட்ட எண்ணங்களைக் கொண்டிருப்பவர்களின் வாழ்வு வெற்றி பெறுகிறது.

* பிரச்சனைகளிலிருந்து விடுபடுவதற்கான வழி, அதற்காக வருத்தப்படாது, பிரச்சனையிலிருந்து மீளுவதற்கு என்ன செய்யலாம் என சிந்தித்தல் வேண்டும்.

* வருத்தப்படுவதால், ஏற்படும் நிலை:-

  - நமக்கு நாமே தண்டனை அளிக்கிறோம்.
  - பிறரின் அனுதாபத்தைப் பெறுகிறோம்.

* பிரச்சனைக்கான தீர்வைக் கண்டறிய முடியாதவர்களே மேலுள்ள இரண்டு தடுமாற்றப் பாதைகளில் நடக்கின்றனர்.

* தாழ்த்தும் உணர்ச்சிகளாக கோபம், பயம், பொறாமை, குற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வு, கவலை என்பன காணப்படுகின்றன.

* மனச்சிகிச்சை மருத்துவர்கள் மனிதனின் சிந்திக்கும் திறனை சிந்திக்கும் அமைப்பை, கீழ் உணர்வுகள் முடக்கி விடுகின்றன என கூறுகிறார்கள்.

* முடக்கப்பட்ட மனம் செயலற்றுப் போகிறது. இதனால், நல்ல யோசனை, நல்ல நம்பிக்கை என்பவற்றைத் தரும் மனதின் வாயிற் கதவு மூடப்படுகிறது.

* நல்லவற்றை விலக்கி தீயவற்றை தேர்ந்தெடுப்பது கனியிருப்பக் காய் கவர்தல் போன்றது ஆகும்.

* "கனியிருப்பக் காய் கவர்ந்தற்று" என வள்ளுவர் பாடியுள்ளார்.

* மனதில் நல்ல எண்ணங்களை விதைத்தல் வேண்டும் அத்தகைய நல்லெண்ணெங்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு எமது கையில் உள்ளது.

**உதாரணம்:-**

பரீட்சையில் சித்தியடையாத மாணவன் ஒருவன் தற்கொலை செய்து கொள்கிறான். சித்தியடையாத மற்றொரு மாணவன் கணிதமேதை இராமானுஜத்தை ஆங்கிலத்தில் கும்பகோணம் கல்லூரியில் தோல்வியடைய வைக்கிறான்.

* ஒரு விடயத்தை நாம் எடுத்துக்கொள்வதற்கு ஏற்பவே நம் உணர்ச்சிகளும் வெளிப்படுகின்றன.

**உதாரணம்:-**

சாக்ரடீஸ் நண்பருடன் கீழே நின்று உரையாடும் போது அவரது மனைவி, மேல் மாடியிலிருந்து குப்பையைக் கூட்டி அவர் தலையில் கொட்டினாள். சற்று நேரத்தில் ஒரு வாளி தண்ணீரைக் கொண்டு வந்து அவர் தலையில் உயரே இருந்து ஊற்றினாள். இதனை, சாக்ரடீஸ் சாதாரண விடயமாக எண்ணினார். 'முன்பு இடியிடித்தது, இப்போது மழை பெய்கிறது' என்று கூறினார். தனது மனைவியின் செயலால் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்படையவில்லை.

* ஒருவரின் வீட்டுக்குப்போகும் போது அவர் உங்களை மதிக்க வில்லையாயின் கௌரவம் இழக்கப்பட்டதாக கோபப்படுகிறீர்கள். அவர்களைத் திட்டுகிறீர்கள். அந்த மனிதர் கௌரத்தைத் தரவில்லை என்பதால் உங்கள் கௌரவம் இறங்கிவிட்டதாக எண்ணுகிறீர்கள். இதனால் கௌரவம் இறங்கிவிடவில்லை.

* கௌரவம் பிறர் நமக்குத் தருவதால் கிடைப்பதல்ல. நம்மை நாமே மதிப்பதால், புரிந்து கொள்வதால் வருவது ஆகும்.

* சிறு சம்பவத்தை எம்மைப் பாதிக்கும்படி செய்வதும் சாதாரணமாக எண்ணி காற்றில் பறக்க விடுவதும் எம்மைப் பொறுத்ததே. மனதில் ஏற்படும் தாக்கம் சம்பவத்தால் வருவதல்ல. அதை நாம் எப்படி எடுத்துக் கொண்டோம் என்பதைப் பொறுத்தே வருகிறது.

**மாணவர் செயற்பாடு:-**

**01. கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்களை எழுதுவோம்.**

1. எண்ணம் :- ..............................
2. ஆசிரியர் :- ..............................
3. மனம் :- ..............................
4. பழம் :- ..............................
5. பூ :- ..............................
6. உலகம் :- ..............................
7. துக்கம் :- ..............................
8. காற்று :- ..............................
9. கோபம் :- ..............................
10 உணவு :- ..............................
11. வெற்றி :- ..............................
12. சந்தோசம் :- ..............................
13. பயம் :- ..............................
14. மேதை :- ..............................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. நண்பர் :- ..............................................................

16. தலை :- ..............................................................

17. நன்மை :- ..............................................................

18. தீமை :- ..............................................................

**02. பின்வரும் சொற்களை வைத்துக் கருத்துள்ள வாக்கியம் எழுதுக.**

1. வழி :- ..............................................................
..............................................................

2. வளி :- ..............................................................
..............................................................

3. வலி :- ..............................................................
..............................................................

4. கனி :- ..............................................................
..............................................................

5. கணி :- ..............................................................
..............................................................

6. மனம் :- ..............................................................
..............................................................

7. மணம் :- ..............................................................
..............................................................

8. கரி :- ..............................................................
..............................................................

9. கறி :- ..............................................................
..............................................................

10. பறி :- ..............................................................
..............................................................

**03. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்த்தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.**

அலையோடும் வலையோடும் மலையாமல் விளையாடிச்
சளையாத வீர மனமே! நாளை
விடிவோடு புது வாழ்வு திடமாக வருமென்று
தளராமற் கூறுமனமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலபேதம், இனபேதம், மொழிபேதம், மதபேதம்
இலையாகும் திருநாட்டிலே - நாங்கள்
நலமாக சுகவாழ்வு பெறுமாறு வருமாண்டு
தரும் உண்மைப்பேறு மனமே!
கடல் சூழும் எழில் நாடெம் தாய்நாடு மணிநாடு
கரைசேர வழி காணுவோம் - எங்கள்
உடல், ஆவி, பொருள் யாவும் எமதன்னை உயர்வுக்கு
உறுதிகள் உடன் பூணுவோம்!
உலகோடு சமமாக ஒரு தேச மக்களாய்
ஒன்றித்து முன்னேறுவோம் - கடல்
அலைவீழும், எழும் ஆழி அழியாது
கடல் போல அகிலத்தை வென்றாளுவோம்!

1. இப்பாடலில் சமத்துவத்தை எடுத்துக் கூறும் அடிகளை எழுதுக.

.....................................................................................................................

.....................................................................................................................

2. நாட்டின் முன்னேற்றத்திற்கு எவ்வாறு உதவுவதாகக் கவிஞர் குறிப்பிடுகிறார்?

.....................................................................................................................

3. கவிஞர் நாட்டின் மீது கொண்ட பற்றினை 2 வாக்கியங்களில் எழுதுக.

.....................................................................................................................

.....................................................................................................................

4. உலகினை கவிஞர் எதனுடன் ஒப்பிடுகிறார்? காரணம் யாது?

.....................................................................................................................

.....................................................................................................................

5. பின்வரும் சொற்களுக்கான ஒத்தகருத்தினை எழுதுக.
எழில், ஆழி, பேதம், ஆவி.

.....................................................................................................................

**04. கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பாடப்பகுதியை ஆதாரமாகக் கொண்டு விடை எழுதுக.**

1. 'நல்லெண்ணங்களைத் தேர்ந்தெடுப்போம்' என்ற கட்டுரையின் ஆசிரியர் யார்?

.....................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. உலகில் எத்தகைய எண்ணங்கள் காணப்படுவதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்?

.................................................................................................

3. கீழ்ப்பட்ட எண்ணங்களைக் கொண்டிருப்பவர்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்?

.................................................................................................

4. கீழ்ப்பட்ட எண்ணங்களைக் கொண்டவர்கள் எவற்றை அனுபவிக்கின்றார்கள்?

.................................................................................................

.................................................................................................

5. பிரச்சனைகள் ஏற்பட்டால், யாது செய்யவேண்டும்?

.................................................................................................

.................................................................................................

6. பிரச்சனைகளைக் கண்டு வருந்துவதால் நிகழ்பவை யாவை?

.................................................................................................

.................................................................................................

7. 'கனியிருப்பக் காய் கவர்ந்தற்று' எனப் பாடியவர் யார்?

.................................................................................................

இதில் கூறப்படும் விடயம் யாது?

.................................................................................................

8. பரீட்சையில் சித்தியடையாத மாணவர் இருவரும் கையாண்ட வழிமுறைகள் எவை? அவற்றுள் சிறந்தது எது?

.................................................................................................

.................................................................................................

9. தாழ்த்தும் உணர்ச்சிகள் எவை?

.................................................................................................

.................................................................................................

10. இவற்றால் ஏற்படும் தீங்கு யாது?

.................................................................................................

11. ஒரு சம்பவத்தின் நன்மை, தீமை என்பன எதில் தங்கியுள்ளது?

.................................................................................................

12. "முன்பு இடிஇடித்தது, இப்போது மழை பெய்கிறது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i) இக்கூற்று கூறியவர் யார்?

.............................................................................................

ii) கூறப்பட்ட சந்தர்ப்பம் யாது?

.............................................................................................

**05. ஆகுபெயர்களைப் பட்டியற்படுத்தி ஒவ்வொன்றுக்கும் உதாரணம் தருக.**

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

விமல்:- ஆகுபெயர்களை எவ்வாறு இனங்காண வேண்டும் என்பது எனக்கு விளங்கவில்லை.

கோபி:- ஏன் விமல்? அது மிகவும் இலகுவான பகுதி. உதாரணமாக இலங்கை உலகக் கிண்ணத்தை வென்றது. இந்த வாக்கியத்தில் இலங்கை என்ற சொல் இடம்பெற்றுள்ளது. இது இலங்கை என்ற நாட்டைக் குறிப்பதாகும். உலகக்கிண்ணத்தை வென்றது இலங்கை அணியின் வீரர்கள் என்பதால் அவர்களின் நாட்டையே குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது. வீரர்கள் என்பதற்குப் பதிலாக இலங்கையின் பெயர் ஆகி வந்துள்ளமையால் இலங்கை ஆகுபெயராக விளங்குகிறது.

விமல்:- ஆ....ஒன்றின் இயற்பெயர் இன்னொன்றுக்கு ஆகி வருவது ஆகுபெயராகும்.

கோபி:- ஆம் மிகவும் சரியாக விளங்கிக் கொண்டாய் விமல்.
**கீழுள்ள வாக்கியங்களை அவதானிப்போம்.**
முல்லை நறுமணம் வீசியது.
இங்கு முல்லைச் செடியின் பெயர் அதன் பூவுக்கு ஆகி வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**06. பின்வரும் வாக்கியங்களில் இடம்பெற்றுள்ள ஆகுபெயர்களை இனங்கண்டு எழுதுக.**

1. உறவினர்கள் யாவரும் வீட்டிற்கு வந்து பொங்கல் உண்டனர்.

   ..........................................................................................

2. நண்பனின் தோட்டத்தில் நாலுமணி பூத்தது.

   ..........................................................................................

3. மலையகத்தில் தேயிலை பயிரிட்டனர்.

   ..........................................................................................

4. ரோஜா தோட்டத்தில் மலர்ந்தது.

   ..........................................................................................

5. சிவலை வயலை உழுதது.

   ..........................................................................................

6. வீதியில் அதிகாலையில் நெடுவல் ஓடினான்.

   ..........................................................................................

7. தேசிய மட்ட கோலூன்றிப் பாய்தலில் மகளிர் கல்லூரி பங்குபற்றியது.

   ..........................................................................................

**07. கீழுள்ள சொற்கள் ஆகுபெயராக அமையும் வகையில் வாக்கியம் அமைக்க.**

1. தாமரை :- ..........................................................

   ..........................................................................................

2. படையல் :- ..........................................................

   ..........................................................................................

3. புகையிலை :- ..........................................................

   ..........................................................................................

4. கார்த்திகை :- ..........................................................

   ..........................................................................................

5. மகாவித்தியாலயம் :- ..........................................................

   ..........................................................................................

6. கறுப்பு :- ..........................................................

   ..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. கீழுள்ள சொற் தொகுதிகளில் வேறுபட்ட பொருள் தரும் சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக.

1. மதி, இரவி, திங்கள், சந்திரன், நிலா
2. ஆதவன், ஞாயிறு, கதிரவன், விண்மீன்
3. ஒலி, ஒளி, அரவம், தொனி, ஓசை
4. ஞாலம், ஞானம், வையகம், பூமி, உலகம்
5. வறுமை, நல்குரவு, மிடி, தரித்திரம், திரு
6. இரை, ஆகாரம், போசனம், போசனை, உணவு
7. கொடை, உலோபம், ஈகை, வண்மை, அளி
8. சீயம், அரி, கேசரி, பறள், கோளரி
9. உறக்கம், அனந்தல், சயனம், துயில், தனு
10. இன்பம், இடும்பை, இன்னல், இன்பம், இடர்

09. பின்வருவனவற்றுக்கு வழங்கப்படும் வேறு சொற்களை எழுதுக.

1. நீர் :- ..........
2. அன்னை :- ..........
3. காடு :- ..........
4. அழகு :- ..........
5. தடாகம் :- ..........
6. ஞானம் :- ..........
7. உடல் :- ..........
8. ஆபரணம் :- ..........
9. உதிரம் :- ..........
10. வெகுளி :- ..........

10. கீழே தரப்பட்டுள்ள சொற் தொகுதிகளுக்கு சமமாக வழங்கப்படும் பிறிதொரு சொல்லினை எழுதுக.

1. சத்தியம், சபதம், பிரமாணம், மெய் :- ..........
2. இயமன், மறலி, கூற்றுவன் :- ..........
3. கமலம், பங்கஜம், முளரி, அம்புயம் :- ..........
4. உள்ளம், அகம், நெஞ்சு, சித்தம் :- ..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பரி, புரவி, அசுவம், அயம் :- ..............................

6. புலர், விடியல், வைகறை, காலை :- ..............................

7. ஊழியம், பணி, வேலை :- ..............................

8. அவை, சபை, குழாம், சமூகம் :- ..............................

9. அடிசில், அன்னம், சாதம், பருக்கை :- ..............................

10. உவர், சாகரம், ஆழி, சமுத்திரம் :- ..............................

## 11. ஆக்கத் திறன் செயற்பாடு:

நல்லெண்ணம் நன்மை தரும் என்ற தலைப்பில் 150 சொற்களில் ஒரு கதை எழுதுக.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் பொது நூலகம்
நல்லூர் பிரதேசசபை
L16166

## 2. உண்மைக்குப் பரிசு

* இரண்டாம் கலிபா உமர் (றழி) அவர்கள் நேர்மையுடன் ஆட்சி செய்த மன்னர்.

* இவரிடம் பல நற்பண்புகள் காணப்பட்டன.

  - மக்களின் குறைகளை நேரில் அறிந்து கொள்ளுவார்.
  - மக்களுக்குத் தேவையான உதவிகளைத் தாமே செய்து கொடுப்பார்.
  - தனது தலைமையில் வாழும் மக்கள் சந்தோசமாக வாழவேண்டும் என எண்ணுபவர்.
  - மக்கள் அறிந்து கொள்ளாத விதத்தில் இரவு நேரத்தில் மாறுவேடம் பூண்டு நகரைச்சுற்றி வருவார்.
  - 'மக்கள் பணி செய்பவன்தான் மக்கள் தலைவன்' என்ற கொள்கையுடன் செயற்படுபவர்.

* பாலில் தண்ணீர் கலந்து விற்க எண்ணும் தாய்க்கும் அதை மறுக்கும் மகளுக்கும் இடையிலான உரையாடல் மூலம் வறுமையிலும் நேர்மை தவறாத மகளின் நற்பண்பு எடுத்துக் காட்டப்படுகிறது.

* நகரசோதனை செய்வதற்கு உமர்றழி அவர்கள் புறப்பட்டுச் சென்ற வேளையிலேயே இவ் உரையாடல் இடம்பெற்றது.

* பால் குறைவாக இருந்தமையால் தண்ணீர் கலந்து விற்கும் போது பணம் அதிகமாக கிடைக்கும் என தாய் கூறிய போதிலும், அவ்வாறு செய்வது குற்றச்செயல் என்பதை மகள் எடுத்துரைத்தாள்.

* 'கலீபா எமது செயலைப் பார்க்காது விட்டாலும் அல்லாஹ் பார்த்துக் கொண்டிருப்பான். அல்லாஹ்வுக்கு மாறான செயலைச் செய்யமாட்டேன்' என மகள் மறுத்துரைக்கிறாள்.

* அரசவைக்குத் தாயும்மகளும் அழைத்து வரப்பட்டு நடந்தவற்றைக் கூறும்படி கலீபா கூறியதும் இருவரும் தயக்கத்துடன் நின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கலீபா மகளின் நற்பண்பை பாராட்டினார். 'தவறு செய்வதை அல்லாஹ் அவதானித்துக் கொண்டிருக்கிறான்' என்று மகள் கூறியதைப் பாராட்டினார்.

  'தவறு செய்ய வசதி இருந்தும் அதைச் செய்யாமல் விடுவதே நன்று' எனவும் கூறிப் பாராட்டினார்.

* மகள் உண்மை பேசியமைக்குச் சன்மானமாக தன் மகனை திருமணம் செய்து கொடுத்தார்.

* தாய் மகளுக்குக் கிடைத்த சன்மானத்தை எண்ணி மிகுந்த மகிழ்ச்சி அடைந்தாள்.

* ஏழ்மை நிலையிலும் உண்மை பேசி உத்தமராக வாழ்வோம்.

* மகளின் நற்பண்புகள்:-
  - பாவச் செயல்கள் செய்ய விரும்பாதவள்.
  - அல்லாஹ் மீது மிகுந்த பக்தி கொண்டவள்.
  - உண்மை பேசுபவள்.
  - சிறந்த பண்பும் ஒழுக்கமும் உடையவள்.

## மாணவர் செயற்பாடு:-

01. **பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. மக்கள் சந்தோசமாக வாழவேண்டும் என கலீபா எண்ணினார். 'சந்தோசம்' என்பதன் ஒத்தகருத்துச்சொல்,
   1. சந்தேகம் 2. களிப்பு 3. கழிப்பு 4. துக்கம்
2. வீட்டிற்கு சமீபமாக கலீபா சென்றார். 'சமீபம்' என்பதன் எதிர்க்கருத்துச் சொல்,
   1. தூரம் 2. அண்மை 3. பக்கம் 4. உள்ளே
3. கலீபா அவர்கள் கட்டளை இட்டார். 'கட்டளை' என்பதன் ஒத்தகருத்துச் சொல்,
   1. சட்டம் 2. ஆணை 3. சன்மானம் 4. கட்டணம்
4. ஏழைகளை இறைவன் காப்பாற்றுவார். 'ஏழை' என்பதன் எதிர்க்கருத்துச் சொல்,
   1. வறியவர் 2. எளியவர் 3. தனவந்தர் 4. வள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பெண் நாணத்தால், தலைகுனிந்தாள். 'நாணம்' என்பதன் ஒத்தகருத்துச் சொல்
1. குற்றம். 2. வெட்கம் 3. நாளம் 4. மகிழ்ச்சி

**பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுக.**

6. வீட்டில் தாயும் மகளும் .......................... கொண்டிருந்தனர்.
1. உறையாடி 2. உரையாடி 3. உரயாடி 4. உரையாட

7. கலீபா மகளுக்கு .......................... கொடுத்தார்.
1. சன்மானம் 2. சன்மாணம்
3. சண்மானம் 4. சந்மானம்

8. ........................ காலைக் கடமைகளை நிறைவேற்றுவது சிறந்த பண்பாகும்.
1. பொழுது புளர்ந்ததும் 2. பொழுது புலந்ததும்
3. பொளுது புலர்ந்ததும் 4. பொழுது புலர்ந்ததும்

9. பணியாளனின் சொல்லைக் கேட்ட தாய் ........................ மகளைப் பார்த்தாள்.
1. பதற்றத்துடன் 2. பதற்றதுடன்
3. பதற்ரத்துடன் 4. பதற்ரதுடன்

10. தாய் மகிழ்ச்சி .......................... மூழ்கினாள்.
1. வெள்லத்தில் 2. வெல்லத்தில்
3. வெள்ளத்தில் 4. வெள்ளத்திள்

**02. பின்வரும் சொற்களை வைத்துக் கருத்துள்ள வாக்கியம் எழுதுக.**

1. பணி :- ..........................................................................
..........................................................................

2. பனி :- ..........................................................................
..........................................................................

3. உரை :- ..........................................................................
..........................................................................

4. உறை :- ..........................................................................
..........................................................................

5. வெல்லம் :- ..........................................................................
..........................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வெள்ளம் :- ..................................................................................

..................................................................................................

7. காலை :- ..................................................................................

..................................................................................................

8. காளை :- ..................................................................................

..................................................................................................

9. சமுகம் :- ..................................................................................

..................................................................................................

10. சமூகம் :- ..................................................................................

..................................................................................................

**03. பின்வரும் சொற்களுக்கான எதிர்ப்பாற் சொற்களை எழுதுக.**

1. தாய் :- ....................................................
2. மகள் :- ....................................................
3. அரசன் :- ....................................................
4. மருமகள் :- ....................................................
5. பாலகன் :- ....................................................

**04. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான எழுவாய், பயனிலை, செயற்படுபொருள் சொற்களை எழுதுக.**

1. ...................................... புத்தகம் வாசிப்பதில் ஆர்வமுடையவன்.
2. நாங்கள் எப்போதும் நேர்மையுடன் ......................................
3. மன்னர் மாறுவேடம் பூண்டு ...................................... சுற்றிப் பார்த்தார்.
4. பணியாளன் மன்னனின் ...................................... நிறைவேற்றினான்.
5. கூட்டத்திற்கு வருகை தந்த மக்கள் மத்தியில் .............................. வருகை தந்தார்.

**05. பின்வரும் வாக்கியங்களின் எழுவாய், பயனிலை, செயற்படுபொருளை எழுதுக.**

1. அறம் செய்ய விரும்பு

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

2. பரிசில் பெற்ற மாணவனை ஆசிரியர் பாராட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.................................................................................................................

.................................................................................................................

.................................................................................................................

3. திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரை எழுதினார்.

.................................................................................................................

.................................................................................................................

.................................................................................................................

4. டெங்கு நோய் தீவிரமாகப் பரவி வருவதால் சூழலை சுத்தமாக வைத்திருங்கள்.

.................................................................................................................

.................................................................................................................

.................................................................................................................

5. பாலன் தனது பந்தை சேற்றிலிருந்து எடுத்தான்.

.................................................................................................................

.................................................................................................................

.................................................................................................................

* பெயர்ச்சொல் அல்லது வினைச்சொல் ஒன்றுடன் விகுதிகளை இணைத்துக் கூறுவதால் உருவாகும் சொற்களை ஆக்கப்பெயர்ச் சொற்கள் எனக் கூறுவோம்.
**உதாரணமாக:-** தொழிலாளி என்ற சொல்லில் தொழில் என்ற பெயர்ச் சொல்லுடன் ஆளி என்ற விகுதி இணைந்து தொழிலாளி என்ற ஆக்கப்பெயரைத் தந்துள்ளது.

**06. கீழுள்ள விகுதிகளுக்குப் பொருத்தமான பெயர்ச்சொற்களை இணைத்து ஆக்கப்பெயர்களை உருவாக்குவோம்.**

ஆளி :- ..........................................................................

..........................................................................

..........................................................................

இயல் :- பொருள் + இயல் = பொருளியல்

..........................................................................

..........................................................................

..........................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரன்/காரி :- கடைக்காரன்

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

சாலி :- புத்திசாலி

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

ஆளன் :- பேச்சாளன்

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

தனம் :- புத்திசாலித்தனம்

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

துவம் - சகோதரத்துவம்

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**07. பின்வரும் பெயர்ச்சொற்களுக்குப் பொருத்தமான விகுதிகளை இணைத்து எழுதி ஆக்கப்பெயர்களை உருவாக்குவோம்.**

1. கவி :- ..........................................................
2. முதல் :- ..........................................................
3. புத்தி :- ..........................................................
4. எழுத்து :- ..........................................................
5. பணி :- ..........................................................
6. வேலை :- ..........................................................

**08. கீழுள்ள விகுதிகளுக்குப் பொருத்தமான வினைச்சொற்களை இணைத்து எழுதி ஆக்கப்பெயர்களை உருவாக்குவோம்.**

1. சி :- முயல்+சி = முயற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயில்+ சி = ..........................

மீள்+சி = ..........................

2. கை :- வா+கை = வருகை

..................................................

..................................................

..................................................

..................................................

3. வு :- உயர் + வு = உயர்வு

..................................................

..................................................

..................................................

..................................................

**09. பின்வரும் வினைச் சொற்களுக்குப் பொருத்தமான விகுதிகளை இணைத்து எழுதி ஆக்கப்பெயர்களை உருவாக்குவோம்.**

1. அறி :- அறி + கை = அறிக்கை
2. வாழ் :- ..................................................
3. உடு :- ..................................................
4. இரு :- ..................................................
5. படு :- ..................................................
6. வெடி :- வெடி + ப்பு = வெடிப்பு
7. துடி :- ..................................................
8. நடி :- ..................................................
9. அடை :- ..................................................
10. படி :- ..................................................
11. முடி :- ..................................................
12. தடி :- ..................................................
13. மலர்+ச்சி = மலர்ச்சி
14. தேர் ..................................................
15. தொடர் ..................................................
16. உணர் ..................................................
17. எழு ..................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கூட்டுப் பெயர்ச் சொற்களை எழுதுவோம்.

கூட்டுப் பெயரில் ஒன்றுக்கு மேற்பட்ட பல சொற்கள் இணைந்து காணப்படும். உதாரணமாக பல்கலைக்கழகம் என்ற சொல்லில் பல்(பல), கலை, கழகம் ஆகிய சொற்கள் காணப்படுகின்றன. இவை இணைந்து ஒரு சொல்லைத் தருவதை அவதானிக்கலாம். இதுவே கூட்டுப் பெயர் எனப்படுகிறது.

**10. இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் இணைந்து உருவாகும் கூட்டுப் பெயர்களைப் பட்டியற்படுத்துவோம்.**

1. ...................................
2. ...................................
3. ...................................
4. ...................................
5. ...................................
6. ...................................
7. ...................................
8. ...................................
9. ...................................
10. ...................................

**11. பின்வரும் சொற்களை இணைத்து எழுதி கூட்டுப்பெயர்களை உருவாக்குவோம்.**

1. வான் + ஒலி = ..................................................
2. புகை + படம் = ..................................................
3. விண் + வெளி = ..................................................
4. மின் + கலம் = ..................................................
5. சுடு + காடு = ..................................................
6. தொலை + காட்சி = ..................................................
7. காலம் + நிலை = ..................................................
8. உவமை +அணி = ..................................................
9. கண் +காட்சி = ..................................................
10. சமையல் +அறை = ..................................................

**12. பின்வரும் கூட்டுப் பெயர்களுள் காணப்படும் சொற்களை வேறுபடுத்தி எழுதுவோம்.**

1. மின்கலம் :- ............................................................
2. தினக்குறிப்பு :- ............................................................
3. பாடப்பதிவு :- ............................................................
4. வினாத்தாள் :- ............................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பெயர்ச்சொல் :- ..............................................................
6. வினைச்சொல் :- ..............................................................
7. தமிழ்ச்சங்கம் :- ..............................................................
8. கூட்டுப்பெயர் :- ..............................................................
9. தமிழ்மொழி :- ..............................................................
10. மரப்பலகை :- ..............................................................

**13. கீழே தரப்பட்டுள்ள சொற்தொகுதிகளுள் கூட்டுப்பெயர்களும் ஆக்கப் பெயர்களும் காணப்படுகின்றன. அவற்றை வேறுபடுத்தி அட்டவணைப்படுத்துக.**

பிரபுத்துவம், வைத்தியசாலை, கண்பாணிப்புக் கருவி, விருந்தாளி, விருந்துபசாரம்,, வேலைக்காரன், விளையாட்டுமைதானம், சந்திப்பு, மருந்தகம், அறிவாளி, மருத்துவிச்சி, இசை நிகழ்ச்சி, ஏவுகணை, குணப்பெயர், பொறுமை, கலைத்துவம், தந்திரக்காரன், பயிற்சிப்புத்தகம், முதலாளித்துவம், அறிவிப்புப்பலகை

| | ஆக்கப்பெயர் | கூட்டுப்பெயர் |
|---|---|---|
| 1. | | |
| 2 | | |
| 3 | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. **கீழே தரப்பட்டுள்ள தரவுகளை வாசித்து 30 சொற்களில் பந்தி ஒன்று அமைத்து பொருத்தமான தலைப்பு எழுதுக.**

- பாரதியார் நவீன கவிதையின் முன்னோடி.
- பாரதியாரின் பெற்றோர் -சின்னச்சாமி ஐயர்-இலக்குமி அம்மாள்.
- பாரதியார் பிறந்த இடம் - எட்டயபுரம்.
- சிறுவயதில் கவிதை எழுதும் ஆற்றல் கொண்டவர்.
- இவர் எழுதிய சில கவிதைகள்:- கண்ணன் பாட்டு
  குயில் பாட்டு
  பாப்பாப் பாட்டு.

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

- தமிழ் மிகவும் தொன்மையான மொழி.
- தமிழ் மொழி பேசுவோர் தமிழர்.
- சேர சோழ பாண்டியர் பழமையான தமிழரசர்கள்.
- பாண்டிய மன்னர் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தனர்.
- முதலில் தோன்றிய சங்கம் தலைச்சங்கம்.
- மன்னரும் புலவரும் தமிழின் வளர்ச்சிக்குப் பாடுபட்டனர்.

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

- கல்வி கற்றவருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு.
- கல்வி பேதையை மேதையாக்கும்
- கல்வியின் சிறப்புப் பற்றி திருக்குறள், நாலடியார் போன்ற நூல்கள் கூறுகின்றன.
- ஏழைகளுக்கு சிறந்த மூலதனமாக கல்வி காணப்படுகிறது.
- இப்பிறவியில் கற்ற கல்வி ஏழு பிறப்புக்கும் பயனுடையது.
- கற்றவர்க்கு உரியது பணிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

**15. கீழே தரப்பட்ட விடயங்களைத் துணைக்கொண்ட பந்திகளை எழுதி அவற்றிலிருந்து 150 சொற்கள் கொண்ட கட்டுரை ஒன்றை ஆக்குவோம். பொருத்தமான தலைப்பு எழுதுக.**

பந்தி 1

நமக்கு இனியவர் தாய் தந்தையர்.
இவர்கள் எமது கண்கண்ட தெய்வம்
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை

பந்தி 2

பெற்றோர் பிள்ளைகளின் நலனுக்காக தம்மை அர்ப்பணிக்கின்றனர்.
பிள்ளைகளுக்காக அப்பா உடல் வருத்தி உழைக்கின்றார்.
அம்மா பத்துமாதம் உதிரத்தை உணவாக்கி பாலூட்டி வளர்த்தார்.
தமது நலன்களைத் துறந்து பிள்ளைகளுக்காக வாழுகின்றனர்.
பெற்றோரின் சொல் கேட்டு நடப்பது பிள்ளைகளின் கடமை.
பெற்றோர் பிள்ளைகளின் நலனுக்காகவே அனைத்தையும் செய்கின்றனர்.

பந்தி 3

பெற்றோரை முதியோர் இல்லங்களில் கொண்டுபோய் விடுவது மிகவும் கொடிய செயல்
பிள்ளைகள் பெற்றோர் முதியோரானதும் அவர்களுக்குக் கீழ்ப் படிவதில்லை.
நாமும் பெற்றோராகும் காலத்தில் இதுவே நடக்கும்.
பெற்றோர் நோயுற்றால் சீராகக் கவனிப்பதில்லை.
ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவதில் எப்பயனும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தி 4

முன்னைய காலத்தில் தாய்தந்தையருக்குப் பணிந்து நடந்த பல பெரியார்களைக் காண்கிறோம்.

இராமன் தந்தையின் சொற்கேட்டு அரசாட்சியை விட்டுக் கொடுத்து காட்டுக்குச் சென்றான்.

காந்தியடிகள் தன் தாயின் சொல்லைக் காத்து வாழ்ந்து மகாத்மா ஆனார்.

பந்தி 5 முடிவுரை

தாய் தந்தையரைப் போற்றுவதே மிகப்பெரும் தவம்.
தாய் தந்தையர் செய்த நன்றியை மறப்பது பெரும் பாவம்.
நன்றி மறக்காது பெற்றோரைப் பேணுவது தலையாய கடமை.

........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. ஒரு சின்னஞ் சிறு பூச்சி

ஒரு சின்னஞ்சிறு பூச்சி கதையின் ஆசிரியர் **யோ.பெனடிக்ற் பாலன்** ஆவார்.

யோ.பெனடிக்ற் பாலன் அவர்கள் சிறந்த எழுத்தாளராகவும் உளவியல் விரிவுரையாளராகவும் விளங்கியவர். கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராக எட்டு ஆண்டுகள் கடமையாற்றிப் பின் பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும் பணிபுரிந்தார். இவர் பல சிறுகதைகளையும் நாடகங்களையும் எழுதியுள்ளார். 'நீயொரு பெக்கோ' என்ற இவரது நாடகம் பிரபலமானது. இவர் கல்வி உளவியல், கல்வியியல் சார்ந்து பல நூல்களை எழுதியுள்ளார். இவர் 1939-1997 வரையான காலப்பகுதியில் வாழ்ந்தார்.

* கதாசிரியரே கதையைக் கூறுவதாக எழுதியுள்ளார்.
* சிறு பூச்சி ஒன்று எதிரியிடம் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு கடுமையாக முயற்சிக்கும் தன்மை எடுத்துக் காட்டப்படுகிறது.
* பிறரிடம் அடிமையாக இருக்க விரும்பாத பண்பு பூச்சியின் ஊடாக எடுத்துக் காட்டப்படுகிறது.
* தன் ஆதிக்கத்தில் சிறுபூச்சியை வைத்திருக்க விரும்புவதும் அது மீறிச் சென்றமையால் அதனை அடித்துக் கொல்வதும் மகனூடாக எடுத்துக் காட்டப்படுகிறது.
* மகன் பூச்சியை விட ஆயிரம் மடங்கு பெரியவனாக இருந்தும் அம்பின் உதவியுடன் பூச்சியைக் கொலை செய்கிறான்.
* பூச்சியே சிறு புள்ளியாக இருந்து எதனதும் உதவியின்றி அவனை வெல்ல முயற்சிப்பது சிறப்பானது.
* பூச்சி உயிரோடு இருந்தால் அவன் வரைந்த வட்டத்தை தாண்டி வெளியே வரும். ஆகையால் பூச்சியே வெற்றி பெற்றதாக தந்தை கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பூச்சியின் தோற்றமும் அது தப்பிப்பதற்கு மேற்கொண்ட முயற்சியும்.

    - பப்பாளி விதையளவு உடம்பு.
    - உடல் மட்டும் சிவப்பு நிறம் ஏனைய உறுப்புக்கள் கறுப்பு நிறத்தில் காணப்பட்டன.
    - குண்டூசியின் குண்டுப் பருமன் தலை.
    - கடைக்கண் இமை.
    - மயிர் போன்ற சிறிய கால்கள்.

* வரும்போது மிகுந்த சுறுசுறுப்புடன் வந்த பூச்சி சிறுவன் வரைந்த வட்டத்திலிருந்து வேகமாக வெளியில் வர முயற்சித்தது.

* தும்புத்தடியால் தட்டிவிடும் போதெல்லாம் புரண்டு நெளிந்து மீண்டும் வெளியில் வர முயற்சித்தது.

* சிறிய பூச்சியாயினும் அம்பின் கூர்முனையை கால்களால் கட்டிப்பிடித்து சிறிய வாயால் கடித்தது. பின் திரும்பி வெளியில் ஊர்ந்தது.

* மகனின் பெரிய உருவத்தையும் அம்பின் தோற்றத்தையும் தன் கண்களால் பார்த்த போதிலும் அவற்றைக் கண்டு அச்சமடையாது தன் இலட்சியத்தில் வெற்றி பெற முயற்சித்தது.

* சிறுவன் இட்ட வட்டத்திலிருந்து வெளியே வருவதே பூச்சியின் இலட்சியமாக இருந்தது.

* அம்பினால் அதன் உடலில் குத்திய போதும் அது அரை உயிரோடு வெளி நோக்கித் தன் கால்களை எட்டி வலித்து ஊர முயற்சித்தது.

* சிறு உருவத்தில் சிறிய பூச்சியாயினும் தீட்சண்யமான வைரம் கொண்ட உள்ளம்.

* உருவத்திலும் தசையிலும் அடிமை கொள்ள முடியாத வீறார்ந்த உணர்வு உடையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் செயற்பாடு:–

21. கானல் :- ........................................................................................

........................................................................................................

22. காணல் :- ........................................................................................

........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. யார் சிறந்தவர்?

* யார் சிறந்தவர் என்ற உரையாடலின் ஆசிரியர் திவ்யமணி சிதம்பரநாதன் ஆவார்.

* யார் சிறந்தவர் என்ற உரையாடல் ரோஜா, மல்லிகை, கனகாம்பரம் ஆகிய மலர்களை வைத்து ரோஜா தன்னைப் புகழ்ந்து கூறுவதாகவும் கனகாம்பரம் அதற்கு அறிவுரை கூறுவதாகவும் எழுதப்பட்டுள்ளது.

* உலகில் படைக்கப்பட்டவை யாவும் தனித்துவமுடையவை என்ற கருத்து இவ் உரையாடலில் முன்வைக்கப்படுகிறது.

* நாம் பிறரை ஒரு போதும் இகழ்ந்து பேசுதல் கூடாது என்ற கருத்தும் இவ் உரையாடலில் முன்வைக்கப்படுகிறது.

* மாலைப் பொழுதொன்றில் 'துவாரகை' என்ற வீட்டின் பூந்தோட்டத்தில் பூத்திருக்கும் ரோஜாமலர் மொட்டாக இருக்கும் மல்லிகையைப் பார்த்து ஏளனமாகப் பேசியும் தன்னைப் புகழ்ந்தும் பேசிக் கொண்டிருந்தது.

* ரோஜா தன்னைத் தானே புகழ்ந்து கூறுதல்.

  - செந்நிறம் கொண்டது.
  - மிருதுவான மேனி
  - நறுமணம் மிக்கது.
  - கவிஞர்களால் புகழ்ந்து பாடப்பட்டவள்.
  - துவாரகைஇல்லத்தின் நந்தவன ராஜகுமாரியாக விளங்குகிறது.

* **மல்லிகையின் சிறப்பு:-**

  - தூய்மையான வெள்ளை நிறம் உடையது.
  - பூவாக மலர்ந்ததும் யாவரும் விரும்பும் நறுமணமுடையது.
  - ரோஜா இகழ்ந்து கதைத்த போதும் மௌனமாக இருந்தது.
  - தூய்மையானது, பண்பானது, அடக்கமானது.
  - பூமாலை கட்டி தலையில் சூடுவதற்கு பயன்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*** கனகாம்பரத்தின் சிறப்பு:-**

- உலகில் படைக்கப்பட்ட யாவும் அழகு என்ற எண்ணமுடையது.
- மற்றவர்களை இகழ்ந்து பேசக்கூடாது என்ற எண்ணமுடையது.
- நம்பிக்கைக்குரிய மலராகக் காணப்படுவதனால் வீட்டின் எஜமானி நந்தவனத்தின் நான்கு பக்கங்களிலும் கனகாம்பரத்தை நாட்டி வைத்திருக்கிறாள்.
- புற அழகை விட அக அழகே உண்மை என ரோஜாவிற்கு எடுத்துரைத்தது.

* ரோஜா மலரின் நிலை:-

மறுநாள் காலையில் திருமண நிகழ்விற்காக மல்லிகையில் மாலை தொடுத்து தலைக்குச் சூட பயன்பட்டது. ரோஜா மலர் உதிர்ந்து மண்ணில் கிடந்தது.

*** கட்டுரையில் முன்வைக்கப்படும் விடயம்**

பிறரை இகழ்ந்து பேசுவதும் தற்புகழ்ச்சியும் ஒரு போதும் நன்மை தரமாட்டாது.

## மாணவர் செயற்பாடு:–

**01. பொருத்தமற்ற சொல்லின் கீழ்க்கோடிடுக.**

1. பகலவன், திங்கள், ஞாயிறு, தினகரன்
2. குமாரி, மாதர், மாந்தர், மங்கை
3. தலைக்கனம், செருக்கு, கர்வம், வெகுளி
4. சண்டை, யுத்தம், சமம், சமர்
5. பொழில், அழகு, எழில், வனப்பு
6. சென்னி, கண், விழி, நயனம்
7. கோபம், சினம், நாணம், வெகுளி
8. மாசு, குற்றம், களங்கம், கலக்கம்
9. நந்தவனம், வனம், பூங்கா, பொழில்
10. சிரம், சென்னி, வதனம், தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02. தரப்பட்டுள்ள சொற்களுக்கான எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.**

1. களங்கம் :- ..............................................
2. மேற்கு :- ..............................................
3. நறுமணம் :- ..............................................
4. அழகு :- ..............................................
5. மென்மை :- ..............................................
6. புகழ்ச்சி :- ..............................................

**03. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

1. செந்நிறம் :- ..............................................
2. கொதித்தெழுந்தாள் :- ..............................................
3. உலகிலுள்ளவை :- ..............................................
4. அழகுண்டு :- ..............................................
5. கடற்கன்னி :- ..............................................

**04. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்க.**

1. சின்னஞ்சிறிய :- ..............................................
..............................................
2. களங்கம் :- ..............................................
..............................................
3. உதிர்வு :- ..............................................
..............................................
4. இரசனை :- ..............................................
..............................................
5. வைபவம் :- ..............................................
..............................................
6. பரிதாபம் :- ..............................................
..............................................

**05. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. 'யார் சிறந்தவர்' என்ற உரையாடலில் ஆசிரியர் முன்வைக்கும் அறிவுரை யாது?
..............................................
..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. உரையாடலின் ஆரம்பத்தில் ஆசிரியர் சூழலை எவ்வாறு வர்ணிக்கின்றார்?

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

3. நந்தவனம் அமைந்துள்ள வீட்டின் பெயர் யாது?

.............................................................................................

4. ரோஜாப்பூ மல்லிகையிடம் எவ்வாறு தன்னைப் புகழ்ந்து கூறியது?

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

5. கனகாம்பரம் ரோஜாவிற்கு கூறிய அறிவுகள் 3 எழுதுக.

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

6. மல்லிகை, ரோஜா ஆகிய மலர்களின் இறுதிநிலை எவ்வாறு அமைந்தது?

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

7. நந்தவனத்தின் நாற்புறமும் காணப்படும் மலர் எது? அது நாட்டப்பட்டதன் காரணம் யாது?

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

8. துவாரகை இல்லத்தின் எஜமானி யார்?

.............................................................................................

9. ரோஜாவிற்கு முட்கள் படைக்கப்பட்டதன் காரணம் யாது என கனகாம்பரம் கூறுகிறது?

.............................................................................................

.............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. மல்லிகைப்பூவின் சிறப்புக்கள் எவை?

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

06. 'சிறுவர் மலர்' வெளியீட்டுக்கான அழைப்பிதழ் ஒன்று தயாரிக்க.

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

07. உமது பாடசாலை தமிழ்மன்றத்தினால் நடாத்தப்பெற்ற வாராந்த தமிழ்மன்றத்திற்கான அறிக்கை ஒன்றை செயலாளர் என்றவகையில் சமர்ப்பிக்க.

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. **பின்வரும் பல சொற்களுக்கான ஒரு பொருளை எழுதுக.**

1. ஆவல், ஆர்வம், விருப்பம், வேட்கை :- ........................
2. உடல், மெய், சரீரம், மேனி :- ........................
3. ஞாயிறு, பகலவன், வெய்யோன், பரிதி :- ........................
4. ஆசான், தேசிகன், உபாத்தியாயன் :- ........................
5. மடி, மாய்தல், இறத்தல் :- ........................
6. பழித்தல், நிந்தித்தல், எள்ளல் :- ........................
7. குருதி, செந்நீர், உதிரம் :- ........................
8. சுடர், கதிர், சோதி, வெளிச்சம் :- ........................
9. அறிவு, ஆற்றல், விவேகம், புத்தி :- ........................
10. தாள், கால், பாதம் :- ........................

09. **பின்வரும் பலபொருளுக்கான ஒரு சொல்லை எழுதுக.**

1. சங்கீதம், புகழி, பாட்டிசை :- ....................................
2. அழகு, ஆபரணம் :- ....................................
3. மனம், உள்ளம், வீடு :- ....................................
4. துன்பம், கடல், ஒலி, கலியுகம் :- ....................................
5. எரு, மார்பு, வலிமை :- ....................................
6. சந்திரன், அறிவு, மாதம் :- ....................................
7. பிச்சை, சந்தேகம் :- ....................................
8. கரும்பு, நாணல், மூங்கில், யானை :- ....................................
9. சிரம், பக்கம், மேற்பகுதி :- ....................................
10. வேதம், ஒலி, மந்திரம், இசை :- ....................................

10. **கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களை வாசித்து தன்வினை வாக்கியங்களையும் பிறவினை வாக்கியங்களையும் வேறுபடுத்துக.**

1. அம்மா குழந்தைக்கு உணவு ஊட்டினார்.
2. சேவகன் நீர் அருந்தினான்.
3. அம்மா காலை உணவு உண்டார்.
4. தம்பி போத்தலை உருட்டினான்.
5. நான் தம்பிக்கு செய்யுள் ஒன்றைப் படிப்பித்தேன்.
6. நான் பரீட்சைக்காகப் பல பயிற்சிகள் செய்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. சேவகன் பூச்செடிகளுக்கு நீர் ஊற்றினான்.
8. குழந்தை பந்து விளையாடியது.
9. பூனை நிலத்தில் உருண்டது.

1. ....................................................................................................
2. ....................................................................................................
3. ....................................................................................................
4. ....................................................................................................
5. ....................................................................................................
6. ....................................................................................................
7. ....................................................................................................
8. ....................................................................................................
9. ....................................................................................................
10. ..................................................................................................

**11. பின்வரும் வினைச் சொற்களை தன்வினை வாக்கியங்களாகவும் பிறவினை வாக்கியங்களாகவும் எழுதுக.**

1. அடி

....................................................................................................

....................................................................................................

2. உண்

....................................................................................................

....................................................................................................

3. விதை

....................................................................................................

....................................................................................................

4. செய்

....................................................................................................

....................................................................................................

5. உருள்

....................................................................................................

....................................................................................................

6. விடு

....................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

..............................................................................................................

7. உதை

..............................................................................................................

..............................................................................................................

8. வெட்டு

..............................................................................................................

..............................................................................................................

9. பருகு

..............................................................................................................

..............................................................................................................

10. கரை

..............................................................................................................

..............................................................................................................

**12. பின்வரும் தன்வினைகளைப் பிற வினைகளாகவும் பிறவினைகளைத் தன்வினைகளாகவும் மாற்றி எழுதுக.**

1. திருந்து :- திருத்து
2. பொருந்து :- ....................................
3. விழு :- ....................................
4. இரு :- ....................................
5. குளி :- ....................................
6. உண் :- ....................................
7. சிரி :- ....................................
8. படி :- ....................................
9. செல் :- ....................................
10. உருள் :- ....................................

**13. கீழுள்ள செய்வினை வாக்கியங்களை செயற்பாட்டுவினை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

1. அரசன் கோயில் கட்டினான்.

..............................................................................................................

2. மாலா கதையை உரத்து வாசித்தாள்.

..............................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தம்பி பந்தை வேகமாக உதைத்தான்.

..........................................................................................................

4. விளையாட்டு வீரர்கள் வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றினர்.

..........................................................................................................

5. பரிசளிப்பு விழா பற்றி அதிபர் பிள்ளைகளுக்கு அறிவித்தார்.

..........................................................................................................

6. பொதுமக்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

..........................................................................................................

7. மாணவர்கள் இலக்கிய மன்றத்தை ஒழுங்கமைத்தனர்.

..........................................................................................................

8. விமல் இணையத்தில் பொதுஅறிவு வினாக்களைத் தேடித் தொகுத்தான்.

..........................................................................................................

9. குமரன் நண்பனுக்கு நினைவுப்பரிசில் வழங்கினான்.

..........................................................................................................

10. விழாவின் பிரதம விருந்தினராக கல்வி அமைச்சரை அழைத்தனர்.

..........................................................................................................

14. **கீழுள்ள செயற்பாட்டு வினை வாக்கியங்களை செய்வினை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

1. இராணுவ வீரர்களால் தேடுதல் நடத்தப்பட்டது.

..........................................................................................................

2. வீரர்களால் இரத்ததானம் வழங்கப்பட்டது.

..........................................................................................................

3. ஜனாதிபதியால் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டன.

..........................................................................................................

4. விஞ்ஞானிகளால் விண்வெளி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

..........................................................................................................

5. பழைய மாணவர் சங்கத்தினரால் சிரேஷ்ட ஆசிரியர் கௌரவிக்கப்பட்டார்.

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அதியமானால் ஔவையாருக்கு நெல்லிக்கனி வழங்கப்பட்டது

.....................................................................................................

7. ஔவையாரால் பல நீதிப்பாடல்கள் பாடப்பட்டன.

.....................................................................................................

8. பூனையால் பால் பருகப்பட்டது.

.....................................................................................................

9. திருவள்ளுவரால் திருக்குறள் பாடப்பட்டது.

.....................................................................................................

10. விறகு வெட்டியால் மரம் தறிக்கப்பட்டது.

.....................................................................................................

**15. பின்வரும் வினைச் சொற்களை செய்வினைகளாகவும் செயற்பாட்டு வினைகளாகவும் மாற்றுக.**

1. வெட்டு .....................................................................................
2. பின்னு .....................................................................................
3. ஒட்டு .....................................................................................
4. செய் .....................................................................................
5. மாற்று .....................................................................................
6. விடு .....................................................................................
7. கைது .....................................................................................
8. ஊட்டு .....................................................................................
9. ஊற்று .....................................................................................
10. எழுது .....................................................................................

**16. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. செய்வினை வாக்கியம் ஒன்றில் காணப்படும் வேற்றுமை உருபு எது?

.....................................................................................................

2. செயற்பாட்டு வினை ஒன்றில் காணப்படும் வேற்றுமை உருபு எது?

.....................................................................................................

3. செயற்படுபொருள் குன்றாத வினைகள் ஐந்தினைக் குறிப்பிட்டு அவற்றை செயற்பாட்டு வினைகளாக மாற்றுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம்:- விதைத்தான் விதைக்கப்பட்டது.

1. .......................................................................................

2. .......................................................................................

3. .......................................................................................

4. .......................................................................................

5. .......................................................................................

17. பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| வினைச்சொல் | செய்வினை | செயற்பாட்டுவினை |
|---|---|---|
| 1. வரை | ........................ | .................................. |
| 2. விடு | ........................ | .................................. |
| 3. பேசு | ........................ | .................................. |
| 4. எழு | ........................ | .................................. |
| 5. பாடு | ........................ | .................................. |

18. உமது பாடசாலையின் தமிழ் இலக்கியமன்ற வெளியீடான செந்தமிழ் சஞ்சிகைக்கான அழைப்பிதழ் ஒன்று தயாரிக்க. வெளியீட்டு விழா நடைபெறும் தினம், இடம், நேரம் விழாவின் பிரதம விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர். வெளியீட்டு விழாவில் இடம்பெறும் நிகழ்வுகள் பற்றிய விபரம் முதற்பிரதி பெறுபவர் விபரம் முதலானவற்றை உள்ளடக்கியதாக அழைப்பிதழ் அமைந்திருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. மலைநாட்டுப் பிரயாணம்

* மலைநாட்டுப் பிரயாணம் கட்டுரையின் ஆசிரியர் பொன். முத்துக்குமாரன் ஆவார்.

* தமிழ் மரபு என்ற நூலில் இக்கட்டுரை இடம்பெற்றுள்ளது.

* இக்கட்டுரையைத் தன் சுய அனுபவமாக ஆசிரியர் எழுதியுள்ளமை சிறப்பானது.

* மலைநாட்டிற்கு பயணம் செய்த அயல் நாட்டைச்சேர்ந்த இந்தியரின் பயண அனுபவமாக இக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

* தன் நண்பர்கள் ஐவருடன் கண்டி அட்டன் மஸ்கெலியா சிவனொளிபாதமலை என்பவற்றை சுற்றிப் பார்த்த அனுபவத்தினை பகிர்ந்துள்ளார்.

* இலங்கையின் வரலாற்றுச்சிறப்பு, இயற்கை, அழகு, மக்களின் சமத்துவத்தன்மை என்பன பற்றி கட்டுரையாசிரியர் கூறியள்ளமையை நோக்கலாம்.

**இலங்கையின் சிறப்பு**

* இந்துமா கடலின் முத்துப் போலவும் பசுமையான பொற் குன்று போலவும் விளங்குவது.

* அழகிய ஆறுகள், நீர் தேங்கி நிற்கும் குளங்கள், பசுமையான சோலைகள், விளைநிலங்கள், தேயிலை, இறப்பர்த் தோட்டங்கள் என்பவற்றைக் கொண்டது.

* மா, வாழைக்கனிகள் மிகுந்து காணப்படுவது.

* இவை நிலங்களில் வீழ்ந்து காணப்படுவதை சீவக சிந்தாமணியில் திருத்தக்கதேவர் பாடிய ஏமாங்கத நாட்டின் சிறப்புடன் ஒப்பிட்டுப் பாடுகின்றார்.

* எல்லா மதமக்களும் வழிபடும் சிவனொளிபாதமலையை தத்தமது வழிபாட்டுமுறைகளில் வழிபடும் சிறப்புப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மூவினமக்களும் ஒற்றுமையுடன் வாழும் சிறப்புப் பெற்றது.

**சிவனொளிபாதமலையின் வழிபாடு பற்றிய அனுபவப் பகிர்வு**

* சிவனொளிபாதமலையைச் சூழவும் அடர்ந்த காடும் அதனூடாக சீதளகங்கையும் சிற்றாறுகளும் ஓடிக் கொண்டிருந்தது.
* யானைகளின் பிளிறலொலியும் காட்டிலுள்ள ஏனைய விலங்குகளின் ஒலிகளும் இவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்திய போதிலும் சக பயணிகளுடன் இணைந்து மகிழ்ச்சியுடன் பயணம் செய்தனர்.
* சில மைல் தூரம் சமதரையில் நடந்தும் சாய்வான பகுதியில் படிக்கட்டுக்களில் ஏறியும் வளைந்து வளைந்து செல்லும் பாதையூடாக பயணம் செய்தனர்.
* மலையுச்சியில் முடி போன்ற ஒரு கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.
* ஏறக்குறைய நூற்றைம்பது பேரைக் கொள்ளக் கூடிய மிகவும் சிறிய கோபுரம் உள்ளது.
* அங்கு இரண்டு திருவடிச் சுவடுகள் காணப்படுகின்றன.
* அதனை சைவமக்கள் சிவபெருமானுடையவை எனவும் கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் ஆதாம் என்ற ஆதிபிதாவின் பாதங்கள் என்றும் பௌத்தர்கள் புத்த பிரானுடையவை என்றும் போற்றி வழிபடுகின்றனர்.
* சிங்களச் சகோதரர்கள் நேர்த்திக் கடன் செய்வதற்கும் புத்தபெருமானின் பாதங்களை வணங்குவதற்கும் 'சாதுசாது' எனக் கூறியவாறு பக்தியுடன் சென்றனர்.
* பௌத்தமக்கள் அத்திருவடியின் மேல் வெண்ணிறத்துணி பரப்பி தமது காணிக்கைப் பொருட்களை வைத்து வழிபட்டனர்.
* இந்துக்கள் அரோகரா சொல்லியும் கர்ப்பூரம் கொளுத்தி சிவபராணம் ஓதி வழிபட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கிறிஸ்தவர்கள் மெழுகுவர்த்தி கொழுத்தி செபம் செய்து வழிபட்டார்கள்.

**மலையுச்சியில் காலைப் பொழுதின் அழகு**

* கீழ்த்திசையில் தோன்றிய ஒளிக்கதிர் ஏழு நிறக் கதிர்களைப் பரப்பியது.
* இதனால் படர்ந்த குன்றின் பல இடங்கள் பொன்னும் வெள்ளியும் உருக்கி வார்த்ததைப் போல அழகுடன் தோன்றியது.
* சூரியன் குன்றின் அடிவாரத்தில் இருந்து குதித்து அசைந்து எழுந்தது போன்று காட்சியளித்தது.

**மலையிலிருந்து திரும்புதல்**

* காலையில் மலைக்கு ஏறியதை விடவும் மாலை வேளை மலையிலிருந்து இறங்கும் போது இயற்கையின் அழகை ரசிக்கக் கூடியதாக இருந்தது.
* மோட்டார் வண்டியில் ஏறி அட்டனுக்குப் புறப்பட்டுச் சென்று அங்கும் பல இடங்களைப் பார்த்து மகிழ்ந்து நண்பர்களுடன் வீடு திரும்பினார்.
* சுற்றுப்பிரயாணத்தினால் மனம் அமைதி பெற்றதுடன் பல மக்களையும் கண்டு பழகியறியும் வாய்ப்பும் கிடைத்தது.
* இலங்கை வளத்தையும் மலையுச்சியில் பெற்ற சுகத்தையும் பிறருடன் பகிர முடிந்தது.

**பயண அனுபவக் கட்டுரையில் ஆசிரியர் கூற விளையும் ஏனைய விடயங்கள்**

* பயணக் கட்டுரையில் மக்கள் வாழும் முறையினை மாற்ற வேண்டும் என்ற கருத்து முன்வைப்பதனை அவதானிக்க முடிகின்றது.
* பாற்கடலில் உள்ள மீன்கள் பாலைப் பருகாது வேறு உணவுகளைத் தேடுவது போல மனிதர்களும் நாட்டின் அழகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரசித்து வாழப் பழகாது சாதி சமயச் சடங்குகளுக்குள் மூழ்கி வாழுகின்றனர் எனக் குறிப்பிடுகின்றார்.

* இயற்கையை ரசித்தும் பலருடன் நட்புடன் பழகவும் பல விடயங்களைப் பகிரவும் எம்மை மாற்றவேண்டும்.

* இலங்கை நாட்டின் அழகை ஏமாங்கத நாட்டின் இயற்கை அழகின் ஊடாக கூறியுள்ளமை சிறப்பானது.

**காய் மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகின் நெற்றிப்**
**பூ மாண்ட தீந்தேன் தொடை கீறி வருக்கைபோழ்ந்து**
**தே மாங்கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்தும்**
**ஏமாங்கத மென் றிசையால் திசை போயதுண்டே**

**பொருள்:-**

நன்றாகப் பழுத்து முற்றிய தேங்காய் கீழே விழும் வேகத்தில் பாக்கு மரத்தின் உச்சியில் உள்ள தேன் போன்ற இனியசுவை மிக்க நீரையுடைய குலை கிழிய அதனால் தேனடை பிய்ந்து தேன் வழிந்தது. பின் பலாப்பழங்கள் சிதறி விழுந்தன. பின் மாம்பழங்கள் சிதறி வீழ்ந்தன. வாழைப்பழங்களும் சிதறி வீழ்ந்தன. இத்தகைய வளமுடைய ஏமாங்கத மென்னும் நாட்டின் புகழ் எட்டுத் திக்குகளிலும் பரவியிருந்தது.

## மாணவர் செயற்பாடு:-

**01. பொருத்தமான சொற்களை எழுதி இடைவெளிகளைப் பூரணப்படுத்துக.**

(இறப்பர், சிவபுராணம், மனம் அமைதி, நேர்த்திக் கடன்களை, பொன்.முத்துக்குமரன், திருத்தக்கதேவர், தேயிலை, மலை நாட்டுக்கு,பலருடன், சீதளகங்கை, ஏமாங்கத, சர்வமதமக்கள்)

1. நண்பர்கள் .......................... தமது பிரயாணத்தை மேற்கொண்டனர்.
2. மலை நாட்டை .......................... என்பன அழகு செய்தன.
3. 'பூமாண்டதெங்கின் பழம் வீழ' என்ற பாடலை ................. பாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் பொது நூலகம்
நல்லூர் பிரதேசசபை

4. சிவனொளிபாதமலைக்குச் செல்லும் வழியில் ............... கங்கை ஓடிக் கொண்டிருந்தது.
5. சிவனொளிபாத மலையில் ........................ வழிபாடுகளை மேற்கொள்வர்.
6. மலைநாட்டை........................ நாட்டுடன் ஒப்பிட்டு கட்டுரையாசிரியர் சிறப்பித்துள்ளார்.
7. சுற்றுப் பிரயாணத்தால் ........................ பெற்றதுடன் ............................ வாய்ப்பும் கிடைத்தது.
8. மலைநாட்டுப் பிரயாணம் கட்டுரையின் ஆசிரியர் ............................... ஆவார்.
9. சுற்றுலா சென்ற நண்பர்கள் சிவனொளிபாதமலையில் .................................. ஓதி வழிபட்டார்கள்.
10. சிவனொளிபாதமலையில் மக்கள் தமது................................ நிறைவேற்றுவது வழக்கமாக இருந்தது.

## 02. பொருத்தமானவற்றுடன் இணைக்க.

| | |
|---|---|
| 1. சீவகசிந்தாமணி | இந்துக்கள் |
| 2. சிவபுராணம் | கிறிஸ்தவர்கள் |
| 3. செபம் செய்தல் | திருத்தக்கதேவர் |
| 4. திருவடிச்சுவடுகள் | ஆதிபிதா |
| 5. ஆதாம் | சிவனொளிபாதமலை |

## 03. பின்வரும் சொற்களை வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமைக்க.

01. பங்கயம் :- ..................................................................
..................................................................................................
02. மடங்கள் :- ..................................................................
..................................................................................................
03. கொழுந்து :- ..................................................................
..................................................................................................
04. சடங்கு :- ..................................................................
..................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. ஏழுநிறக்கதிர்கள் :- ..........................................................

.......................................................................................................

06. ஆரவாரம் :- ..........................................................

.......................................................................................................

**04. கீழேதரப்பட்டுள்ள சொற்களைப் பிரித்து எழுதுக.**

1. மலையுச்சி :- ..........................................................
2. இயற்கையழகு :- ..........................................................
3. பொற்குடம் :- ..........................................................
4. பாற்குடம் :- ..........................................................
5. கீழிறங்கினோம் :- ..........................................................
6. வண்டியிலேறி :- ..........................................................
7. திட்டமிட்டபடி :- ..........................................................
8. பகற்காலம் :- ..........................................................
9. என்னுள்ளத்தில் :- ..........................................................
10. புனைந்துரையாது :- ..........................................................

**05. மலைநாட்டுப் பிரயாணம் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சுற்றுலாவுக்கு சென்ற நண்பர்கள் எங்கிருந்து தமது பயணத்தை ஆரம்பித்தார்கள்?

   .......................................................................................................

2. இலங்கை, மலைநாட்டின் சிறப்புக்களை எழுதுக.

   .......................................................................................................

   .......................................................................................................

   .......................................................................................................

   .......................................................................................................

3. மலையகத்தில் பயிரிடப்படும் பயிர்கள் எவை?

   .......................................................................................................

4. சகலமத மக்களும் வழிபாடு மேற்கொள்ளும் இடம் எது?

   .......................................................................................................

5. இங்கு மேற்கொள்ளப்பட்ட வழிபாடுகள் பற்றி எழுதுக.

   .......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

6. பாற்கடலிலுள்ள மீன்கள் இனிய பாலைப் பருகாது வேறு உணவுகளைத் தேடி உண்பது போல நாமும் நாட்டின் அழகையும் வளத்தையும் கண்டு மகிழ்ந்து வாழ அறியாது வாழ்கிறோம். பாத பங்கயங்களை பௌத்தர்கள் வழிபட்டனர். மேலே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இடம்பெற்றுள்ள அணிகளை இனங்கண்டு விளக்கி எழுதுக.

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

7. சிவனொளிபாதமலையின் இயற்கைச் சூழல் பற்றி எழுதுக.

.....................................................................................................

.....................................................................................................

8. கட்டுரையாசிரியர் காலைக்காட்சியை எவ்வாறு வர்ணிக்கின்றார்?

.....................................................................................................

.....................................................................................................

**06. கீழே தரப்பட்டுள்ள கூட்டு வினையாலான வாக்கியங்களைத் தனி வினைகளாக மாற்றி எழுதுக.**

1. மோப்ப நாய் திருடனைக் காட்டிக்கொடுத்தது.

.....................................................................................................

2. தன் நண்பனுக்காக தம்பி விட்டுக்கொடுத்தான்.

.....................................................................................................

3. அப்பாவி வயோதிபரை இளைஞன் தள்ளி விழுத்தினான்.

.....................................................................................................

4. புயற்காற்றால் மரம் முறிந்துவிழுந்தது.

.....................................................................................................

5. பல புதிய விடயங்களை விமல் வாசித்தறிந்தான்.

.....................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. நான் நேற்று ஒரு புதிய விடயத்தைக் கண்டுபிடித்தேன்.

.......................................................................................................

**07. பின்வரும் வினைச் சொற்களை அவதானித்து தனிவினை, கூட்டுவினைகளாக வேறுபடுத்தி எழுதுக.**

செய்துபார்த்தான், ஓடினாள், திருத்தம்செய், சமைத்துத் தந்தனர், திருத்து, கதைத்துப்பார்த்தார், விளையாடினான், சொன்னார், பிடித்துப்பார், சமைத்தனர்.

| தனி வினை | கூட்டு வினை |
|---|---|
| 1. .................................... | .......................................... |
| 2. .................................... | .......................................... |
| 3. .................................... | .......................................... |
| 4. .................................... | .......................................... |
| 5. .................................... | .......................................... |

**08. பின்வரும் சொற்களை வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமைக்க.**

01. அழி .......................................................................................
02. அலி .......................................................................................
03. அளி .......................................................................................
04. வலி .......................................................................................
05. வளி .......................................................................................
06. வழி .......................................................................................
07. பலி .......................................................................................
08. பழி .......................................................................................
09. விழி .......................................................................................
10. விளி .......................................................................................
11. ஒளி .......................................................................................
12. ஒலி .......................................................................................
13. ஒழி .......................................................................................
14. மலை .......................................................................................
15. மழை .......................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. வளை ..........................................................................................
17. வலை ..........................................................................................
18. பாளம் ..........................................................................................
19. பாலம் ..........................................................................................
20. விலக்கு ..........................................................................................
21. விளக்கு ..........................................................................................
22. விலங்கு ..........................................................................................
23. விளங்கு ..........................................................................................

**09. மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. தாய்க்குருவி குஞ்சுகளுக்கு ........ தேடிச்சென்றது. (இரை,இறை)
2. விவசாயி தோட்டத்தில் நீர் ..................... (இரைத்தார், இறைத்தார்)
3. ஆடையில் ..................... பட்டதால் விமல் அழுதான். (கறை,கரை)
4. கப்பல் ................ சேராததால் மாலுமி அச்சமடைந்தான். (கறை,கரை)
5. சலசல என்பது ..................... (இரட்டைக்கிழவி, இரட்டைக்கிளவி) ஆகும்.
6. வயதான மூதாட்டியை ............... (கிளவி,கிழவி) என அழைப்போம்.
7. சுற்றுலாப் பயணிகளுக்குக் ................(குளவி,குழவி) கொட்டியது.
8. ................ (குளவி, குழவி) குடுகுடுவென நடந்து வந்தது.
9. தாத்தாவின் உடல் முதுமையால் ............. (தழர்ந்தது, தளர்ந்தது)
10. சுனாமி பற்றிய அதிர்ச்சித் தகவலால் மக்கள் நிலை ........................... (குலைந்தனர், குழைந்தனர்).

**10. பாடசாலை விடுமுறைக் காலத்தில் நீங்கள் மேற்கொண்ட சுற்றுலா பற்றிக் கட்டுரை எழுதுக.**


..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. இனியவை கூறல்



* இனியவை கூறல் அதிகாரம் திருக்குறளில் பத்தாம் அதிகாரமாக வைக்கப்பட்டுள்ளது.

* திருக்குறள் தமிழில் எழுந்த நீதிநூல்களுள் மிகவும் சிறப்பு வாய்ந்தது.

* திருக்குறளைப் பாடியவர் திருவள்ளுவர்.

* திருக்குறள் பொய்யாமொழி, தமிழ்மறை என்ற பெயர்களாலும் அழைக்கப்பபடுகிறது.

* திருவள்ளுவரும் தெய்வப் புலவர், பொய்யாமொழிப் புலவர் போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறார்.

* திருக்குறளானது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் 3 பெரும் பிரிவுகளைக் கொண்டமைந்தது.

* இந்நூலில் 1330 குறட்பாக்களும் 133 அதிகாரங்களும் உள்ளன.

* இது ஈரடிக்குறள் வெண்பாவால் பாடப்பட்டுள்ளது.

* கடவுள்வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார்பெருமை, அறன்வலியுறுத்தல் என்பன பாயிரத்தினுள் உள்ளடக்கப்படுகின்றன.

* இனியவைகூறல் அறத்துப்பாலின் இல்லறவியலில் இடம்பெறுகிறது.

* நாம் ஒவ்வொருவரும் பிறரின் உள்ளத்தைப் புண்படுத்தாதவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமைதரும் சொற்களால் பேசவேண்டும் என்பதையே வள்ளுவர் இவ் அதிகாரத்தில் வலியுறுத்துகிறார்.

* இன்சொல் என்பது யாது, இன்சொல்லின் சிறப்பு, இன்சொல் பேசுவதன் நன்மை (பயன்), இன்சொற்களை விடுத்து வன்சொற்களைப் பேசுவதன் நிலை போன்றவற்றை விளக்குகிறார்.

* அறத்தை உணர்ந்தவர்களின் வாய்ச் சொற்களே இனிய சொற்கள் ஆகும்

* முகமலர்ச்சியுடன் கூறும் இன் சொல்லின் சிறப்பானது, மனம் விரும்பிக் கொடுக்கும் கொடையை விடவும் சிறந்ததாகக் காணப்படும்.

* இன்சொற்களைப் பேசுவதால், எமக்குப் பல நன்மைகள் கிடைக்கின்றன.

  - இன்சொல் பேசுபவர்களுக்கு மனம் எப்போதும் மகிழ்ச்சியாகவே இருக்கும். ஆகையால் துன்பத்தில் வருந்தமாட்டார்கள்.
  - இன்சொல் ஒருவருக்கு சிறந்த அணிகலனாகவும் விளங்குகின்றது.
  - இன்சொற்களை ஒருவர் பேசுவாரானால் அவருக்கு பாவம் தேய்ந்து புண்ணியம் கிடைக்கும்.
  - இன்சொற்கள் நீதியையும், தர்மத்தையும் தரும்.
  - பிறர்மனதைத் துன்புறுத்தாத இன்சொற்கள் இவ்வுலகிலும் மறு உலகிலும் இன்பத்தையே தருவன.

* வன்சொற்களால் எத்தகைய பயனும் கிடைக்கமாட்டாது.

* இன்சொற்கள் இருக்க வன்சொற்களைப் பேசுவது இனிய சுவையுடைய கனிகள் இருக்க காயை உண்பது போன்றதாகும்.

* **உவமை அணி:-**

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனி இருப்பக் காய் கவர்ந் தற்று"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய சொற்களை கனிகளுக்கும், வன்சொற்களை காய்க்கும் ஒப்பிடுகின்றார் வள்ளுவர். இன்சொற்கள் கனிகளைப் போல் இனிமை தரும். வன்சொற்கள் காயைப் போல கசப்புடன் காணப்படும்.

| உவமை அணி 1 | | உவமை அணி 2 | |
|---|---|---|---|
| உவமானம் | :- கனி | உவமானம் | :- காய் |
| உவமேயம் | :- இன்சொல் | உவமேயம் | :- வன்சொல் |
| பொதுத்தன்மை | :- இனிமை | பொதுத்தன்மை | :- கசப்பு |

## சொற்பொருள்

1. அகன் - அகம் / மனம்
2. ஈதல் - கொடை
3. முகன் - முகம்
4. அகத்தான் - உள்ளத்தால்
5. அறம் - தர்மம்
6. துவ்வாமை - வறுமை
7. அணி - அணிகலன், ஆபரணம்
8. மறுமை - மறுவுலகம்
9. இம்மை - இவ்வுலகம்
10. இன்சொல் - இனிமைதரும் சொல்
11. வன்சொல் - கடுஞ்சொல்
12. கனி - பழம்

## மாணவர் செயற்பாடு:-

01. பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக.

1. நீதிநூல்களுள் ......................... ஒன்றாகும்.
2. திருக்குறள் ......................... ஆல் பாடப்பட்டது.
3. நாம் ......................... எப்போதும் பேசவேண்டும்.
4. வன்சொற்களைப் பேசுவது ............ உண்பது போன்றதாகும்.
5. இன்சொல் என்பது ......................... ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02 பொருத்தமான சொற்களுக்குரிய எழுத்துக்களை எழுதுங்கள்.

| அ | | ஆ |
|---|---|---|
| 1. திருக்குறள் | | அ. 133 |
| 2. திருவள்ளுவர் | | ஆ. அறத்துப்பால் |
| 3. அதிகாரம் | | இ. 1330 |
| 4. குறட்பா | | ஈ. பொய்யாமொழி |
| 5. இனியவை கூறல் | | உ. பொய்யாமொழிப் புலவர் |

03. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

1. இனியவை கூறல் அதிகாரம் இடம்பெறும் நூல் எது?

.....................................................................................................

2. இன்சொல் கூறல் என்றால் என்ன என வள்ளுவர் கூறுகிறார்?

.....................................................................................................

.....................................................................................................

3. இன்சொல் கூறுவதால் உண்டாகும் பயன்கள் 5 தருக.

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

4. ஒருவருக்குரிய சிறந்த அணிகலன் எது என வள்ளுவர் குறிப்பிடுகிறார்?

.....................................................................................................

5. இன்சொற்கள் இருக்க வன்சொற்கள் கூறுவதை வள்ளுவர் எதற்கு ஒப்பிடுகிறார்?

.....................................................................................................

04. தரப்பட்ட குறட்பாக்களைப் பூரணப்படுத்துக.

1. இன்சொலால் ஈரம் .......................................................

.....................................................................................................

2. பணிவு உடையன் இன்சொலன் ..................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

..............................................................................................

3. ..........................................................................................

பண்பின் தலைப்பிரியாச் சொல்.

4. இன் சொல் இனிது ..........................................................

..............................................................................................

5. இனிய உளவாக ..................................................................

..............................................................................................

## 05. பின்வருவனவற்றைப் பிரித்து எழுதுங்கள்

1. இன்சொல் :- ............................................
2. சிறுமையுள் :- ............................................
3. வன்சொல் வழங்குவது :- ............................................
4. காய் கவர்ந்தற்று :- ............................................
5. முகனமர்ந்து :- ............................................

## 06. பின்வரும் பெயர்தொடர்களுக்குப் பொருத்தமான பெயரடைகளை எழுதுக.

1. காகம் :- ......................................
2. மாணவன் :- ......................................
3. பாம்பு :- ......................................
4. தொலைபேசி :- ......................................
5. பூங்கா :- ......................................

## 07. பின்வரும் வினைத்தொடர்களுக்குப் பொருத்தமான வினையடைகளை எழுதுக.

1. பாய்ந்தது :- ..........................................
2. குத்தியது :- ..........................................
3. வீசியது :- ..........................................
4. ஓடினேன் :- ..........................................
5. எழுதினார் :- ..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களின் பெயர் வினைத் தொடர்களுக்குப் பொருத்தமான அடைகளை எழுதி வாக்கியங்களை மீண்டும் எழுதுக.**

1. குழந்தை வளர்ந்தது

........................................................................................................

2. கன்றுக்குட்டி ஓடியது.

........................................................................................................

3. விமானம் பறந்தது

........................................................................................................

4. குப்பைகளை அகற்றினர்.

........................................................................................................

5. லதா கட்டுரைகளை தட்டச்சு செய்தாள்.

........................................................................................................

6. சிறுமி வரவேற்பு நடனமாடினாள். .

........................................................................................................

7. பாட்டி குழந்தைகளுக்குக் கதை கூறினார்.

........................................................................................................

**10. பொருத்தமான மரபுப் பெயர்களுடன் இணைக்க.**

| | |
|---|---|
| 1. ஆமணக்கு | கூந்தல் |
| 2. வெங்காயம் | மாலுமி |
| 3. கடுகு | மடல் |
| 4. கமுகு | வலவன் |
| 5. கப்பலோட்டுபவன் | குரும்பை |
| 6. தென்னை | மணி |
| 7. தாழை | முத்து |
| 8. விமான ஓட்டி | தாள் |

**09. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.**

1. மிகப்பெரிய புத்தகத்தை ஆசிரியர் சிரத்தையுடன் வாசித்தார்.
2. பென்னம்பெரிய மூட்டையுடன் திருடன் வேகமாக ஓடினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சின்னஞ்சிறிய எறும்பு யானையின் தும்பிக்கைக்குள் புகுந்து மிகுந்த துன்பத்தை அளித்தது.
4. அழகழகான பூக்கள் தோட்டத்தை அழகுபடுத்தின.
5. அறுசுவை உணவை தம்பி ருசித்து ருசித்துச் சாப்பிட்டான்.

| பெயரடை | பெயர்ச்சொல் | வினையடை | வினைச்சொல் |
|---|---|---|---|
| 1. .................... | ........................... | ........................... | ........................... |
| 2. .................... | ........................... | ........................... | ........................... |
| 3. .................... | ........................... | ........................... | ........................... |
| 4 .................... | ........................... | ........................... | ........................... |
| 5.................... | ........................... | ........................... | ........................... |

**11. கோடிட்ட இடங்களில் பொருத்தமான விடைகளை எழுதுக.**

1. தென்னையின் பிஞ்சு ......................... அதுபோல் தென்னையின் இலை ...........................
2. பனையின் பிஞ்சு ................. அதுபோல் பனையின் இளையது ..............................
3. ஆயன் பசுவை மேய்த்தான் அது போல் ......................... ஆடு மேய்த்தான்.
4. .................................. தான் செலுத்தி வந்த விமானத்தை ஓடுபாதையில் நிறுத்தினான்.
5. மீகாமன் ........................... கடற்கரையை நோக்கிச் செலுத்தினான்.
6. மாம்பழம் ...................... ஆக இருக்கும்போதே புழு உட்சென்றது.
7. அப்பா தோட்டத்தில் விதைப்பதற்கு கத்தரி ................ வாங்கி வந்தார்.
8. தென்னையின் ...................... முற்றி தேங்காயாகிறது.
9. வாழையின் பிஞ்சு ........................ எனப்படும்.
10. மூசு ............................ இன் பிஞ்சுக்குரிய பெயராகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. திருக்குறளின் சிறப்புப் பற்றி வெளியூரில் வசிக்கும் உமது நண்பருக்கு 75 சொற்களில் கடிதம் எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ௯. வியக்கும் மனம் வேண்டும்



வியக்கும் மனம் வேண்டும் என்ற கட்டுரையின் ஆசிரியர் **வல்லிக்கண்ணன்** ஆவார்.

வல்லிக்கண்ணனின் இயற்பெயர் ரா.சு.கிருஷ்ணசாமி. இவர் 1920 ஆம் ஆண்டு நவம்பர் 12இல் ரா.மு.சுப்பிரமணியபிள்ளை - மகமாயி அம்மாளுக்கு மகனாகப் பிறந்தார்.

எழுத்துப்பணி மீதான ஈடுபாட்டினால் அரசுபணியிலிருந்து விலகியவர். சிறுகதை, நாவல், குறுநாவல், கட்டுரை போன்ற பல்துறை சார்ந்த நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவரது சிறுகதைகள் பல ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கப்பட்டதுடன் பெரிய மனுஷி எனும் சிறுகதை அனைத்து இந்திய மொழிகளிலும் வெளிவந்துள்ளது.

இவர் எழுதி வெளியிட்ட நூல்களாக, கல்யாணி முதலிய சிறுகதைகள், நாட்டியக்காரி, உவமைநயம், குஞ்சலாடு, பாரதிதாசனின் உவமை நயம், மத்தாப்பு சுந்தரி, விடியுமா?, ஒப்பாரி, கடலில் நடந்தது சகுந்தலா என நீண்ட பட்டியல் உள்ளது.

* வியக்கும் மனம் வேண்டும் என்ற கட்டுரையில் கட்டுரையாசிரியர் இயற்கையின்பால் நமது மனதை ஈடுபடச் செய்து, இயற்கையின் அழகை ரசிக்கப்பழக வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

* இரவின் இயற்கை அழகை இன்றைய இளம் தலைமுறையினர் இரசித்து மகிழாது செயற்கை ஒளியில் வாழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நகர்ப்புற வீதிகள் மின் விளக்குகளால் பகலாக மாறி இரவின் அழகை இல்லாது செய்துவிட்டன.
* மின் விளக்குகள் யாவும் மின்சக்தி செயலற்றுப் போனமையால் அணைந்துவிட, நிலவின் ஒளி அழகுடன் காட்சி கொடுப்பதை கட்டுரையாசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.
* அறையில் படித்துக் கொண்டிருந்த ஒருவர், வெளிப்புறம் வந்து நிலா ஒளியை அற்புதமாகப் படிந்து கிடப்பதை வியந்து பார்த்து இரசிக்கிறார்.
* அவர் பார்த்து வியந்த அழகிய இராப்பொழுதை யாவரும் இரசிக்குப்படி கூறுகிறார்.
* தனி அழகுடன் குளுமையான சூழல், கட்டிடங்களும் மரங்களும் ஏனையவும் மோகன அழகுடன் காட்சியளித்தன.
* செயற்கை ஒளிப்பெருக்கு இயற்கையின் அழகை மறைத்திருந்தது.
* ஒளி நிறைந்திருப்பது மட்டும் அழகு அல்ல. இருளும் வசீகரமானது.
* 'இருட்டு குறைவான வெளிச்சம்' என மகாகவி கூறியுள்ளார்.
* இரவு மோகனமானது. இரவிலும் ஒளி செய்கிற அற்புதங்கள்.
* வானத்தின் வெள்ளிகள், குளுமையான நிலவு வெளிச்சமே வெளிச்சத்துக்குப் பகையாகிறது. காரணம் செயற்கை மின் விளக்குகள் இருளில் கிடைக்கும் இயற்கையான நிலவின் ஒளியை மறைத்து விடுகின்றன.
* மின் விளக்குகளைப் பார்த்து பழகிய மக்கள் நிலாவை, விண்மீன்களை வானத்தின் அழகைப் பார்த்து ரசிக்கத் தவறிவிடுகிறார்கள்.
* கிராமப்புறங்களிலும் மின்சார ஒளி இல்லையாயினும் முன்னைய காலங்களைப் போன்று நிலாவின் இனிமையை இரசித்து அனுபவிப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம்- வாழ்க்கை பரபரப்பும் பிரச்சனைகளும் கவனங்களும் அதிகரித்தமையே ஆகும்.

✳ முன்னைய கால மக்கள் நிலாவின் வெளிச்சத்தில் மகிழ்வுடன் இருந்தார்கள்.

- நிலாவின் வெளிச்சத்தில் அமர்ந்து கதைகள் பேசி உணவு உண்டு மகிழ்ந்தார்கள்.
- இளம் பெண்களும் சிறார்களும் விளையாட்டுக்கள் விளையாடி மகிழ்ந்தனர்.

✳ தற்கால மக்களின் நிலை.

- நிலாவில் விளையாடிய விளையாட்டுக்கள் மறக்கப்பட்டுவிட்டன.
- சிறுவர்களுக்குக் கதை கூறி மகிழ்ச்சிப்படுத்துவதற்கு பெரியவர்களுக்கு நேரம் இல்லை.பொறுமை இல்லை.
- சுவையாகக் கதை கூறும் ஆற்றல் இன்மை.
- வானத்தைப் பார்த்து நட்சத்திரங்களையும் சந்திரனையும் கண்டு மகிழ வசதி இன்மை.
- சூரிய அஸ்தமனம், சூரிய உதயம் என்பவற்றைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையோ, அதற்கான வாய்ப்போ இல்லை.
- செம்பட்டுச் சல்லடம் சொகுசாக உடுத்தி எழிலாகக் கிழக்கில் சிரித்து வரும் உஷை பற்றிய கவிஞனின் வர்ணனையை தற்கால மக்கள் பிதற்றல் என எண்ணுவர்.
- அந்திவானில் உமை கவிதை செய்து கொண்டிருக்கிறாள் என்ற கவிக்கூற்றும் புரியாததாக இருக்கும்.
- வைகறை வேளையின் ஒளி மலர்ச்சிகளையும் அந்திவேளையின் வர்ணமய வானத்து விந்தைகளையும் கண்டு வியப்பதில்லை.
- தொலைக்காட்சிப்பெட்டியின் முன் அமர்ந்து அநாகரிக நிகழ்வுகளைப் பார்ப்பதில் ஆர்வமாக இருக்கிறார்கள்.

✳. கட்டுரையாசிரியர் முன்வைக்கும் கருத்து:-

- தற்கால மனிதர்களுக்கு இயற்கையின் வனப்பையும் வசீகரத்தையும் காணவேண்டும் என்ற எண்ணம் உருவாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செயற்கைச் சாதனங்கள் பயனுள்ளவை. வலிமை மிகுந்தனவாயினும் இயற்கை சக்திகள் அவற்றை விடவும் வலுவானவை. வனப்பு மிகுந்தவை. அவற்றை ரசிக்கவும் பயன்படுத்தவும் மகிழவும் கூடிய மனதைப் பெறவேண்டும்.

### சொற்பொருள்

| | | |
|---|---|---|
| 1. | வெளிச்சமயம் | - வெளிச்சம் மிகுதியாக இருத்தல் |
| 2. | சந்து பொந்து | - மிகச் சிறிய இடங்கள் |
| 3. | முனைந்தனர் | - முயற்சி செய்தனர் |
| 4. | வியப்பு | - ஆச்சரியம் |
| 5. | மோகன அழகு | - மனதை மயக்கும் அழகு |
| 6. | எழில் | - அழகு |
| 7. | வசீகரம் | - கவருதல் |
| 8. | ஒளி | - வெளிச்சம் |
| 9. | வெள்ளிகள் | - நட்சத்திரங்கள் |
| 10. | விண்மீன் | - நட்சத்திரம், உடு |
| 11. | களிப்பு | - மகிழ்ச்சி |
| 12. | சந்திரன் | - நிலா, திங்கள் |
| 13. | அஸ்தமனம் | - மறைவு |
| 14. | உதயம் | - தோற்றம் |
| 15. | செம்பட்டுச்சல்லடம் | - சிவந்த பட்டாடை |
| 16. | உஷை | - சூரியன் |
| 17. | அந்தி | - மாலைப்பொழுது |
| 18. | வைகறை | - அதிகாலை |
| 19. | அபத்தம் | - வீணான |
| 20. | வனப்பு | - அழகு |
| 21. | சாதனம் | - கருவி |
| 22. | மனம் | - உள்ளம், அகம் |

### மாணவர் செயற்பாடு:-

01. பின்வரும் சொற் கூட்டங்களுள் வழுவற்ற சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. இறுள், இருள், இருல், இருழ்
(.................................)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மகிள்ச்சி, மகிழ்சி, மகிழ்ச்சி, மகில்ச்சி
(..................................)
3. அற்ப்புதம், அற்புதம், அர்ப்புதம், அர்புதம்
(..................................)
4. நாகரிகம், நாகரீகம், நாகறிகம், நாகறீகம்
(..................................)
5. வின்மீன், விண்மீண், விண்மீன், வின்மீண்
(..................................)

**02. பின்வரும் சொற்களுள் தொடர்பற்ற சொல்லின் கீழ்கோடிடுக.**

1. இயற்கை, விண்மீன், உஷை, மின்வலு
2. ஒளி, வெளிச்சம், நிலா, இருள்
3. மகிழ்ச்சி, களிப்பு, இன்பம், வசீகரம்
4. வைகறை, சூரியோதயம், சூரிய அஸ்தமனம், காலை
5. சந்திரன், நிலா, ஞாயிறு, திங்கள்.

**03. பொருத்தமான விடை எழுதி வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.**

1. வியக்கும் மனம் வேண்டும் என்ற கட்டுரையை ................................ எழுதினார்.
2. நிலா வெளிச்சத்தை ....................................... மறைத்துவிட்டன.
3. இயற்கையை வியந்து இரசிக்கும் ....................... எல்லோருக்கும் வேண்டும்.
4. இருட்டு குறைவான வெளிச்சம் என .................................. கூறினார்.
5. இரவு வானை ............................................ என்பன அழகுபடுத்தின.
6. ........................................ வெளிச்சம் பகையாகிறது.

**04. பின்வரும் வினாக்களுக்கு கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு விடை எழுதுக.**

1. எமக்கு எத்தகைய மனம் வேண்டும் எனக் கட்டுரையாசிரியர் கூறுகிறார்?

..........................................................................................................

2. நாகரிகப் பெருநகர வீதிகள் இரவுவேளையில் எவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சியளித்தன?

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

3. மின்சக்தி செயலற்றுப் போனதும் வெளியில் வந்தவரின் உள்ளம் எவ்வாறு காணப்பட்டது?

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

4. செயற்கை ஒளி அற்ற இரவு எவ்வாறு காட்சி அளித்தது?

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

5. இரவுப் பொழுதின் அழகை கட்டுரையாசிரியர் எவ்வாறு சிறப்பிக்கின்றார்?

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

6. தற்கால மக்கள் இயற்கையுடன் கொண்டுள்ள ஈடுபாடு பற்றி கட்டுரையிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

7. சூரிய உதயம், சூரிய அஸ்தமனம் பற்றிய கவிஞர்களின் வர்ணனைகளை எழுதுக.

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

..................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கட்டுரையாசிரியரின் கட்டுரையூடாக முன்வைக்கும் வேண்டுதல் யாது?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

9. இயற்கையின் சிறப்புக்கள் எவை?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

**05. பின்வரும் சொற்களுக்கான எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.**

1. இயற்கை :- ..........................................................
2. இரவு :- ..........................................................
3. அஸ்தமனம் :- ..........................................................
4. நட்பு :- ..........................................................
5. அழகு :- ..........................................................
6. அநாகரிகம் :- ..........................................................
7. இரகசியம் :- ..........................................................
8. அமுது :- ..........................................................
9. விண் :- ..........................................................
10. பெரும்பாலோர் :- ..........................................................

**06. பின்வரும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.**

1. சந்தர்ப்பம் :- ..........................................................
2. அழகு :- ..........................................................
3. கருவி :- ..........................................................
4. அதிகாலை :- ..........................................................
5. நட்சத்திரம் :- ..........................................................
6. உள்ளம் :- ..........................................................
7. நயனம் :- ..........................................................
8. ஆச்சரியம் :- ..........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பாலர் :- ..........................................................

10. தோற்றம் :- ..........................................................

**07. பின்வரும் சொற்களை வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமைக்க.**

1. சின்னஞ்சிறிய :- ..........................................................

..........................................................................................

2. வசீகரம் :- ..........................................................

..........................................................................................

3. வியக்கும் மனம் :- ..........................................................

..........................................................................................

4. தன்னந்தனியே :- ..........................................................

..........................................................................................

5. வனப்பு :- ..........................................................

..........................................................................................

**08. பின்வரும் தனிவாக்கியங்களை கூட்டுவாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

1. பாலன் மைதானத்திற்குச் சென்றான்.
பாலன் பட்டம் விட்டான்.

..........................................................................................

2. மாணவர்கள் பாடசாலைக்குச் சென்றனர்.
மாணவர்கள் ஆர்வத்துடன் கல்வி கற்றனர்.

..........................................................................................

3. மக்களை காடுகளை அழிக்கின்றனர்.
யானைகள் குடியிருப்புகளை அழிக்கின்றன.

..........................................................................................

4. ரோஜா நெடிதாக வளர்ந்தது.
ரோஜா அழகாகப் பூத்தது.

..........................................................................................

5. தாமரை நீரில் மலரும்
அல்லி நீரில் மலரும்

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**09. பின்வரும் வாக்கியங்களைக் கலப்பு வாக்கியங்களாக எழுதுக.**

1. நாளை விடுமுறை தினம்
அரசாங்கம் அறிவித்தது.

..........................................................................................................

2 கடற்கோள் அனர்த்தம் பற்றி அச்சம் கொள்ளத் தேவையில்லை.
சுனாமி எச்சரிக்கை நிலையம் அறிவித்தது.

..........................................................................................................

3. அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்
திருவள்ளுவர் பாடினார்.

..........................................................................................................

4. அப்பா வெளிநாடு சென்று விட்டார்
விமல் கூறினான்.

..........................................................................................................

5. அகிம்சையே சிறந்தது
காந்தியடிகள் வாழ்ந்தார்.

..........................................................................................................

**10. கீழுள்ள வாக்கியங்களை தனிவாக்கியம், கூட்டுவாக்கியம், கலப்பு வாக்கியம் என வேறுபடுத்தி எழுதுக.**

1. தோமஸ் அல்வா எடிசன் சிறந்த விஞ்ஞானி.
2. ஔவையார் சிறந்த புலவர் என ஆசிரியர் கூறினார்.
3. அம்மா பிட்டும் முட்டைப் பொரியலும் தந்தார்.
4. பாரதியார் சிறியோருக்கும் பெரியோருக்கும் பாடல்கள்பாடினார்.
5. கண்காட்சியில் புத்தாக்க பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன.
6. அவன் சிறந்த பேச்சாளனாக வருவான் எனஆசிரியர் கூறினார்

1. ..........................................................................................................
2. ..........................................................................................................
3. ..........................................................................................................
4. ..........................................................................................................
5. ..........................................................................................................
6. ..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11. பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 30 சொற்களில் செய்தி எழுதுக. பொருத்தமான தலைப்பு எழுதுக.**

நிகழ்வு:- யாழ்.வேலணை மத்திய கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா 2017
இடம்:- வேலணை மத்திய கல்லூரி பிரதான மண்டபம்
நேரம்:- முற்பகல் 10.00
தலைமை:- கல்லூரி அதிபர்
பிரதம விருந்தினர்:- கல்வி அமைச்சர் அதிமேதகு அகிலவிராஜ் காரியவசம்
நிகழ்வுகள்:- அதிபர் உரை, பிரதம விருந்தினர் உரை, மாணவர்களின் கலை நிகழ்வுகள், பரிசளிப்பு நிகழ்வு

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

பெறுபேறு வெளியாகியது.
ஆண்டு 2000 ஆம் ஆண்டு
பரீட்சை:- ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில்
தோற்றியோர்:- இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரத்து அறுபத்தொன்பது
சித்தியடைந்தோர்:-எழுபத்தையாயிரத்து இருநூற்றிப் பதினொன்று
அகில இலங்கை ரீதியில் முதலிடம்:- அர்சவி மயூரன்
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமதானம்
ஏற்பாடு:- சாணக்கியன் விளையாட்டுக்கழகம்.
இடம்:- பசுமைக்கிராமம்
நேரம்:- முற்பகல் 8:00 மணி முதல் 12.00 மணி வரை
தலைமை:- பசுமைக்கிராமத்தின் கிராம சேவகர் திரு. மாணிக்கப்பிள்ளை நஞ்சுண்டகண்டன்
பங்குபற்றுவோர்:- பசுமைக்கிராம பொது மக்கள்

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

12. நீங்கள் பார்த்து இரசித்த இயற்கைக் காட்சி பற்றி 100 சொற்களில் கட்டுரை எழுதுக..

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. செய்யும் தொழிலே தெய்வம்

செய்யும் தொழிலே தெய்வம் பாடலின் ஆசிரியர் **பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்** ஆவார்.



சிறந்த தமிழ் அறிஞரான பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் 1930ஆம் ஆண்டு ஏப்ரல் 13ஆம் திகதி பட்டுக்கோட்டை அருகில் உள்ள செங்கப்படுத்தான் காடு எனும் சிற்றூரில் அருணாச்சலனார் - விசாலாட்சி ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.

பத்தொன்பதாவது வயதிலேயே கவிபுனைவதில் ஈடுபாடு கொண்ட இவர் பாட்டாளி மக்களின் ஆசைகளை, ஆவேசங்களை பாடல்களாகப் பாடினார். 1955ஆம் ஆண்டில் 'படித்த பெண்' திரைப்படத்திற்காக முதல் பாடலை எழுதினார். இதற்கு முன்பே, இவரது பாடல்களை ஜனசக்தி பத்திரிகை வெளியிட்டு வந்தது.

தேங்காய், இட்லி, முறுக்கு, மாம்பழம் என்பவற்றை விற்கும் சிறு வியாபாரியாக தொழில் புரிந்த இவர், சிறந்த பாடகர், நடிகர், நடனக்காரர், கவிஞர் எனப்பல கலைகளைக் கொண்டிருந்த கலைஞராகவும் விளங்கினார்.

பல திரைப்படப் பாடல்களையும், தத்துவச் செறிவு மிகுந்த பாடல்களையும் பாடி அழியாப் புகழ்பெற்றார். திராவிட இயக்கத்திலும் கம்யூனிசத்திலும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

1959ஆம் ஆண்டு ஒக்டோபர் 08ஆம் திகதி இவர் அகாலமரணமடைந்து வாழ்வை நிறைவு செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செய்யும் தொழிலே தெய்வம்**

* நாம் எத்தகைய தொழில் செய்தாலும் அதனைத் தெய்வமாகக் கருதி மகிழ்வுடன் செய்வதே சிறப்பு.

* செய்யும் தொழிலை தெய்வமாகக் கருதிச் செய்யும் திறமையே செல்வம் ஆகும்.

* நாம் செய்யும் தொழிலுக்கு நமது கையும் காலுமே உதவி. நாம் செய்யும் கடமையே நமக்குப் பதவி ஆகும்.

* பயிர்ச்செய்கையை மேற்கொள்வது சிறந்த பயனுள்ள தொழிலாகும். அதுவே அனைவரது உயிரைக் காக்கும் உணவாகவும் விளங்குகிறது.

* நமது உழைப்புக்குத் துணையாக வெயில் விளங்குகிறது. வெயிலில் உழைக்கும் போது உண்டாகும் வியர்வை விதையாகும்.

* தினமும் நாம் உழைத்திட வேண்டும். குலமானத்தைக் காத்திடவேண்டுமாயின், உழைத்திடவேண்டும். யாவருக்கும் நல்ல எதிர்காலம் உண்டு. அதில் நம்பிக்கை கொள்ளுதல் வேண்டும்.

* வறிய மக்களின் நிலை பற்றி இறைவனும் பூமியும் நன்றாக அறிந்துள்ளன. இறைவன் சிலசமயம் தரமறந்து விட்டாலும் பூமி எங்களின் உழைப்புக்கு ஏற்ற நல்ல பலனைத் தரும். இதை நாங்கள் யாவரும் மகிழ்ச்சியுடன் பாடி ஆடி பலதடவைகள் வணங்கிடுவோம்.

* காய் கூட அனைவரும் விரும்பும் கனியாக மாற்றமடையும். அவ்வாறுதான் எங்கள் கனவும் ஒரு நாளில் நிறைவேறும்.

* காயும் கனியும் அவற்றுக்குரிய பெறுமதிக்கு ஏற்ப விலை மதிப்பிடப்பட்டு விற்பனையாகும். அவ்வாறு தான் நமது கனவும் நினைவும் நிலையானது. உடல் வாடிப் போனாலும் பசி அதிகமானாலும் அறம், நீதி ஆகியவற்றிலிருந்து மாறிவிடாது வாழ்ந்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொழிலாளர் விண்ணப்பம்**

காடு களைந்தோம் - நல்ல
கழனி திருத்தியும் உழவு புரிந்தும்
நாடுகள் செய்தோம் - அங்கு
நாற்றிசை வீடுகள் தோற்றவும் செய்தோம்.
வீடுகள் கண்டோம் - அங்கு
வேண்டிய பண்டங்கள் ஈண்டிடச் செய்தோம்.
பாடுகள் பட்டோம் புவி
பதமுறவே நாங்கள் நிதமும் உழைத்தோம்.

வாழ் வுக்கொவ்வாத - இந்த
வையத்தை இந்நிலை எய்தப் புரிந்தோம்
ஆழ்கடல், காடு, -மலை
அத்தனையிற் பல சத்தை யெடுத்தோம்
ஈழை, அசுத்தம் - குப்பை
இலை என்னவே எங்கள் தலையிற் சுமந்தோம்.
சூழக்கிடந்தோம் - புவித்
தொழிலாளராம் எங்கள் நிலைமையைக் கேளீர்!

கந்தை யணிந்தோம் - இரு
கையை விரித்தெங்கள் மெய்யினைப் போர்த்தோம்,
மொந்தையிற் கூழைப் - பலர்
மொய்த்துக் குடித்துப் பசித்துக் கிடந்தோம்,
சந்தையில் மாடாய் - யாம்
சந்ததம் தங்கிட வீடுமல்லாமல்
சிந்தை மெலிந்தோம் - எங்கள்
சேவைக்கெலாம் இது செய் நன்றிதானோ?

-பாவேந்தர் பாரதிதாசன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் செயற்பாடு:-

01. கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.

1. தெய்வம் :- ....................................................
2. திறமை :- ....................................................
3. உணவு :- ....................................................
4. பூமி :- ....................................................
5. கனி :- ....................................................
6. ஏழை :- ....................................................

02. பின்வரும் சொற்களுக்கான எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.

1. செல்வம் :- ....................................................
2. வெயில் :- ....................................................
3. பூமி :- ....................................................
4. காய் :- ....................................................
5. கனவு :- ....................................................
6. வாட்டம் :- ....................................................

03. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. செய்யும் தொழிலே தெய்வம் என்ற கவிதையின் ஆசிரியர் யார்?

........................................................................................................

2. எமது தொழிலுக்கு உதவி புரிபவை எவை?

........................................................................................................

3. கவிதையில் கூறப்படும் விவசாயத்தின் சிறப்பு யாது?

........................................................................................................

........................................................................................................

4. நாம் எதன் மீத நம்பிக்கை கொள்ளவேண்டும் என ஆசிரியர் கூறுகிறார்?

........................................................................................................

5. ஏழைகள் நிலையை அறிந்தோர் யாவர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

..............................................................................................................

6. பூமியை நாம் எவ்வாறு போற்ற வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது?

..............................................................................................................

7. எமது இலட்சியம் பற்றி கவிஞர் கூறும் கருத்து யாது?

..............................................................................................................

8. நாம் எவ்வாறு வாழ வேண்டும் என கவிஞர் கூறுகிறார்?

..............................................................................................................

9. 'வழிமாறிடாமல் வாழ்ந்திடுவோம்' என்ற அடியில் கவிஞர் முன் வைக்கும் கருத்து யாது?

..............................................................................................................

..............................................................................................................

10. தெய்வம், பதவி எனக் கவிஞர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?

..............................................................................................................

**04. பின்வரும் சொற்களை வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமைக்க.**

1. கால் :- ..............................................................................................
..............................................................................................................
2. காள் :- ..............................................................................................
..............................................................................................................
3. பால் :- ..............................................................................................
..............................................................................................................
4. பாழ் :- ..............................................................................................
..............................................................................................................
5. ஒளி :- ..............................................................................................
..............................................................................................................
6. ஒழி :- ..............................................................................................
..............................................................................................................
7. ஒலி :- ..............................................................................................
..............................................................................................................
8. களி :- ..............................................................................................
..............................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. கழி :- ..............................................................................................

..............................................................................................

10. கிளி :- ..............................................................................................

..............................................................................................

11. கிழி :- ..............................................................................................

..............................................................................................

12. கிலி :- ..............................................................................................

..............................................................................................

13. பனி :- ..............................................................................................

..............................................................................................

14. பணி :- ..............................................................................................

..............................................................................................

15. கனி :- ..............................................................................................

..............................................................................................

16. கணி :- ..............................................................................................

..............................................................................................

**05. பின்வரும் பாடலை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு பூரண வாக்கியத்தில் விடை எழுதுக.**

ஊருக்கு நல்லது சொல்வேன் - எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன்;
சீருக்கெல் லாம் முதலாகும் - ஒரு
தெய்வம் துணை செய்ய வேண்டும்,
சாதிக் கொடுமைகள் வேண்டாம் - அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்;
ஆதரவுற்றிங்கு வாழ்வோர் - தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்,
பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடு மீசன்;
மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார

-மகாகவி சுப்பிரமணிய பாரதியார்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இக் கவிதையின் ஆசிரியர் யார்?

.......................................................................................................................

2. உலகம் செழிப்புற அவசியமானது எது?

.......................................................................................................................

3. மாதர்களின் அறிவைக் கெடுத்தவர்கள் யார்?

.......................................................................................................................

4. பாடலில் இடம்பெறும் நீதிக்கருத்துக்கள் மூன்று எழுதுக.

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

**06. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

i) வளர்த்திடுமீசன் :- ..........................................................

ii) மண்ணுக்குள்ளே :- ..........................................................

iii) மாதரறிவு :- ..........................................................

**07. பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான பெயரடைகள், வினையடைகளை எழுதி வாக்கியங்களை மீண்டும் எழுதுக.**

1. நான் புத்தகம் வாசித்தேன்.

.......................................................................................................................

2. நண்பன் மாநாட்டில் கட்டுரை வாசித்தான்

.......................................................................................................................

3. சிறுமி பாடினாள்

.......................................................................................................................

4. அப்பா பிரச்சனையை சமாளித்தார்.

.......................................................................................................................

5. மரம் வீட்டின் கூரை மீது விழுந்தது.

.......................................................................................................................

6. அவள் வேலை செய்தாள்.

.......................................................................................................................

7. அம்மா உணவு சமைத்தார்.

.......................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. பின்வரும் அடைகளை பொருத்தமான பெயர் வினைச் சொற்களுடன் இணைக்க.**

| | |
|---|---|
| மெதுவாக | ஏசினார் |
| இலகுவான | உணவு |
| இலகுவாக | சமைத்தார் |
| சுவையாக | பட்டாடை |
| கடுமையாக | கூறினார் |
| சுவையான | வினாக்கள் |
| அழகான | தீர்த்தார் |

**09. பெயரடைகளும் வினையடைகளும் கொண்ட வாக்கியங்கள் 10 எழுதுக.**

........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................

**10. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சிறந்த சொற்பொழிவின் இயல்புகள் எவை?

........................................................................................................
........................................................................................................

2. சிறந்த சொற்பொழிவொன்றில் குறிப்பெடுக்கும் பொறி முறைகள் எவை?

........................................................................................................
........................................................................................................
........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இலக்கியச் சொற்பொழிவைக் கேட்பதன் பயன்கள் 5 தருக.

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

11. நாட்டார் பாடல் ஒன்றினைத் தேடிப் பெற்று எழுதுக.

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

12. விவசாயத்தின் சிறப்புப் பற்றி 25 சொற்களில் பந்தி ஒன்று எழுதுக.

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

.............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. செய்யுளை மனனஞ் செய்யும் வழி

* செய்யுளை மனனஞ் செய்யும் வழி என்ற கட்டுரை பாடல்களை, மரபுச் செய்யுள்களை மனப்பாடம் செய்வதற்கான இலகு வழிகளைக் கூறுகிறது.

* முற்கால மாணவர்கள் தமிழின் 'நிகண்டு' என்னும் நூலை முழுவதுமாக மனனம் செய்யும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர்.

* நிகண்டு என்பது சொற்களுக்கான பொருளை செய்யுள் வடிவில் கொண்டமைந்த நூல் ஆகும்.

* செய்யுள்களின் பொருளை அறிவதற்கு நிகண்டுகளே பயன்படுத்தப்பட்டன.

* பிற்காலத்திலேயே அகராதி வடிவமைக்கப்பட்டு அறிமுகமானது.

* நிகண்டை மனப்பாடம் செய்யும் போது சொற்களின் அர்த்தத்தை விளங்கி மனப்பாடம் செய்தல் வேண்டும் அப்போதுதான் இலகுவாக இருக்கும்.

* நிகண்டு மனப்பாடம் செய்த மாணவர்கள் பிற்காலத்தில் பெரிய தமிழ் அறிஞர்களாக வித்துவான்களாக விளங்கினர்.

* செய்யுளை மனனம் செய்வதற்கான இலகுவழி.

  - ஒரு பாடலைத் தெரிவு செய்து அதன் ஒவ்வொரு வரியும் தொடங்கும் சொற்களை அவதானியுங்கள்.
  - அச்சொற்களின் இரண்டாம் எழுத்துக்கள் ஒன்றித்து இருக்கும்.
  - சொற்களின் இரண்டாம் எழுத்துக்கள் ஒன்றித்துக் காணப்படுவது எதுகை எனப்படும்.
  - உதாரணம்:- க**ன்**று, அ**ன்**று, எ**ன்**று, ந**ன்**று
    அப்பம், கப்பம், செப்பம், தெப்பம்
  - சில செய்யுள்களில் வரி தொடங்கும் சொற்களின் முதல் எழுத்துக்கள் ஒன்றித்துக் காணப்படும்.
  - செய்யுள்களை மனனஞ் செய்யும் போது இவ்வாறு எதுகை, மோனைச் சொற்களை அவதானித்து செய்யுளை மனனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தல் இலகுவானது.

✦ கன்றொ ழிந்த காராவின் கலக்க மொத்(து)
அன்று அரற்றி அழுத அரிவையை
என்று மெங்கணு மெவ்வுயி ரும்தொழ
நன்று கண்டமெஞ் ஞானியும் நோக்கியே.

இச் செய்யுளில் ஒவ்வொரு வரியின் முதற் சொல்லின் இரண்டாம் எழுத்துக்கள் எதுகையாக அமைந்துள்ளன.

✦ பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன்- கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா.

இங்கு, பாடலின் முதலிரு வரிகளில் முதற் சொற்கள் பாலும், நாலும் என ஓர் எதுகையாகவும் மூன்றாம் நான்காம் வரிகளின் முதற் சொற்கள் ஓர் எதுகையாகவும் (துங்கம், சங்கம்) என அமைந்து உள்ளது.

இவற்றை அவதானித்து விளங்கிக் கற்றால் செய்யுளை இலகுவில் மனனம் செய்யலாம்.

* எதுகைச் சொற்களை அவதானிப்பது போலவே, செய்யுளில் மோனைச் சொற்களையும் அவதானித்து செய்யுளை மனனம் செய்தல் இலகுவானது.

உ+ம்:- 'கன்றொழிந்த காராவின்' என்ற செய்யுளில் முதல் வரியின் சொற்கள் மோனைச் சொற்களாக அமைந்துள்ளன. மோனை என்பது சொற்களின் முதல் எழுத்துக்கள் ஒன்றித்து வருவதாகும்.

'கன்று', 'காரா', 'கலக்கம்'

இரண்டாம் வரியில், **அ**ன்று, **அ**ரற்றி, **அ**முத, **அ**ரிவை என முதல் எழுத்துக்கள் ஒன்றித்து வந்துள்ளன.

✦ எதுகை, மோனை உடைய சொற்களைக்கொண்டே அதிகமான செய்யுள்கள் அமைந்துள்ளன. எதுகை, மோனை இன்றி வரும் செய்யுள்கள் மிகவும் குறைவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் செயற்பாடு:-

01. **பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. அறிஞர் பலர் தமிழ்ச் செய்யுள்களை மனனஞ் செய்தனர். அறிஞர் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
   1. பேதை 2. அறிவிலர் 3. மேதை 4. நல்கூர்ந்தார்
2. ஒவ்வொரு மாணவனும் சில பகுதிகளை மனனம் செய்தல் வேண்டும். மாணவன் என்பதன் ஒத்தசொல்
   1. சீடன் 2. மாணவி 3. குரு 4. அறிஞன்
3. அன்று அரற்றி அழுத அரிவையை இங்கு அரிவை என்பதன் ஒத்தகருத்துச் சொல்
   1. பசு 2. பெண் 3. அறிஞன் 4. கன்று
4. முன்னம், அன்னம், கன்னம் இங்கு இரண்டாவது எழுத்துக்கள் ஒன்றித்து வருவது.
   1. மோனை 2. எதுகை 3. உவமை 4. அடுக்குத்தொடர்
5. 'துங்கக் கரிமுகத்து' என்பதில் துங்கம் என்பது
   1. யானை 2. தந்தம் 3. அகன்ற . 4. கை

**பொருத்தமான எழுவாய்ச் சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக.**

6. நாலுங் கலந்துனக்கு நான் தருவேன்,
   1. நாலும் 2. உனக்கு 3. நான் 4. தருவேன்
7. சங்கத் தமிழ் மூன்றுந் தா.
   1. சங்கம் 2. தமிழ் 3. சங்கத்தமிழ் 4. நீ

**பொருத்தமான முடிக்கும் சொல்லின் கீழ் கோடிடுக.**

8. கமலன் விமலுடன் இணைந்து ..................................
   1. விளையாடினான் 2. விளையாடினார்கள்
   3. விளையாடினர் 4. விளையாடுவர்
9. தினமும் அதிகாலையில் எழும்புவதை அர்சிதா வழக்கமாக்கிக் ..........................................
   1. கொண்டிருப்பாள் 2. கொண்டாள்
   3. கொண்டிருந்தாள் 4. கொண்டான்
10. முற்காலத்தில் மாணவர் செய்யுள்களை மனனம் ............................
    1. செய்கிறார்கள் 2. செய்தார்கள்
    3. செய்தனர் 4. செய்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. பின்வரும் அடுக்குத் தொடர்களை வைத்து வாக்கியம் அமைக்க.

1. ஓடிஓடி :- ..........................................................
..........................................................
2. பாடிப் பாடி :- ..........................................................
..........................................................
3. கூடிக் கூடிக் :- ..........................................................
..........................................................
4. பாம்புபாம்பு :- ..........................................................
..........................................................
5. எழுந்து எழுந்து :- ..........................................................
..........................................................
6. பார்த்துப் பார்த்து :- ..........................................................
..........................................................
7. அம்மா அம்மா :- ..........................................................
..........................................................
8. திருடன் திருடன் :- ..........................................................
..........................................................
9. விழுந்து விழுந்து :- ..........................................................
..........................................................
10. அடித்து அடித்து :- ..........................................................
..........................................................

03. விடை எழுதுக.

1. செய்யுளை மனனம் செய்வதற்கான இலகு வழிகள் 2 தருக.
..........................................................
..........................................................
2. செய்யுளை மனனம் செய்வதன் நன்மை யாது?
..........................................................
..........................................................
3. முற்காலத்தில் மாணவர்கள் எவ்வாறு தமிழ் கற்றனர்?
..........................................................
..........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. நிகண்டு, எதுகை, மோனை என்பவற்றைக் குறிக்கும் தொடர் மொழிகளை எழுதுக?

.................................................................................................

.................................................................................................

**5. பின்வரும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.**

1. செய்யுள் :- ..............................................
2. அரிவை :- ..............................................
3. ஞானி :- ..............................................
4. துங்க :- ..............................................
5. நூல் :- ..............................................
6. தொழுதல் :- ..............................................

6. 'சங்கத் தமிழ் மூன்றும் தா' சங்கத் தமிழ் மூன்றும் எவை?

.................................................................................................

7. மோனை, எதுகைச் சொற்கள் எழுதுக.

.................................................................................................

.................................................................................................

**04. பின்வரும் செய்யுளை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு பூரணமான வாக்கியத்தில் விடை எழுதுக.**

நிறைமுகத்தோடு தோன்றும் நிலாவொளி புவிக்கு வேண்டும்
அறிமுகம் எதற்கும் வேண்டும் அன்புடன் கூடி வாழப்
பொறைமுகம் வேண்டும் வாணிபம் பெருக நாளும் கப்பல்
துறைமுகம் வேண்டும் அங்கே தோணியும் படகும் வேண்டும்

தோண்டிய பள்ளம் போன்ற தோற்றமே காட்டும் பாத்ரம்
தோண்டியாம் நிலத்தில் பள்ளம் தோண்டலாய் மரத்தில் பள்ளம்
தோண்டியே செய்ததாலே தோணியாம் தோணி மீதில்
ஆண்டியும் ஏறிச் செல்வான் அரசனும் ஏறிச்செல்வான்.

நரம்பினால் பின்னப்பட்ட நம்முடல் போன்று நாட்டுப்
பிரம்பினால் செய்த ஓடம் பிளினியின் காலம் தன்னில்
இருந்ததாம் அந்த நாளில் இலங்கைப் பயணம் செய்த
அரசருள் தத்தன் என்பான் அதிலே சென்றிட்டானாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படிப்பட்ட ஓடம் அமைத்தபின் மரத்தைக் கொண்டு
தெப்பம் செய்தார் மேலும் திறமிகு சிந்தை செய்தும்
கப்பலே கட்டலானார் கப்பல் எனும் அந்த
உப்புநீர் வாகனத்தின் உதவியால் கடலில் சென்றார்.

- கவிஞர் சுரதா-

1. உலகில் வேண்டுவன எவை என பாடலின் முதற்பந்தியில் ஆசிரியர் கூறுகிறார்?

.......................................................................................................

.......................................................................................................

2. தோணி என்ற பெயர் எவ்வாறு ஏற்பட்டதெனக் கூறப்படுகிறது?

.......................................................................................................

.......................................................................................................

3. ஓடம், தெப்பம் என்பன எவற்றைக் கொண்டு செய்யப்பட்டன?

.......................................................................................................

.......................................................................................................

4. எமது உடம்பு பற்றி கவிஞர் யாது கூறுகிறார்?

.......................................................................................................

5. பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எழுதுக.

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

6. இலங்கைக்குப் பயணம் செய்த அரசன் யார்? யாருடைய காலத்தில், எவ்வாறு பயணம் செய்தான்?

.......................................................................................................

.......................................................................................................

7. பொறை, வாணிபம், மரம் என்பவற்றுக்கான ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக.

.......................................................................................................

.......................................................................................................

**05. பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தற் குறியீடுகள் இட்டு வாக்கியங்களை மீண்டும் எழுதுக.**

1. இராமன் தந்தை சொற்படி காட்டுக்குச் சென்றான்

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இலங்கை இந்தியா பர்மா முதலான நாடுகள் கீழைத்தேய நாடுகள்.

.....................................................................................................

3. மகனே வருக

.....................................................................................................

4. இராமன் சென்றான் வில்லை எடுத்தான் ஒடித்தான்

.....................................................................................................

5. இடி இடித்தது மின்னல் மின்னியது மழை பொழிந்தது

.....................................................................................................

6. அரசனே வாழ்க

.....................................................................................................

7. ஆகா மலையில் ஓடும் அருவியின் அழகுதான் என்னே

.....................................................................................................

8. நீ ஏன் சுற்றுலாவுக்கு வரவில்லை

.....................................................................................................

9. வாய்மையே வெல்லும் என்பது முன்னோர் முதுமொழி

..................................................................................................

2. விளம்பரம் ஒன்றின் பண்புகள் எவை?

..................................................................................................

..................................................................................................

3. உங்கள் பாடசாலை தமிழ் இலக்கிய மன்றத்தின் வெளியீடான செந்தமிழ் சஞ்சிகைக்கான விளம்பரம் ஒன்று எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. நளவெண்பா

நிடதநாட்டு மன்னனான நளனின் கதையை கூறுவதாக நளவெண்பாவை புகழேந்திப் புலவர் பாடினார்.

* மகாபாரதத்தின் துணைக்கதைகளுள் ஒன்றாக இது அமைந்துள்ளது.

* வெண்பா பாடுவதில் சிறந்தவரான புகழேந்திப்புலவர் குலோத்துங்க சோழ மன்னனின் வேண்டுதலுக்கிணங்க நளவெண்பாவைப் பாடினார்.

* வெண்பா அமைப்பில் பாடப்பட்டுள்ள பாடல்கள் சுயம்வரகாண்டம், கலி தொடர் காண்டம், கலி நீங்கு காண்டம் என மூன்றாக வகுக்கப்பட்டுள்ளது.

* 13 வெண்பாக்கள் பாயிரம், நூல் வரலாறு கொண்டனவாகவும் 155 வெண்பாக்கள் சுயம்வர காண்டத்தினுள்ளும் 147 வெண்பாக்கள் கலி தொடர் காண்டத்தினுள்ளும் 90 வெண்பாக்கள் கலி நீங்கு காண்டத்தினுள்ளும் உள்ளடங்குகின்றன.

### நளன் அறநெறியில் அரசு புரிதல்

01. **சீத மதிக் குடைக்கீழ்ச் செம்மை அறங்கிடப்பத்**
**தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான் –மாதர்**
**அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்**
**ஒரு கூட்டில் வாழும் உலகு.**

**செய்யுளை கொண்டுகூட்டி வாசிப்போம்**

தாதவிழ்பூந் தாரான் தனிக் காத்தான்
மாதர் அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்
ஒரு கூட்டில் வாழ உலகு
சீதமதிக் குடைக்கீழ்செம்மைஅறம்கிடப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரும்பதம்:-**

சீதம்-குளிர்ச்சி, தாது-மகரந்தம், அவிழ்-சிந்தும், பூந்தாரான்-அழகிய மலர் மாலையை அணிந்தவன்.

**பொருள்:-**

மகரந்தப் பொடி சிந்துகின்ற மலர் மாலையைத் தரித்த நளன், மகளிர்தம் அருகில் வைத்துப் பாலும் பழமும் ஊட்டி வளர்க்கின்ற பச்சைக்கிளியும் பருந்தும் ஒரே கூட்டிற்குள் பகைமை நீங்கி வாழும்படி,குளிர்ச்சியுடைய நிலவுபோன்ற வெண்கொற்றக் குடையின் நிழலில், சிறந்த அறங்கள் நிற்கத் தன் நாட்டைத் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் ஆண்டு வந்தான்.

## நளன் சோலைக்குச் செல்லல்

௦௨. வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான் – தேங்குவளைத்
தேனாடி வண்டு சிறகுலர்த்தும் நீர்நாடன்
பூநாடிச் சோலை புக.

**செய்யுளை கொண்டுகூட்டி வாசிப்போம்**

தேம்குவளைத் தேன்ஆடி வண்டு
சிறகு உலர்த்தும் நீர் நாடன் பூநாடி
வாங்குவளைக் கையார் வதனமதி பூத்த
சோலை புக பூங்குவளைக் காட்டிடையே போயினான்.

**அரும்பதம்:-**

வாங்குவளை-வளைந்தவளையல், வதனமதி-முகமாகிய சந்திரன், தேங்குவளை-தேம்+குவளை, தேம் - இனிமை, தேனாடி- தேன்+ஆடி, ஆடி–முழுகி

**பொருள்:-**

இனிமை பொருந்திய குவளை மலரின் தேனில் முழுகி எழுந்த வண்டுகள், தம் சிறகுகளை உலரச் செய்கின்ற நீர்வளம் வாய்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு நிடதம். அந்நாட்டரசனாகிய நளன், பூக்கொய்ய விரும்பி சோலைக்குள் செல்லும்போது, வளைந்த வளையல்கள் அணிந்த பெண்களின் முகமாகிய நிலவினிடத்து மலர்ந்துள்ள விழிகள் என்னும் அழகிய நீலமலர்க் கூட்டத்தின் நடுவிலே சென்றான்.

## நளன் பூங்காவை அடைதல்

03. தேரின் துகளைத் திருந்திழையார் பூங்குழலின்
வேரிப் புனல்நனைப்ப வேயடைந்தான் –கார்வண்டு
தொக்கிருந்தாலித்துழலுந்தூங்கிருள்வெய் யோற்கொதுங்கிப்
புக்கிருந்தால் அன்ன பொழில்.

**செய்யுளை கொண்டுகூட்டி வாசிப்போம்**

தூங்கு இருள் வெய்யோற்குஒதுங்கி
புக்கு இருந்தால் அன்னகார்வண்டு
தொக்கு இருந்துஆலித்துஉழலும் பொழில்
வேரிபுனல் நனைப்பஅடைந்தான்.

**அரும்பதம்:–**

வேரி-தேன்,தொக்கிருந்தாலித் துழலும்-தொக்கு+இருந்து+ஆலித்து + உழலும், தொக்கு-ஒருங்கு சேர்ந்து, ஆலித்து-ஆரவாரம் செய்து, வெய்யோன்-கொடிய கிரணங்களையுடைய சூரியன், பொழில்-சோலை.

**பொருள்:–**

மிக்க இருளானது சூரியன் ஒளிக்கதிர்களின் முன் விலகி ஒளித்துக் கொண்டிருந்தாற் போன்ற கருநிற வண்டுகள் ஒன்றாகக் கூடி மகிழ்ந்து சுற்றித் திரிகின்ற சோலையை, தனது தேர் உருளைகளிற் படிந்த புழுதியைத் திருத்தமான அணிகள் அணிந்த பெண்களது மலர் சூடிய கூந்தலினின்று ஒழுகி வழிகின்ற பூந்தேன் என்னும் நீர் நனைத்துக் கரைக்கும்படி நளன் சேர்ந்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னம் தோன்றல்

04. நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
தாணிறத்தாற்பொய்கைத்தலஞ்சிவப்ப – மாணிறத்தான்
முன்னப்புள் தோன்றும் முளரித் தலைவைகும்
அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு.

**செய்யுளை கொண்டுகூட்டி வாசிப்போம்**

ஆங்கு மாண்நிறத்தான் முன் அப்புஉள்தோன்றும்
முளரி தலைவைகும் அன்னப்புள்
நீள்நிறத்தால் சோலைநிறம் பெயர
தன் நீடியதாள் நிறத்தால் தோன்றிற்று.

**அரும்பதம்:-**

நீணிறம்-மிக்க வெண்ணிறம், பெயர-மாறுபட, மாண்நிறத்தான்-நளன், முளரித்தலை-தாமரையில், அன்னப்புள்-அன்னப்பறவை.

**பொருள்:-**

நள தமயந்தியர் ஒன்று சேரக் காரணமாயிருந்த அன்னம் நளன் முன் தோன்றுகிறது. அந்தப் பொழிலில் மாட்சிமைப்பட்ட அழகினையுடைய நளன் முன்பு, நீரில் முளைத்தெழுகின்ற தாமரை மலரில் தங்கி வாழ்கின்ற அன்னப்பறவை ஒன்று, தன் உடலின் வெண்மை நிறத்தால் சோலையின் பசுமை நிறம் வெண்ணிறமாய் மாறவும், தன்கால்களின் செந்நிற மிகுதியினால் அங்குள்ள தடாகத்தின் நீரிடமெல்லாம் செந்நிறமாய் மாறவும் தோன்றியது.

## நளன் தோழி ஒருத்தியை அன்னத்தை பிடித்துத் தர ஏவுதல்

05. பேதை। மடவன்னந் தன்னைப் பிழையாமல்
மேதிக் குலமேறி மென்கரும்பைக் – கோதிக்
கடித்துத்தான் முத்துமிழுங் கங்கை நீர் நாடன்
பிடித்துத்தா என்றான் பெயர்ந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செய்யுளை கொண்டுகூட்டி வாசிப்போம்**

மேதிகுலம் ஏறிமென்கரும்பைகோதிகடித்து
முத்துஉமிழும் கங்கைநீர்நாடன்
பேதைபெயர்ந்து மட அன்னம் தன்னை
பிழையாமல் பிடித்துத் தாஎன்றான்.

**அரும்பதம்:–** மட அன்னந்தன்னை-இளமை பொருந்திய அன்னத்தை, மேதிக்குலம்-எருமை மந்தை.

**பொருள்:–**

அன்னத்தின் அழகில் நளன் மனம் ஈடுபட்டது. ஆதலின், அதனைப் பிடித்துத்தர அவன் தோழி ஒருத்தியை ஏவினான். எருமை மந்தை கரும்பு வயலில் புகுந்து மென்மையான கரும்புகளைக் கடித்துக் குதப்பி முத்துகளைக் கக்குகின்றது. அத்தகு நாட்டையுடையவன் நளன். அவன் தோழி ஒருத்தியை பார்த்து, 'மடவாய், நீ சென்று இளமை பொருந்திய அந்த அன்னத்தைத் தப்பாமல் பிடித்துக் கொண்டுவந்து கொடுப்பாயாக', என்றான்.

* கரும்பின் கணுவில் முத்துப் பிறக்கும் என்பது பல நூல்களில் கூறப்படுகின்றது.

## மகளிர் அன்னத்தைப் பிடித்தல்

06. நாடிமட அன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற தொப்பவே – நீடியநல்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து.

**செய்யுளை கொண்டுகூட்டி வாசிப்போம்**

நீடியநல் பைங்கூந்தல் வல்லியர்கள்
நாடிமடஅன்னத்தைநல்லமயில் குழாம்
ஓடிவளைக்கின்றது ஒப்பபற்றிக் கொடுபோந்து
தம் கோவின் முன் தாழ்ந்துவைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரும்பதம்:-**

தங்கோ-தம் + கோ (தம் அரசன்)

**பொருள்:-**

மயில் கூட்டம் அன்னத்தைச் சூழ்ந்தது போலப் பெண்கள் அன்னத்தைச் சூழ்ந்தார்கள், பெண்டிர் மயில் போன்ற சாயலையுடையவர் எனக் கூறப்பெறுவராதலின், ஆசிரியர் இங்ஙனம் கூறினார்.

## மன்னனைக் கண்ட அன்னம் வருந்துதல்

07. அன்னந்தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டுபோய்
மன்னன் திருமுன்னர் வைத்தலுமே —அன்னம்
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு.

**செய்யுளை கொண்டுகூட்டி வாசிப்போம்**

ஆய் இழையார் அன்னம் தனைப் பிடித்து
அங்குகொண்டுபோய் மன்னன் திருமுன்னர் வைத்தலும்
அன்னம் தன்னுடையவான்கிளையைத் தேடிமலங்கிற்று
மன்னவனைக் கண்டுகலங்கிற்று.

**அரும்பதம்:-**

ஆயிழையார்-ஆராய்ந்தெடுக்கப்பட்ட அணிகளைப் பூண்ட மகளிர், மலங்கிற்று-மருண்டது, வான்கிளை-பெருஞ்சுவர்

**பொருள்:-**

ஆராய்ந்தெடுக்கப்பட்ட அணிகளையுடைய மகளிர் அன்னத்தைப் பிடித்துச் சென்று அரசன் முன் வைத்த உடனே,அன்னம் தனது சுற்றமாகிய மற்ற அன்னங்களைக் காணாமல் வருந்தியது, மன்னவனைக் கண்டு மருண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 'அஞ்சாதே!' என அரசன் அன்னத்தைத் தேற்றுதல்

08. 'அஞ்சல் மடவனமே! உன்றன் அணிநடையும்
வஞ்சி அனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்தது காண்,' என்றான் களிவண்டு
மாணப் பிடித்தார் மன்.

**செய்யுளை கொண்டுகூட்டி வாசிப்போம்**

களிவண்டு மாணப்பிடித்தார்மன் மட அனமே
அஞ்சல் உன் தன் அணிநடையும்
வஞ்சிஅனையார் மணிநடையும்
விஞ்சியது காண பிடித்ததுகாண் என்றான்.

**பொருள்:—**

மதுவை உண்டு களிக்கும் வண்டுகள் மிகுதியாய் மொய்த்துள்ள மாலையை அணிந்த நளன், "இளமை பொருந்திய அன்னமே, அஞ்சாதே! உனது அழகிய நடையும், வஞ்சிக்கொடி போன்ற பெண்களின் அழகிய நடையும் ஆகிய இரண்டினுள் எது சிறந்தது என்று கண்டறிவதற்காகவே உன்னைப் பிடித்துக் கொண்டு வரச் செய்தேன்! வேறொன்றுமில்லை!" என்றான்.

### அன்னம் அச்சம் நீங்குதல்

09. செய்ய கமலத் திருவை நிகரான
தையல் பிடித்த தனியன்னம்—வெய்ய
அடுமாற்ற மில்லா அரசன் சொற் கேட்டுத்
தடுமாற்றம் தீர்ந்ததே தான்.

**செய்யுளை கொண்டுகூட்டி வாசிப்போம்**

செய்யகமலதிருவைநிகர் ஆன
தையல் பிடித்ததனிஅன்னம்
வெய்ய அடு மாற்றம் இல்லா
அரசன் சொல் கேட்டுதடுமாற்றம் தீர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரும்பதம்:–**

தையல்-தோழி, வெய்ய-கொடுமையான, அடுமாற்றம்-கொல்லும் சொல், தான்-அசை.

**பொருள்:–**

செந்தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமியைப் போன்றவளான தோழி பிடித்த ஒப்பற்ற அன்னம், கொடுமையான கொலைத் தொழில் இல்லாத நளனது சொல்லைக் கேட்டு மனக்கலக்கம் தீர்ந்தது.

## தமயந்தியைப் பற்றி அன்னம் நளனுக்குக் கூறல்

10. திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே உன்றன்
இசை முகந்த தோளுக்கிசைவாள் –வசையில்
தமயந்தி என்றோதும் தையலாள் மென்றோள்
அமையந்தி என்றோர் அணங்கு

**செய்யுளை கொண்டுகூட்டி வாசிப்போம்**

திசைமுகந்தவெண் கவிதைதேர் வேந்தே
உன் தன் இசைமுகந்த தோளுக்கு
மென்தோள் அமைஅந்திஎன்று ஓர் அணங்கு
வசை இல்தமயந்தி என்று ஓதும் தையலாள்.

**அரும்பதவுரை:–**

திசைமுகந்த-எட்டுத்திசையிலுள்ளோர்களையும் தன்னுள் அடக்கிய, வெண்கவி-வெண்குற்றக்குடை, இசை முகந்த-புகழ் நிரம்பிய, வசை இல்-குற்றமில்லாத, அமை-மூங்கில், அணங்கு-தெய்வப்பெண்

**பொருள்:–**

எட்டுத்திசையில் உள்ளவர்கள் அனைவரையும் தன்னுள் அடக்கிய வெண்கொற்றக் குடையையும் தேர்ப்படையையும் உடைய அரசே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ் நிரம்பிய உன்னுடைய தோள்களுக்குப் பொருத்தமானவள், மென்மையான தோள்கள், மூங்கில் போன்ற அழகு, தெய்வப்பெண் ஆகிய தமயந்தி ஆனவள் என்று நளனிடம் அன்னம் கூறியது.

நளவெண்பா பாடல் பகுதியில் நிடதநாட்டின் சிறப்புக்கள், நளனின் சிறப்புக்கள், அன்னப் பறவையின் சிறப்பு என்பன கூறப்பட்டுள்ளன.

**நிடத நாட்டின் சிறப்புக்கள்**

* நிடத நாடானது குவளை மலரில் மூழ்கி எழுந்த வண்டுகள் தமது சிறகுகளை உலரச் செய்கின்ற நீர்வளம் மிகுந்ததாகும்.
* பூக்கள் நிறைந்த சோலைகளை உடைய நாடு.
* சிறந்த மன்னனான நளமகாராசன் ஆட்சிபுரியும் நாடு.
* இளவேனிற் பருவத்தின் வருகையைக் கூறும் பாடலில் நிடத நாட்டின் சிறப்பு கூறப்படுகிறது. குறிஞ்சி முல்லை போன்ற மலர்கள் பூத்துக் குலுங்கும் மலைச்சாரலை உடைய அழகிய நாடாக விளங்குகிறது.
* இனியதென்றல் காற்றுவீசும் போது தேன் சிந்தும் குளிர்மை மிகுந்த நாடு.

**நளனின் சிறப்புக்கள்**

* நிடத நாட்டின் அரசனாக விளங்குபவன்.
* பெண்கள் பார்த்து வியக்கும்படியான பேரழகு கொண்டவன்.
* தேனை உண்டு மகிழும் வண்டுகள் மிகுதியாக மொய்க்கும் மாலையை அணிந்திருக்கும் சிறப்பு வாய்ந்தவன்.
* எட்டுத் திசைகளிலும் பரவிய வெண்கொற்றக் குடையை உடையவன்.
* புகழ் மிகுந்த தோள்களை உடையவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமயந்தியின் சிறப்புக்கள்**

- ✳ மூங்கிலைப் போன்று அழகுவாய்ந்த மென்மையான தோள்களை உடையவள்.
- ✳ தேவமகளிரைப் போன்ற மிகுந்த அழகு வாய்ந்தவள்.
- ✳ குற்றம் அற்றவள்.

**அன்னப்பட்சியின் சிறப்புக்கள்**

- ✳ சோலையே வெண் நிறமாக மாறும்படியான தூய வெண் நிறத்தை உடையது.
- ✳ பொய்கை செந்நிறமாக மாறும்படியான சிவந்த கால்களை உடையது.
- ✳ நளமகாராசன் விரும்பும்படியான அழகு வாய்ந்தது.
- ✳ அழகிய நடையினை உடையது.

**நளன் சோலைக்குச் சென்ற பகுதியில் இடம்பெறும் அணிச் சிறப்புக்களை நோக்குவோம்.**

**உருவகஅணி**

**"வதனமதி பூத்த பூங்குவளைக் காடு"**

சோலையில் நின்ற பெண்களின் முகத்தை வதனமாகிய மதியாக உருவகிக்கின்றார் புகழேந்திப் புலவர்.

- ✳ பூங்குவளைக் காடு என அப்பெண்களின் கண்களை உருவகிக்கின்றார்.
- ✳ பெண்களின் முகங்களாகிய நிலவிலே பூத்திருக்கும் அழகிய கண்களான நீலமலர் காடு எனச் சிறப்பிக்கின்றார்.

**எதுகைஅணி**

வாங்குவளை, பூங்குவளை, தேங்குவளை
தேனாடி, பூனாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றி, தென்றல்
தளவேனில், இளவேனில்
தேரின், வேரின்
தோக்கிருந்த, புக்கிருந்த
நீணிறத்தால், தாணிறத்தால்
கடித்துத்தா, பிடித்துத்தான்
அஞ்சல், வஞ்சி
காணப்பிடித்த, மாணப்பிடித்த
அடுமாற்றம், தடுமாற்றம்

கொக்குவில் பொது நூலகம்
நல்லூர் பிரதேசசபை

இத் தொடர்களில் இரண்டாவது எழுத்துக்கள் ஒன்றித்து வந்துள்ளமையால் எதுகை அணியாக விளங்குகிறது.

**உவமை அணி**

* **"நாடி மட அன்னத்தைநல்லமயிற்குழாம்**

**ஓடிவளைக்கின்றது ஒப்பவே"**

மயிலின் கூட்டம் வளைந்து சூழ்ந்து கொண்டதைப் போல பெண்கள் அன்னத்தை சூழ்ந்து கொண்டனர்.

**உவமானம்** :- மயிற்குழாம் ஓடிவளைத்தல்

**உவமேயம்** :- பெண்கள் அன்னத்தை சூழ்ந்து கொள்ளல்

**பொதுத்தன்மை**:- வெளியேறாதவகையில் சுற்றிவளைத்தல்

**உவமைஉருபு** :- ஒப்ப

* **திருவை நிகரானதையல்**

திருமகளை ஒத்த அழகுடையவளான பெண்

**உவமானம்** :- திருமகள்

**உவமேயம்** :- பெண்

**பொதுத்தன்மை** :- அழகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவமைஉருபு :- நிகரான

உயர்வு நவிற்சிஅணி

**நீணிறத்தால் சோலை நிறம் பெயர நீடியதன்**
**தாணிறத்தால் பொய்கைத் தலம் சிவப்ப**

அன்னப்பறவையின் வெண்நிறத்தினால் சோலை வெண்ணிறமாக மாறியது என அன்னத்தின் அழகை உயர்த்திக் கூறுகிறார் புகழேந்தி.

* நெடிய கால்களின் செந்நிறத்தால் பொய்கை செந்நிறமாக மாறியது. இங்கு அன்னத்தின் வெண்மை அதன் கால்களின் செம்மை என்பவற்றை உயர்த்திக் கூறுகின்றமையால் உயர்வு நவிற்சி அணியாக விளங்குகிறது.

அரும்பதம்

| | | |
|---|---|---|
| வதனம் | :- | முகம் |
| மதி | :- | சந்திரன் |
| மது | :- | தேன் |
| புனல் | :- | நீர் |
| குழல் | :- | கூந்தல் |
| புள் | :- | பறவை |
| கோ | :- | அரசன் |
| அஞ்சல் | :- | பயப்படாதே |
| தையல் | :- | பெண் |

## மாணவர் செயற்பாடு:-

01. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. நீர் நாடன் எனச் சிறப்பிக்கப்படுபவர்
   1. புகழேந்திப்புலவர் 2. நளன்
   3. அன்னம் 4. பெண்
2. நளமன்னன் ஆட்சிபுரிந்த நாடு
   1. நிடதநாடு 2. விதர்ப்பநாடு
   3. இந்தியா 4. மலைச்சாரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. “தேரின் துகளைத் திருந்திளையார் பூங்குழலின்'' குழல் என்பதன் ஒத்தகருத்துச் சொல்

1. புல்லாங்குழல் 2. கூந்தல்
3. புஷ்பம் 4. பேதை

4. பின்வருவனவற்றுள் எதுகை அணி இடம்பெற்றுள்ள தொடர்

1. தளவேனில், இளவேனில்
2. வதனம்,வஞ்சி
3. பேதைமடவன்னம்
4. திருவை நிகரானதையல்

5. **வேரின் புனல் நனைப்பவேயடைந்தான்** இத் தொடரின் எழுவாய்

1. நளன் 2. அன்னம் 3. வண்டு 4. வெய்யோன்

6. மாட்டின் தொகுதி பட்டி எனப்படுவது போல மயில்

1. கூட்டம் 2. குழாம் 3. தொகுதி 4. தோப்பு

7. பின்வருவனவற்றுள் வழுவற்றதொடர்

1. அன்னப்புல் கலங்கி நின்றது.
2. அன்ணப்புல் கலங்கிநின்றது.
3. அன்னப்புள் கலங்கிநின்றது.
4. அன்னப்புள் களங்கிநின்றது.

8. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல்லாக அமைவது

1.தையல் 2. பேதை 3. மடந்தை 4. நாடன்

9. அன்னப்பட்சி.......................... காணப்பட்டது.
இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை எழுதுக.

1. வெள்ளைவெளேரென 2. செக்கச்செவேலென
3. வெள்ளை 4. வெண்மையாக

10. குழந்தையின் பற்கள் முத்துப் போன்று காணப்பட்டன. இங்கு இடம்பெற்றுள்ள அணி

1. உருவகஅணி 2. உவமைஅணி
3. எதுகைஅணி 4. மோனை அணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. **கீழே தரப்பட்டுள்ள பாடல்களை அடிப்படையாகக் கொண்டு அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. விடைகள் பூரண வாக்கியங்களில் எழுதுதல் அவசியம்.**

பேதை மடவன்னந் தன்னைப் பிழையாமல்
மேதிக் குலவேறிமென்கரும்பைக்- கோதி
கடித்துத் தான் முத்துமிழுங் கங்கைநீர்நாடன்
பிடித்துத் தாஎன்றான் பெயர்ந்து

நாடி மடவன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற தொப்பவே- நீடியநல்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடு போந்த
தன்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து.

1. நீர் நாடன் எனப்படுபவன் யார்? இவன் எதனைப் பிடித்துத் தரும்படி கேட்டான்?

 ..............................................................................

2. இப்பாடலில் சிறப்பிக்கப்படும் நாடு எது? இந்நாட்டின் சிறப்பு எத்தகையது?

 ..............................................................................

 ..............................................................................

3. இரண்டாம் பாடலில் இடம்பெற்றுள்ள உவமை அணியினைக் குறிப்பிட்டு விளக்குக.

 ..............................................................................

 ..............................................................................

4. பாடலில் இடம்பெறும் பெண்களின் அழகு எத்தகையது?

 ..............................................................................

 ..............................................................................

5. பின்வருவனவற்றைப் பிரித்து எழுதுக.
   1. மடவன்னம் :- ......................................
   2. முத்துமிழுங் கங்கை :- ......................................
6. தரப்பட்டுள்ள செய்யுள்களில் இடம்பெறும் விடயத்தை சிறு பந்தியாக எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

03. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்க.

1. பொய்கை ........................................................................

.....................................................................................

2. நிடதநாடு ........................................................................

.....................................................................................

3. கோ ........................................................................

.....................................................................................

4. அஞ்சல் ........................................................................

.....................................................................................

5. உமிழும் ........................................................................

.....................................................................................

6. புள் ........................................................................

.....................................................................................

04. பின்வரும் வினாக்களுக்கு பாடப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.

1. நளவெண்பா இலக்கியத்தைப் பாடிய புலவர் யார்?

.....................................................................................

2. நிடதநாட்டின் மன்னனாக ஆட்சி புரிந்தவன் யார்? இந்நாட்டின் சிறப்புக்களை எழுதுக.

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

3. நளனுக்கு அன்னப்பட்சியைப் பிடித்துக் கொடுத்தது யார்?

.....................................................................................

4. அன்னப் பறவை ஏன் அச்சமடைந்தது?

.....................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கலங்கி நின்ற அன்னத்தை நளன் எவ்வாறு தேற்றினான்?

.....................................................................................................

.....................................................................................................

6. நளனின் முன் தோன்றிய அன்னத்தின் அழகு எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறது?

.....................................................................................................

.....................................................................................................

7. நளன் அன்னப்புள்ளை எங்கு கண்டான்?

.....................................................................................................

8. பாடலில் இடம்பெற்றுள்ள உருவக அணி ஒன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

.....................................................................................................

**9. பின்வரும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.**

1. குழல் - ..........................
2. பொய்கை - ..........................
3. சோலை - ..........................
4. மயில் - ..........................
5. தாழ்ந்து - ..........................

**10. பின்வருவனவற்றின் சிறப்புக்களை எழுதுக.**

1. நளமகாராசனின் சிறப்புக்கள்:-

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

2. நிடதநாட்டின் சிறப்புக்கள்:-

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**05. கீழே தரப்பட்டுள்ள பந்தியில் இடம்பெற்றுள்ள அணிகளை இனங்கண்டு எழுதுக.**

சூரியன் கிழக்கில் உதித்தது. வானை முட்டும் மாட மாளிகைகள் நிறைந்த மகிழூருக்கு காலையிலேயே மன்னன் தேரில் உலா வந்தான். மன்னனை வருக வருகவென வரவேற்பதாக கொடிகள் அசைந்தன. மன்னனைக் காண மக்கள் கூட்டம் திரண்டது. சிறுகல்லும் கீழே விழ முடியாத வகையில் மக்கள் திரண்டனர். மா மரத்திலிருந்த குயில் மன்னனை வாழ்த்தி வாழ்த்துப்பா இசைத்தது. பசுந்தரையில் நின்ற மயில் மன்னனை வரவேற்பதாக நடனம் ஆடிற்று. மன்னன் காவலர்கள் சகிதம் மக்கள் முன் தோன்றினான். மக்கள் மட்டற்ற மகிழ்வடைந்தனர்.

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

**06. பின்வரும் தொடர்கள் எவ்வகை அணிகள் என எழுதுக.**

1. மகளிர் இசைக்கும் மகரவீணையின் ஒலியினால் கடலினது ஒலி அமிழ்ந்தது.

   .................................................................................

2. மதியை ஒக்கும் முகம்

   .................................................................................

3. மையறு மலரி னீங்க யான் செய்மாதவத்தின் வந்து
   செய்யவ ளிருந்தா ளென்று செழுமணிக் கொடிகளென்னுங்
   கைகளை நீட்டியந்தக் கடிநகர் கமலச் செங்கண் ஐயனை
   யொல்லை வாவென் றழைப்பது போன்றதம்மா

   .................................................................................

4. செந்தீயின் நாப்போலச் செழுந்தளிர்கள்

   .................................................................................

5. 'மஞ்சும் அஞ்சும் கைப் பரராஜசேகர மன்னன்' (மேகமும் அஞ்சும் படியான கொடைச்சிறப்புடைய பரராஜசேகர மன்னன்)

   .................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. இலங்கை நகரில் மாளிகைகள் பொன்னினால் செய்யப்பட்டவை

..........................................................................................................

7. செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்

..........................................................................................................

8. தையல் துயர்க்குந் தரியாது தன் சிறகாம்
கையான் வயிறலைத்துக் காரிருள்வாய்- வெய்யோனை
வாவுபரித் தேரிரேறி வாவென்றழைப்பன போற்
கூவினவே கோழிக் குலம்.

..........................................................................................................

07. **கீழுள்ள அடுக்கிடுக்குத் தொடர்களை வைத்து வாக்கியம் அமைக்க.**

1. வெட்டவெளி ..........................................................................

..........................................................................................................

2. செக்கச்சிவந்த ......................................................................

..........................................................................................................

3. வெள்ளைவெளேர் ....................................................................

..........................................................................................................

4. தன்னந்தனியே ......................................................................

..........................................................................................................

5. பச்சைப்பசேல் ......................................................................

..........................................................................................................

6. கன்னங்கரேல் ........................................................................

..........................................................................................................

08. **பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக**

சின்னஞ்சிறிய, அல்லும்பகலும், சிறியசிறிய, செக்கச்சிவந்த, குறுகுறு, பட்டிதொட்டி, பென்னம்பெரிய, கலீர்கலீர், பார்த்துப்பார்த்து, வெள்ளைவெள்ளையாக, விர்விர், பெரியபெரிய, தோட்டந்துரவு, பதைத்துப்பதைத்து, விண்விண், விடியவிடிய, எலும்பும்தோலும், பதைபதைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இரட்டைக்கிளவி | இணைமொழி |
|---|---|
| ……………………………… | ……………………………… |
| ……………………………… | ……………………………… |
| ……………………………… | ……………………………… |
| ……………………………… | ……………………………… |
| ……………………………… | ……………………………… |
| ……………………………… | ……………………………… |
| ……………………………… | ……………………………… |
| அடுக்குத்தொடர் | அடுக்கிடுக்குத் தொடர் |
| ……………………………… | ……………………………… |
| ……………………………… | ……………………………… |
| ……………………………… | ……………………………… |
| ……………………………… | ……………………………… |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. சகுந்தலை நாடகம்



* தமிழ் இலக்கியத்தில் நாடக இலக்கியம் தனிச்சிறப்புடையது. சகுந்தலை நாடகமும் அழியாத புகழுடன் இன்றும் மேடை ஏற்றப்படும் நாடகமாக விளங்குகிறது.

* சகுந்தலை நாடகம் நான்கு காட்சிகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது.

* விசுவாமித்திரருக்கும் மேனகைக்கும் பிறந்தவளான சகுந்தலையை அத்தினாபுரத்து அரசன் துஷ்யந்த மகாராஜா காந்தருவ மணம் புரிந்து தன் பெயர் பொறிக்கப்பட்ட கணையாழியை அவளுக்கு அணிந்துவிட்டுத் தனது நகருக்குச் சென்றான்.

* நாடகத்தில் இடம்பெறும் கதாபாத்திரங்கள்:-

  சகுந்தலை
  பிரியம்வதை, அநசூயை - முனிபுத்திரியர்
  கண்ணுவ முனிவர் - சகுந்தலையின் வளர்ப்புத் தந்தை
  கௌதமி - சகுந்தலையின் வளர்ப்புத் தாய்
  சார்ங்கரவன் - சகுந்தலையின் சகோதரன்

* காட்சி ஒன்று பூஞ்சோலையில் நிகழுவதாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பிரியம்வதையும் அநசூயையும் பூஞ்சோலையில் மலர் கொய்து கொண்டிருக்கும் போது துருவாச முனிவர் கண்ணுவ முனிவரின் ஆச்சிரமத்திற்கு வருகை தந்தமையை ஆச்சிரமத்தினுள் இருந்த சகுந்தலை அவதானிக்காது துசியந்தனின் நினைவில் மூழ்கி இருந்தாள். தன்னை சகுந்தலை அவமதித்ததாக கூறி அவள் யாரை நினைத்துக் கொண்டிருந்தாளோ அவன் சகுந்தலையை மறக்கும் படி சாபமிட்டு சென்றார்.

* சகுந்தலையின் தோழியான அநசூயை துருவாச முனிவரை ஆச்சிரமத்திற்கு வருமாறு அழைத்த போதிலும் முனிவர் வர மறுத்து கோபத்துடன் சென்று விட்டார்.

* அநசூயை முனிவரின் பாதங்களைத் தொட்டு வணங்கி சகுந்தலையின் குற்றத்தை மன்னித்து சாபநீக்கம் வேண்டினாள். முழுமையாக சாப விமோசனம் கிட்ட வில்லையாயினும் சகுந்தலையின் கணவன் அணிந்த ஆபரணத்தை காண்பிப்பதன் மூலம் சாபம் நீங்கும் எனக் கூறிச் சென்றார்.

* துருவாசமுனிவர் சாபமிட்டது தோழியரான பிரியம்வதைக்கும் அநசூயைக்கும் மட்டுமே தெரிந்திருந்தது.

* காட்சி இரண்டு கண்ணுவ முனிவரின் ஆச்சிரமத்தில் நிகழ்வதாக அமைந்துள்ளது.

* சகுந்தலையை துஷ்யந்த மகாராஜா சந்தித்தது காந்தர்வ மணம் புரிந்தது சகுந்தலை கருவுற்றிருப்பது என்பவற்றை தந்தையான கண்ணுவமுனிவர் தனது ஞான திருஷ்டியினால் அறிந்து அவளை கணவனான துஷ்யந்தனின் வீட்டிற்கு அனுப்புவதற்கு முடிவு செய்தார்.

* தோழியர் இருவரும் சகுந்தலையை அனுப்புவதற்காகச் செய்யப்படும் மங்கள காரியங்களைச் செய்வதற்காக சகுந்தலையிடம் சென்றனர்.

* சகுந்தலையை பலரும் ஆசிர்வதித்து வழியனுப்புவதற்கான சடங்குகள் இடம் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தந்தையான கண்ணுவமுனிவர் கணவன் வீட்டிற்குச் செல்லும் பெண்ணுக்குக் கூறவேண்டிய அறிவுரைகளைக் கூறினார். மகளைப் பிரிய மனமின்றி மிகுந்த துன்பமுற்றவராகக் காணப்பட்டார். சகுந்தலையும் தந்தையைப் பிரிய மனமின்றி மிகுந்த வருத்தத்துடன் தாய் கௌதமியுடன் புறப்பட்டாள்.

* பிரியம்வதை சுகுந்தலையிடம் அதிக வேலைப் பழுவால் மன்னன் உன்னை மறந்திருந்தால் உடனே அவர் அணிந்துவிட்ட மோதிரத்தைக் காண்பித்தால் அவருக்கு நினைவு வரும் என்பதைக் கூறி விடை கொடுத்தாள்.

* சகுந்தலை அனைவரிடமும் ஆசி பெற்று தாயுடனும் சகோதரனான சார்ங்கரவனுடனும் புறப்பட்டாள்.

* மீதி இரண்டு காட்சிகளும் இருபதாம் பாடத்தில் தொடர்கின்றன. அவற்றை பின்னர் நோக்குவோம்.

## மாணவர் செயற்பாடு

01. **பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து எழுதுக.**

1. நறுந்தருக்கள் வழிநெடுகிலும் நிழல் தரட்டும். இங்கு தரு என்பதன் ஒத்த கருத்துச் சொல்
   1. மலர் 2. பசு 3. மரம் 4. கிளை
2. மகளே! வன தேவதையை வணங்கி விடைபெற்றுக் கொள். இவ் வாக்கியம்
   1. கூற்று வாக்கியம் 2. வியங்கோள் வாக்கியம்
   3. வினாவாக்கியம் 4. ஏவல் வாக்கியம்
3. நன்னீர் தடாகங்கள் தண்ணளியை வழங்கட்டும். தண்ணளி என்பது
   1. குளிர்ச்சி 2. தாமரைப்பூ
   3. காற்று 4. நறுமணம்
4. மன்னன் என்பதால் மறதி இருக்கலாம் அல்லவா? மறதி என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
   1. பிரியாவிடை 2. ஞாபகம்
   3. மனனம் 4. அவதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தோழியர் பூஞ்சோலையில் பூப்பறிக்கச் சென்றனர். தோழியர் என்பதன் ஒத்தகருத்துச் சொல்

1 சேடியர் 2. துணைவியர்

3. கன்னியர் 4. சகோதரர்

6. நன்னீர் என்பதைப் பிரித்து எழுதியதன் திருத்தமான வடிவம்

1. நல்ல+நீர் 2. நன்+நீர்

3. நன்மை+நீர் 4. நல்+நீர்

7. தபோவனம் என்பதைக் குறிக்கும் சரியான தொடர்.

1. அரசர் வாழும் இடம்

2. வனதேவதைகள் வாழுமிடம்

3. மகளிர் வசிக்குமிடம்

4. முனிவர்கள் வசிக்குமிடம்

8. அநசூயையும் பிரியம்வதையும் கன்னியர்களாகையால் அவர்கள் உன்னுடன் வரமுடியாது. தரப்பட்ட வாக்கியத்தில் இரண்டு வாக்கியங்களை இணைக்கும் இணைப்பிடைச் சொல்லாக அமைவது.

1. உம் 2. ஆகையால் 3. உடன் 4.ஆல்

9. கணவன் கோபித்தாலும் சாந்தமாக நடந்து கொள். கணவன் என்பதன் எதிர்ப்பாற் சொல்

1. கணவி 2. துணைவி 3. மனைவி 4.கொழுநன்

10. துஷ்யந்த மன்னன் ஆட்சி புரிந்த இடம்

1. அத்தினாபுரம் 2. அழகேஸ்வரம்

3. தமிழ்நாடு 4. ஈழம்

பின்வரும் சொற்களுக்கான ஒத்த கருத்து சொற்களை எழுதுக.

11. பூஞ்சோலை ..........................................

12. விரைந்து ..........................................

13. கோபம் ..........................................

14. மாருதம் ..........................................

15. தடாகம் ..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. **பொருத்தமான சொற்களை எழுதி கோடிட்ட இடங்களைப் பூரணப்படுத்துக.**

அத்தினாபுர அரசனாக (1) ........................... விளங்கினான். இவன் (2) ................................ வளர்ப்பு மகளைக் காந்தர்வ மணம் புரிந்தான். (3) ............................... ஆச்சிரமத்திற்கு வந்தமையை அறியாமையால் (4) ........................... தன்னை அவமதித்ததாக எண்ணி (5) ........................ கு சாபமிட்டு சென்றார். (6) ........................ அவரது காலில் விழுந்து வேண்டியதும் (7) ......................... என சாப விமோசனம் இட்டார். முனிவர் (8) ......................, ...................... ஆகியோரின் மகளான சகுந்தலையை (9) .................... வளர்த்து வந்தார். இவளுக்கு (10) .................... என்ற சகோதரன் ஒருவனும் இருந்தான். மகள் கருவுற்றிருப்பதை தனது (11) ............................ மூலம் அறிந்த தந்தை அவளை கணவன் வீட்டிற்கு (12) ................................ உடன் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்தார். சர்மிஷ்டை தன் கணவனான (13) ...................................... இடம் பெரு மதிப்புப் பெற்றவளாக விளங்கினாள். (14) ...................... போன்ற சிறப்புப் பெற்றவனாக துஷ்யந்தன் விளங்கினான். உற்றார், உறவினர் அவர்களைப் பிரிந்து செல்வதாயின் (15) ............................ வரை மட்டுமே செல்ல முடியும்.

03. **கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்கள் எவ்வகை வாக்கியங்கள் என இனங்கண்டு எழுதுக.**

1. நீ மகா தேவி எனும் பட்டம் பெற்று நீடூழி காலம் வாழ்வாயாக!

   ..........................................................................................................

2. என்ன! முனிவருக்கு செய்தி தெரிந்து விட்டதா?

   ..........................................................................................................

3. கணையாழி சகுந்தலையிடந்தானே இருக்கிறது. பயப்படத் தேவையில்லை.

   ..........................................................................................................

4. நீ எவனை நினைத்துக் கொண்டிருக்கின்றாயோ அவன் உன்னை மறப்பானாக!

   ..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. உன் சகோதரியை அழைத்துச் சென்று துஷ்யந்தனிடம் சேர்ப்பாயாக.

..........................................................................................

**04. கீழுள்ள பந்தியை வாசித்து அப்பந்தியில் இடம்பெற்றுள்ள கூற்று வாக்கியம், வினா வாக்கியம், வியங்கோள் வாக்கியம் என்பவற்றை இனங்கண்டு எழுதுக.**

நீ மேலும் பல சாதனைகள் படைக்க வேண்டும் அதற்காக இறைவன் உனக்கு அருள் புரிவானாக! என விமலனின் தாயார் அவனை மனமுவந்து பாராட்டினார். மகனே, 'உன்னுடைய வாழ்க்கையில் நீ பெரும் பாக்கியமாக நீ எதனைக் கருதுகிறாய்?' என தாய் கேட்ட போது உன் மகனாக நான் பிறந்ததுதான் பெரும் பாக்கியம். இதை விட எனக்கு வேறு என்ன வேண்டும்? அம்மா எனக்கு உயர்கல்வி கற்பதற்காக வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் புலமைப் பரிசில் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. ஆனால் உங்களையும் அழைத்துச் செல்ல முடியாதுள்ளது. நான் உங்களை விட்டுப் பிரிய மனமின்றி அதை இன்னொருக்கு கொடுக்கும் படி கூறினேன். தாய் மகனின் முடிவை மாற்றும்படி மன்றாட்டமாக வேண்டினாள்.

1. கூற்றுவாக்கியம்

..........................................................................................

..........................................................................................

2. வினா வாக்கியம்

..........................................................................................

..........................................................................................

3. வியங்கோள்வாக்கியம்

..........................................................................................

..........................................................................................

**05. பின்வரும் இணைமொழிச் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்க.**

1. அல்லும்பகலும் :- ..........................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஊனுறக்கம் :- ..........................................................................

..........................................................................................

3. எலும்பும்தோலும்:- ..................................................................

..........................................................................................

4. பட்டிதொட்டி :- ......................................................................

..........................................................................................

5. கணக்குவழக்கு :- ....................................................................

..........................................................................................

6. உற்றார் உறவினர் :- ................................................................

..........................................................................................

**06. சகுந்தலை நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. கண்ணுவ முனிவரின் ஆச்சிரமத்திற்கு வந்தவர் யார்?

..........................................................................................

2. கண்ணுவ முனிவர் சீற்றமடையக் காரணம் யாது?

..........................................................................................

3. அவர் சகுந்தலைக்கு இட்டசாபம், சாபவிமோசனம் என்பன எவை?

..........................................................................................

4. சகுந்தலைக்கு சாபவிமோசனம் கொடுக்கும்படி வேண்டியவள் யார்?

..........................................................................................

5. சகுந்தலையை திருமணம் செய்த மன்னன் யார்?

..........................................................................................

அதன் சான்றாக அவன் கொடுத்த அணிகலன் யாது?

..........................................................................................

6. கண்ணுவ முனிவர் சகுந்தலைக்குக் கூறிய அறிவுரைகள் எவை?

..........................................................................................

7. தோழியர் வேள்வித்தீ வளர்க்கக் கொண்டுவந்த மங்கலப் பொருட்கள் எவை?

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. தோழியருக்கு வெண்பட்டாடை வழங்கியோர் யார்?

.......................................................................................................

9. சகுந்தலை யாரைப் போல் சிறப்புப்பெற வேண்டுமென கண்ணுவ முனிவர் வாழ்த்தினார்?

.......................................................................................................

10. கண்ணுவ முனிவர் துஷ்யந்த மகாராஜாவுக்கு கூறும்படி கூறிய செய்தி யாது?

.......................................................................................................

**07. பின்வரும் கூற்றுக்கள் யாரால், யாருக்குக் கூறப்பட்டன**

1. நீ மகாதேவி எனும் பட்டம் பெற்று நீடூழி வாழ்வாயாக!
   யாரால் :- ............................................................
   யாருக்கு :- ............................................................
2. இல்லை இல்லை தக்க காரியம் நிகழ்ந்தது என்று மனமகிழ்ந்தார்.
   யாரால் :- ............................................................
   யாருக்கு :- ............................................................
3. உள்ளே யார் இருக்கிறார்கள்? ம் உள்ளே யாரும் இல்லையா?
   யாரால் :- ............................................................
   யாருக்கு :- ............................................................
4. தந்தை கண்ணுவரின் கட்டளைப்படி வன தேவதைகள் இவற்றை உதவின.
   யாரால் :- ............................................................
   யாருக்கு :- ............................................................
5. பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை. அவர் அரசர் அல்லவா? வேலைகள் அதிகம்.
   யாரால் :- ............................................................
   யாருக்கு:- ............................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக

| | ஒத்தபொருளுடைய இணைமொழி | எதிர்ப்பொருளுடைய இணைமொழி | ஒன்றுமட்டும் பொருளுடைய இணைமொழி |
|---|---|---|---|
| 1 | .................................. | .................................. | .................................. |
| 2. | .................................. | .................................. | .................................. |
| 3. | .................................. | .................................. | .................................. |
| 4. | .................................. | .................................. | .................................. |
| 5. | .................................. | .................................. | .................................. |

09. பின்வரும் வாக்கிய வகைகளுக்கு 5 உதாரணம் எழுதுக.
வினாவாக்கியம் கூற்றுவாக்கியம் வியங்கோள்வாக்கியம்

...........................................................................................

...........................................................................................

...........................................................................................


...........................................................................................

...........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. தோற்றுப் பார்



* தோற்றுப் பார் என்ற கட்டுரை மனிதன் வாழ்வில் சாதனையாளன் ஆவதற்கு வெற்றியை விடவும் தோல்வியே முதன்மைக் காரணியாக உள்ளது என்பதை எடுத்துரைக்கிறது.

* தோல்வியைத் தோற்கடித்து வாழ்வில் வெற்றி பெறும் வழிமுறைகளையும், அவ்வாறு வெற்றி பெற்றவர்களையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

* தோல்வியிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை:-

  - வெற்றி என்றால் என்ன? என்பதைப் புரியவைப்பதற்கு உதவும் ஒரு கருவியே தோல்வி.
  - இல்லையேல் வெற்றியின் மதிப்பும், அதன் பெறுமதியும் எமக்குத் தெரியாமல் போய்விடும்.

* வெற்றியைப் பெறுவதற்கு ஒருவர் பல தோல்விகளைச் சந்தித்திருப்பார். பல அவமானங்களை எதிர் கொண்டிருப்பார்.

* உலகின் சாதனையாளர்கள் பலரதும் வாழ்க்கை வரலாறுகளைப் படித்தால் அவர்களின் வாழ்க்கையில் எதிர் கொண்ட தோல்விகளை அறிந்து கொள்ளமுடியும்.

* மகாத்மாகாந்தி, தோமஸ் அல்வா எடிசன் போன்றோரை உதாரணமாகக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தேச விடுதலைக்காக மகாத்மா காந்தி எதிர்கொண்ட தோல்விகளும் அவமானங்களும் ஏராளமானவை. ஆனால் அவர் மனஉறுதியுடன் எதிர்கொண்டதால் அவர் தேசபிதா எனப் போற்றப்படுகின்றார்.

* மின்குமிழைக் கண்டறிந்த தோமஸ் அல்வா எடிசன் ஆயிரம் தடவை தோல்விகளைச் சந்தித்த பின்பே மின்குமிழ் கண்டு பிடிப்பு வெற்றி பெற்றது.

* மின்குமிழ் எரிவதற்கு முக்கியமான டங்ஸ்டன் என்ற பொருளைப் பயன்படுத்துவதற்கு ஆயிரம் முறை தோல்வியடைந்தார். மூங்கில் இழை, சிறுகம்பி முதலிய பல பொருள்களை இணைத்துப் பரிசோதித்தும் தோல்வியில் முடிந்தது.
* ஆயிரம் முறை தோல்வியைச் சந்தித்தீர்கள் கஷ்டமாக இல்லையா எனக் கேட்டதற்கு, ஒவ்வொரு முறையும் ஒரு சோதனையை எவ்வாறு செய்யக்கூடாது என்பதை தெரிந்து கொண்டேன். இறுதியில் வெற்றியும் பெற்றேன் எனக் கூறினார்.

**எடிஸனின் வாழ்வு தரும் படிப்பனை:-**

* தோல்விகளைக் கண்டு துவளாதவர்.

* மீண்டும் மீண்டும் முயற்சித்து வெற்றிபெற்றவர்.

* தோல்வியிலிருந்து பல பாடங்களைக் கற்றுக்கொண்டவர்.

## தோல்வியைக்கண்டு தற்காலத்தில் எதிர்கொள்ளாமைக்கான காரணங்கள்

- பெரும்பாலான பெற்றோர்கள் குழந்தைகளுக்கு வாழ்க்கையின் ஒரு அங்கமாகத் தோல்வியைப் பற்றி எடுத்துக் கூறுவதில்லை.
- தோல்வியைக் கண்டு மனமுடைந்து போதல்.
- தோல்விகளை எதிர் கொள்ளும் முறைகளை அறியாதிருத்தல்.
- தோல்வியை ஏற்றுக்கொள்ளும் மனநிலை இன்மையால் தற்கொலை செய்து கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோல்வியைத் தோற்கடித்து வாழ்வில் வெற்றி பெறுவதற்கான வழிகள்

- தோல்விகளைத் தோல்விகளாகக் கருதுதல் கூடாது.
- ஒவ்வொருமுறை தோற்கும் போதும் பெரியதொரு வெற்றியை நோக்கிப் பயணிக்கிறோம் என உணரவேண்டும்.

* வெற்றியின் முகவரியை அடைவதற்கு தோல்விகளைச் சந்தித்துத்தான் ஆகவேண்டும்.

## மாணவர் செயற்பாடு

01. **பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. அவர் சந்தித்த தோல்விகள் ஏராளமாக இருக்கும். **தோல்வி** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
   1. வெற்றி 2. வருத்தம் 3. தோற்றல் 4. சாதனை
2. மின்குமிழ் எரிவதற்குத் தேவையான இழை.
   1. மூங்கில்இழை 2. சிறுகம்பி 3. புல் 4. டங்ஸ்டன்
3. எடிசன் தன் இலக்கில் .......................................... இருந்தார்.
   1. நுனிப்புல் மேய்தல்
   2. கண்ணுங் கருத்தும்.
   3. எழுத்தெண்ணிப் படித்தல்
   4 குறையும் நிறையும்
4. சிறுவர்கள் சிட்டாய்ப் பறந்து தமது வேலைகளைச் செய்து முடித்தார்கள். சிட்டாய்ப்பறத்தல் என்ற மரபுத்தொடரின் பொருள்
   1. உயரப்பறத்தல் 2. துரிதமாக இயங்குதல்
   3. ஒற்றுமையுடன் செயற்படல் 4. விளையாடித்திரிதல்
5. பின்வருவனவற்றுள் உயிர்முன் மெய் புணரும் சொல்லாக அமைவது.
   1. ஓலை+பாய் 2. புல்+பாய்
   3. பனை+ஓலை 4. பாய்+கப்பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பின்வருவனவற்றுள் வல்லினம் மிகாச்சொல் அல்லாதது.
   1. பாலாவிலை   2. மாம்பழம்
   3. விளாங்காய்   4. பட்டுப்பாவாடை
7. ஒவ்வொரு கண்டுபிடிப்பிற்குப் பின்னாலும் பல தோல்விகள் ..................................................
   1. ஒளிந்துள்ளது   2. ஒளிந்துள்ளன
   3. ஒழிந்துள்ளன   4. ஒழிந்துள்ளது.
8. டங்ஸ்டன் இழையினை குமிழிற்குள் வைத்து சோதித்து வெற்றி கண்டார். இவ்வாக்கியத்தின் எழுவாய்
   1. டங்ஸ்டன் 2. குமிழ்   3. இழை   4. எடிசன்
9. தோல்விகளைக் கண்டு துவண்டு விடாதீர்கள் என்பது
   1. கூற்றுவாக்கியம்   2. வினாவாக்கியம்
   3. வியங்கோள்வாக்கியம்   4. ஏவல்வாக்கியம்
10. சந்தித்து, நிந்தித்து என்ற சொற்கள்
   1. மோனை   2. சிலேடை
   3. இணைமொழி   4. எதுகை

**02. பின்வரும் சொற்களைப் புணர்த்தி எழுதி அவற்றில் இடம்பெற்றுள்ள புணர்ச்சி வகைகளையும் எழுதுக.**

1. மா + இலை :- ..................................................
2. தீ+ சுடர் :- ..................................................
3. விளக்கு+ ஒளி :- ..................................................
4. கன்று+ குட்டி :- ..................................................
5. வீடு + சுவர் :- ..................................................

**03. வல்லின எழுத்துக்களான க்,ஞ்,ச்,த் என்பன மிகுந்து வரும் வகையில் சொற்களைப் புணர்த்தி எழுதுக.**

1. ..................................................
2. ..................................................
3. ..................................................
4. ..................................................
5. ..................................................
6. ..................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ......................................................

8. ......................................................

9. ......................................................

10. ....................................................

**04. பின்வரும் மரபுத் தொடர்களை வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமைக்க**

1. கசக்கிப் பிழிதல் :- ...........................................................
   ..............................................................................................
2. கை கொடுத்தல் :- ...........................................................
   ..............................................................................................
3. கயிறு திரித்தல் :- ...........................................................
   ..............................................................................................
4. துண்டு விழுதல் :- ...........................................................
   ..............................................................................................
5. கடன் கழித்தல் :- ...........................................................
   ..............................................................................................
6. நெருப்பெடுத்தல் :- ...........................................................
   ..............................................................................................
7. காது குத்துதல் :- ...........................................................
   ..............................................................................................
8. சுருக்குப் போடல் :- ...........................................................
   ..............................................................................................
9. முழங்கையில் பிடித்தல்:- ....................................................
   ..............................................................................................
10. உடும்புப்பிடி :- ...........................................................
    ..............................................................................................

**05. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தோல்வி என்பது யாது என கட்டுரையில் வரையறுக்கப்படுகிறது?
   ..............................................................................................
2. உலகின் எட்டாவது அதிசயமாகக் காணப்படுவது யாது?
   ..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வெற்றியை உணர வைக்கும் கருவியாக விளங்குவது யாது?

..........................................................................................

4. வாழ்க்கையில் வெற்றி பெறுபவர் யார் எனக் கூறப்படுகிறது?

..........................................................................................

5. தோல்வியின் இயல்பு எத்தகையது?

..........................................................................................

6. தோல்விகளை எதிர்கொண்டு வெற்றி பெற்றவர்கள் இருவரைக் குறிப்பிட்டு அவர்கள் பெற்ற சாதனைகளையும் தருக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

7. பிள்ளைகளின் தோல்வியைக் கண்டு பின் வாங்குவதற்கு பெற்றோர் எவ்வாறு காரணமாகின்றனர்?

..........................................................................................

8. உலகில் மிகவும் முட்டாள் தனமான செயலாக விளங்குவது எது?

..........................................................................................

9. தோல்வியின் சிறப்புக்கள் 2 தருக.

..........................................................................................

..........................................................................................

10. தோமஸ் அல்வா எடிசனின் பண்பு யாது?

..........................................................................................

**06. 'தோல்விக்கு தற்கொலை தீர்வு அல்ல' என்ற தலைப்பில் நீர் ஆற்றும் மேடைப்பேச்சு ஒன்றினை எழுதுக.**

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. நகரத்தின் நிழல்



* நகரத்தின் நிழல் சிறுகதையின் ஆசிரியர் டொமினிக் ஜீவா.

* இவர் 1927ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஜோசப் மரியம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார்.

* ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில், டொமினிக் ஜீவா அவர்கள் மிக முக்கிய பங்கு வகிக்கிறார்.

* கட்டுரை, சிறுகதை துறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பல தொகுப்புக்களை வெளியிட்டார்.

* மல்லிகை என்ற இலக்கிய இதழை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றமை சிறப்பானது.

* தண்ணீரும் கண்ணீரும் என்ற சிறுகதைத் தொகுப்பு சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற சிறுகதைத் தொகுப்பு ஆகும். சின்னட்டி என்ற ரிக்ஷா வண்டி ஓட்டுபவனின் நேர்மைத்திறன், உழைப்பு என்பவற்றை அவரது வாடிக்கையான பயணி ஒருவர் மூலமாகக் கூறுவதாக கதை அமைந்துள்ளது.

    • காணிப்பிரச்சனை ஒன்றைத் தீர்ப்பதற்காக கொழும்பிலிருந்து புகையிரதத்தில் யாழ்ப்பாணம் வந்து வீடு செல்வதற்காக ரிக்ஷா வண்டியில் வாடகைக்கு அமர்த்திச் செல்லும் வழக்கம் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கொழும்பிலிருந்து வந்த முதல் நாளில் சின்னட்டி அறிமுகமாகி தற்போது வரை சின்னட்டியின் வாடிக்கையாளராக விளங்கும் பயணி சின்னட்டியுடன் முதல் நாள் அறிமுகமான சம்பவத்தை மீட்டிப் பார்ப்பதாக கதை அமைந்துள்ளது.
- சின்னட்டி முதல்நாள் அறிமுகமானபோது, மிகுந்த வறுமையில் ரிக்ஷா வண்டியின் வருமானத்தை மட்டுமே எதிர்பார்த்து குடும்பத்தைக் காப்பாற்றுபவனாகக் காணப்பட்டான்.
- காலப் போக்கில் அவனது பிள்ளைகள் வளர்ந்து தொழிலுக்குச் செல்வதால் குடும்பம் வறுமையிலிருந்து மீண்டதுடன் சின்னட்டி தன்னால் இயன்றவரை ரிக்ஷாவண்டி இழுத்து உழைக்கின்றான்.
- சின்னட்டி என்ற பாத்திரம் கதையில் முக்கியத்துவம் பெறுகின்றது. அவனது வறுமை நிலையை ஆசிரியர் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றார்.

## * சின்னட்டியின் தோற்றம்:-

- வயதான காலத்திலும் தன்னால் இயன்றவரை உழைப்பவன்.
- தான் செய்யும் தொழிலை உயர்வாக நினைத்து கௌரவமாக உழைப்பவன்.

  உ+ம்: நான் ரிக்ஷாக்காரன் உழைச்சுப் பிழைக்கிறவன் பிச்சைக்காரனில்லை.
- நடு வயதைத் தாண்டிய தோற்றமுடையவன்.
- குடும்பச் சுமையாலும் வறுமையாலும் நசியுண்ட உடல், உதடு உலர்ந்து தோற்றமளித்தான்.
- ரிக்ஷா இழுத்துக் கூனிய முதுகுடன் காணப்படுபவன்.

## * சின்னட்டியின் வறுமை நிலை:-

- இச்சிறுகதையில் வாடிக்கையாளரான பயணியின் மூலமாகவும் சின்னட்டியின் கூற்றுக்களூடாகவும் சின்னட்டியின் வறுமை நிலை முன்வைக்கப்படுகிறது.
- சின்னட்டியின் மெலிந்த உடல்நிலை.
- வறுமையால் ரிக்ஷா இழுத்து கூனிய முதுகு.
- காய்ச்சல் பீடித்திருந்து உடல் தேறாத நிலையிலும் ரிக்ஷா இழுத்துப் பிழைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவனது உழைப்பு இல்லையேல் சாப்பாட்டிற்கும் வழியற்ற நிலை.
- வெறும் வயிற்றுடன் ரிக்ஷா வண்டி இழுக்கச் செல்லுதல்.
- பசியால் உலர்ந்த உதடுகள்.

*** சின்னட்டியின் வாடிக்கையாளரான பயணியின் குணவியல்புகள்:-**

- சமதர்மக் கோட்பாட்டைக் கடைப்பிடிக்கும் பண்புடையவர்.
  உ+ம்: நீயும் மனுசன். நானும் மனுசன். அதுதான்.
  மனிதன் மனிதனாக வாழவேண்டும். ஒரு மனிதன் ஏறிக் குந்தியிருக்க இன்னொரு மனிதன் மாட்டைப்போல் இழுப்பது அநாகரிகமானது.
- ஜீவகாருண்யம் மிகுந்தவன்.
- ரிக்ஷாக்காரனுடன் கலகலப்பாகப் பேசும் பண்புடையவன்.
- சின்னட்டியுடன் முதலில் அறிமுகமாகும் போது, மத்தியதர வர்க்கத்திற்கே உரிய பரம்பரைக் குணத்தால் சின்னட்டியை தரக்குறைவாக எண்ணி காசு கொடுக்க உலோபத்தனம் காட்டியமை.

*** நகரத்தின் நிழல் சிறுகதையின் மொழிநடை:-**

- யாழ்ப்பாணத்தைக் களமாகக் கொண்டு கதை நகர்வதால் யாழ் மக்களின் பேச்சு வழக்குச் சொற்கள் மிகுதியாகக் கையாளப்பட்டுள்ளது.
  உ+ம்: 'ஐம்பேசேத்துக் காசுக்கு யோசிக்கிறியளே?'
  காலங்காத்தாலை'
- நியம மொழியையும் கையாண்டுள்ளமையை அவதானிக்கலாம்.
  உ+ம்: சின்னட்டியின் கண்கள் கலங்கின.
  சமதர்மக் கொள்கையில் ஒன்று ரிக்ஷாவில் ஏறாமலிருப்பதும் என்ற நியதியைக்கெட்டியாக நம்பியிருந்தேன்.

*** சின்னட்டியின் குணச்சிறப்பு:-**

- வறுமையிலும் நேர்மையாக உழைத்து வாழவேண்டும் என்ற கொள்கை உடையவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சம்பவங்களை விபரித்தலுக்கும் காட்சிகளைச் சித்தரிப்பதற்கும் ஆசிரியர் கையாண்டுள்ள மொழிநடை சிறப்பானது.
  சின்னட்டியின் தோற்றம், அவ்வாறு பண்புகளை வெளிப்படுத்துதல் கதை நிகழும் களங்களைச் சித்தரித்தல் என்பன சிறப்பானவை.
  உ_+ம்:-
  i) ஒரு கையால் ரிக்ஷாவின் ஏர்க்காலைத் தாங்கிய வண்ணம் மறுகையால் தன் முகத்தில் ஒட்டியிருக்கும் அழுக்கைப் பார்க்கிலும் அழுக்கு மிகுந்த சீலைத் துண்டினால் பசிக்களை இழையோடியிருக்கும் முகத்தில் சற்றே வேர்விடும் வியர்வைத் துளிகளை உரஞ்சித் துடைத்தவாறு, "ரிக்ஷாவிலை ஏறுமன் தம்பி நான் கொண்டு போறன்" என்று கேட்டான்.

  ii) நான் சிங்கள பேக்கறியையும் தாண்டி, நடந்து கொண்டிருந்தேன்.

✳ **கதைக்களம்:-**

- நகரத்தின் நிழல் கதையானது யாழ்ப்பாண நகரையும் அதனை அண்மித்த சூழலையும் மையமாகக் கொண்டு அமைந்துள்ளது.
- யாழ்ப்பாண புகையிரத நிலையத்தில் ஆரம்பித்து, அதன் சுற்றுச்சூழல், சிங்கள பேக்கரி ஊடாக நகர்வதாகவும் இறுதியில், அடைக்கலமாதா கோவிலைத் தாண்டி வண்டி செல்வதனூடாக நகரத்தை அண்மித்த களத்தை கொண்டுள்ளமையை அவதானிக்கலாம்.

✳ **கதை கூறுவதற்கு ஆசிரியர் கையாண்ட உத்தி:-**

- கதையை சின்னட்டியின் பயணி கூறுவதாக நகர்த்தியுள்ளமை சிறப்பானது.
- சிறுகதையாசிரியர் தன்னை ஒரு பயணியாகவே மாற்றி யதார்த்தமாக எழுதியுள்ளமை சிறப்பான உத்தி.
- கதையை ஒருவர் கூறுவதாக எழுதாது உரையாடல் பாங்கினை இடையிடையே கையாண்டுள்ளமை சிறப்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ+ம்: 'ரெண்டு ரூவா தா, தம்பி!'
'என்ன உதிலை கிடக்கிற நல்லூருக்கோ'
'என்ன, ராசா. நீ இப்பிடிச் சொல்லுறாய்?' ஒரு நாளும் ரிக்ஷோவில் போகவில்லையே.

- கதையை ஒரே இடத்தில் நிகழ்வதாகவும் வெறும் சம்பாஷனையாகவும் எழுதாது கதை பல களங்களின் பின்னணியில் நகர்வதாக எழுதியுள்ளமை சிறப்பானது. ரிக்ஷா வண்டியில் பயணம் ஆரம்பித்தல். யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலிருந்து அடைக்கலமாதா கோயில் வரை தொடர்தல்.
- கதையை நிகழ்கால சம்பவத்துடன் இறந்த காலத்தை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்வதாக எழுதியுள்ளமை சிறப்பானது.
  சின்னட்டியின் வாடிக்கையாளர் சின்னட்டியுடனான அறிமுகத்தை ரிக்ஷா வண்டியில் இருந்தவாறு மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளல்.

## கலைச்சொற்கள்

1. பேக்கரி - வெதுப்பகம்
2. ரயில்வே ஸ்ரேசன் - புகையிரத நிலையம்.
3. ரிக்ஷா வண்டி - மனிதரை இழுத்துச் செல்லும் சவாரி வண்டி.
4. கார் - மகிழுந்து
5. ஹோட்டல் - உணவகம்
6. தியேட்டர் - திரையரங்கு
7. ரோட் - வீதி

## மாணவர் செயற்பாடு

**01. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. என் கருமித்தனம் தான் எனது தயக்கத்திற்குக் காரணமாக இருந்திருக்கலாம். கருமி என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   1. ஊதாரி 2. ஏழ்மை 3. உலோபி 4. தனவந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சமதர்மக் கோட்பாட்டைக் கெட்டியாகக் காப்பாற்றி விட்ட வெற்றி முறுவல். முறுவல் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
   1. சிரிப்பு 2. கோபம் 3. வெட்கம் 4. செருக்கு
3. ரீகல் தியேட்டருக்கு வரவிருந்த பயங்கர இங்கிலிஸ் சீரியல் சண்டைப் படத்திற்கு விளம்பரம் ஒட்டியிருந்தது. தியேட்டர் என்பதன் தமிழ்க் கலைச்சொல்.
   1. திரைப்படம் 2. திரையரங்கு 3. மேடையேற்றம் 4. திரை
4. 'இஞ்சை' என்பதன் எழுத்து வடிவம்.
   1. இஞ்ஞை 2. இங்கு 3. இது 4. இங்கே
5. ரிக்ஷா வேகமாக என்னைத் தாண்டி நின்றது. வேகமாக என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
   1. உறுதியாக 2. மெதுவாக 3. கோபமாக 4. விரைவாக
6. பின்வரும் சொற்களுள் மெய்முன் மெய் புணர்தலுக்கு உதாரணம்
   1. மரப்பெட்டி 2. கடலலை
   3. விலைவாசி 4. வெள்ளையுள்ளம்
7. காலால் உந்தித் தள்ளினான். காலால் என்பதில் இடம்பெற்றுள்ள புணர்ச்சி வகை.
   1. உயிர்முன் உயிர் புணர்தல்
   2. மெய்முன் உயிர் புணர்தல்
   3. மெய்முன் மெய் புணர்தல்
   4. உயிர்முன் உயிர் புணர்தல்'
8. 'மரத்தை' என்பதைப் பிரித்து எழுதியதன் சரியான வடிவம்.
   1. மரம்+அத்து+ஐ 2. மரத்து+ஐ
   3. மரம்+ஐ 4. மரம்+த்+ஐ
9. விமர்சனத்தின் பயன்களுள் பொருத்தமற்றதாகக் காணப்படுவது
   1. சிறந்த வாசகரை உருவாக்கும்
   2. குறை கூறுவதை விரும்பாதிருத்தல்
   3. இலக்கியத்திற்கான உயர் மதிப்பை பெற வழி வகுக்கும்.
   4. தரமான படைப்புகள் வெளிவர உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சற்றுத் தூரத்தில் புத்தம் புது மோரீஸ் மைனர் கார் நின்றது. புத்தம் புது என்பது,

1. இணைமொழி　　2. அடுக்குத்தொடர்
3. இரட்டைக் கிளவி.　　4. அடுக்கிடுக்குத் தொடர்

**02. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.**

1. "எனக்கொண்டும் புழைப்பில்லை விடியக்காத்தாலை குடுக்கிறதைக் குடுங்க" தரப்பட்ட கூற்றை எழுத்து வடிவில் எழுதுக.

..........................................................................................................

..........................................................................................................

2. "நானொன்றும் பேசயில்லை" இதனைப் பிரித்து எழுதுக.

..........................................................................................................

3. நகரத்தின் நிழல் சிறுகதையின் ஆசிரியர் யார்?

..........................................................................................................

4. இக்கதையின் பிரதான பாத்திரமாக விளங்குவது யார்?

..........................................................................................................

5. "என்ன சும்மா போகவிடமாட்டியே" இக் கூற்று யாரால், யாருக்கு கூறப்பட்டது.

..........................................................................................................

..........................................................................................................

6. கார், ஆஸ்பத்திரி ஆகிய சொற்களுக்கான தமிழ்ச்சொற்களை எழுதுக.

..........................................................................................................

7. "முணு முணு" என்ற இரட்டைக்கிளவிச் சொல்லை வைத்து வாக்கியம் அமைக்க.

..........................................................................................................

..........................................................................................................

8. சொல் என்ற சொல் பெயராகவும் வினையாகவும் அமையுமாறு இருவேறு வாக்கியங்கள் எழுதுக.

..........................................................................................................

..........................................................................................................

9. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல் : ..........................................................................................

..........................................................................................

குறள் : ..........................................................................................

..........................................................................................

10. மெய்முன் உயிர் புணரும் சொற்கள் 2 எழுதுக.

..........................................................................................

..........................................................................................

**03. பின்வரும் கூற்றுக்கள் யாரால் யாருக்கு, எச் சந்தர்ப்பத்தில் கூறப்பட்டன என எழுதுக.**

1. அவ்வளவு கரைச்சலில்லை. இண்டைக்கு எப்பிடியும் முடிஞ்சிடும்.

   யாரால் :- ........................................

   யாருக்கு :- ........................................

   எச்சந்தர்ப்பம் :- ........................................

2. டேய், மடையா! கார் வாறது பின்னாலை, தெரியலையா?

   யாரால் :- ........................................

   யாருக்கு :- ........................................

   எச்சந்தர்ப்பம் :- ........................................

3. என்னையும் கார் ஓட்டப் பழக்கி விடுறானாம்.

   யாரால் :- ........................................

   யாருக்கு :- ........................................

   எச்சந்தர்ப்பம் :- ........................................

**04. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதி, அவற்றில் இடம்பெற்றுள்ள புணர்ச்சி மாற்றங்களை எழுதுக.**

1. புற்தரை :- ........................................................
2. பழச்சாறு :- ........................................................
3. மாவேர் :- ........................................................
4. பொருட்கூடம்:- ........................................................
5. தமிழ்ச்சங்கம்:- ........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. **பின்வரும் வினாக்களுக்கு விளக்கமான விடை எழுதுக.**

1. நகரத்தின் நிழல் சிறுகதையில் முன்வைக்கப்படும் விடயம் யாது?

   ..........................................................................................

   ..........................................................................................

2. யாழ்ப்பாண நகரை ஆசிரியர் எவ்வாறு வர்ணிக்கிறார்?

   ..........................................................................................

   ..........................................................................................

3. ரிக்ஷா வண்டியில் பயணி ஏற மறுத்தமைக்கும், பின் சின்னட்டியின் ரிக்ஷா வண்டியில் வாடிக்கையாகப் பயணிப்பதற்கும் காரணங்கள் எவை?

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

4. கதை நிகழும் களம் பற்றிக் குறிப்பிடுக.

   ..........................................................................................

   ..........................................................................................

5. நகரத்தின் நிழல் என்ற தலைப்பு கதைக்கு எவ்வாறு பொருத்தமானதாகிறது.

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

6. சின்னட்டி, சின்னட்டியின் வாடிக்கையாளரான பயணி ஆகியோரின் குணப்பண்புகளை எழுதுக.

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. இக்கதையில் மனிதாபிமானம் வெளிப்படுமாற்றினை எடுத்துக் காட்டுக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

8. சின்னட்டி மிகுந்த உழைப்பாளி என்பதை கதையிலிருந்து எடுத்துக் காட்டுக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

9. விமர்சனம் ஒன்று எழுதுபவரின் பண்புகள் 5 தருக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

10. விமர்சனத்தின் பயன்பாடுகள் 3 தருக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**06. நகரத்தின் நிழல் சிறுகதை பற்றி சிறுவிமர்சனம் ஒன்று எழுதுக.**

- உள்ளடங்க வேண்ட விடயங்கள்
- கதையின் மையக்கருத்தும் அதனை ஆசிரியர் முன்வைக்கும் பாங்கும்.
- கதாபாத்திரப் படைப்பு
- கதை கூறும் உத்தி, கதை நகர்வு.
- கதையின் மொழி நடை.

..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. காட்டு வழி

* காட்டு வழி என்ற கவிதையின் ஆசிரியர் கதிரேசன் ஆவார்.

* இக் கவிதை ஈழத்துக் கவிதைக் கனிகள் என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

* காட்டு வழி என்ற கவிதை காட்டின் ஊடாகச் செல்லும் ஒற்றையடிப்பாதை அதன் சுற்றுப்புறங்களில் உள்ள இயற்கை அழகு என்பன பற்றிக் கூறுகின்றது.

* ஊரில் உள்ளவர்கள் சென்று அறிந்திருக்காத காட்டு வழிப் பாதையின் அனுபவத்தை கவிதையாகப் பாடியுள்ளார் கவிஞர்.

* ஒற்றையடிப் பாதையின் இரு பக்கத்திலும் தீமைகள் விளைவிக்கும் செடிகள் பல நின்றன. கொடிய முட்களை நீட்டி கவிஞரை முறைத்துப் பார்த்தது போல் நின்றன. பற்றிப் படர்ந்த கொடிகள் பெரும் பாம்புகளைப் போல அச்சத்தை ஏற்படுத்தின.

* பல வர்ணத்தாலான சிறிய மலர்கள் வெயிலின் வாட்டத்தைத் தவிர்த்து காற்றில் அசைந்தன.

* எண்ணற்ற இலைகள் கூட்டமாக எட்டியும் கிள்ளியும் தொட்டும் மகிழ்ந்தன.

* சிறிய செடிகள் கொடிகளை விட விண்ணில் உயர்ந்து வளர்ந்திருந்த வீர மரங்களும் காரை இனங்களும், கண்ணை கூச்சமடையச் செய்யும் மாலை வேளைச் சூரியக் கதிரின் ஒளியினை மறைத்து நின்றன.

* பட்டுப் போன்ற மென்மை உடைய சிறு பூச்சிகள் மின்னிப் பறந்தன.

* கொட்டுகின்ற குளவிகள் பெரிய கூட்டில் மொய்த்து இசைப்பாட்டுப் பாடின.

* எண்ணற்ற பல சிலந்திகள் முட்டைகளைச் சுமந்து வலைக்குள் மூடிக்கிடந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பல தும்பிகள், எட்டுத்திசைகளிலும் அம்புகள் நிறைந்ததைப் போல் பறந்தன.
* பச்சை நிறக் கிளிகள் இரை தேடி பற்றைகள் மீது பறந்தன.
* பறவைகள் தமது விருப்பப்படி அமர்ந்து செவிக்கு இன்ப மழலை அளித்தன.
* கவுதாரிகள் அச்சம் கொண்டு என் அருகில் ஓடின.
* பல காடைகள் குச்சு நிறைந்த புதரில் சிறு கூடுகளில் தங்கின.
* நாவி இனப் பூனை கொடிய நஞ்சு உமிழும் பார்வையில் அச்சத்துடன் விழித்தது.
* தாவிப் பாய்ந்த முயல் அயலில் உள்ள பற்றைக்குள் போய் மறைந்தது.
* எலிக் கூட்டம் வளைக்குள் வீழ்ந்து தாவியது.
* அணிற்குலம் என்னை வாவென்று அழைத்தன. அவற்றின் கீச்சிடும் ஒலி வாழ்த்துவதைப் போல் ஒலித்தது.
* தொடர்ந்து நடந்த போது புவியில் உள்ள உயிர்கள் யாவும் இயற்கையின் அழகிய படைப்புக்களே, இவை ஒன்றாகக் கூடி குதூகலித்து ஆடிப்பயின்றன. இருள் சூழ்ந்ததும் காட்டில் நின்று திரிந்து சென்ற உயிரினங்கள் யாவும் சென்று உறங்கின.
* அன்னையாகிய காடே! என காட்டை தாயாக விளித்து அழகு மிகுந்த காடு தன்னைப் பாட வைத்ததாகக் கூறி நிறைவு செய்கிறார்.
* கவிதையில் கையாளப்பட்டுள்ள அணிச்சிறப்புக்களை நோக்குவோம்.
  - எதுகை அணி, உவமை அணி, தற்குறிப்பேற்ற அணி என்பன அதிகமாகக் கையாளப்பட்டுள்ளமையை நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **எதுகை அணி:-**

எண்ணில், விண்ணில், கண்ணில்
பட்டின் மெதுமை தரும்
கொட்டும் குளவியினம்
கூட்டினில் மொய்த்து
முட்டை சுமந்தனவாய்

- இச்சைப் படி சுமந்தே
அச்சம் நிறைந்தன
குச்சு நிறை புதர்

- **உவமை அணி:-**

"அட்ட திசைகளிலும் - நிறை
அம்புகள் போற்பல தும்பி பறந்தன."

தும்பிகள் பறப்பதைக் கவிஞர் எட்டுத் திசைகளிலும் அம்புகள் வேகமாகச் செல்வதற்கு ஒப்பிட்டுப் பாடியுள்ளார்.

உவமானம் :- அம்புகள் செல்லுதல்
உவமேயம் :- தும்பிகள் பறத்தல்
பொதுத்தன்மை :- வேகமாகப் பறத்தல்.

- **தற்குறிப்பேற்ற அணி:**

காட்டில் செடிகளின் நிலை, பிராணிகளின் இயற்கையான இயல்புகளை கவிஞர் தன் குறிப்பாக கூறுகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

காட்டின் பாதையோரத்தில் கொடிய முட்செடிகள் நின்ற இயற்கை நிகழ்வை, கவிஞர்,

"முதிர் செடிகள்-கொடு
முட்களை தீட்டி என் பக்கம் முறைத்தன" என தற்குறிப்பாக ஏற்றிக் கூறுகின்றமையால் தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

அணில்களின் கீச்சிடும் ஒலியை, தன்னை வாவென்று அழைத்ததாகவும் வாழ்த்தியும் கூறியதாகப் பாடுகின்றார்.

"வாவும் அணிற் குலங்கள் - எனை
வாவென்றழைத்தன், வாழ்த்தி ஒலித்தன".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் செயற்பாடு–

01. மிகவும் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. பெரும் பாம்புகள் போற் பயம் மேம்படச் செய்தன. பாம்பு என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   1. கோகிலம் 2. அரவம் 3. அஞ்சுகம் 4. கூகை
2. அந்திக்கற்றை ஒளியினைச் சற்று மறைத்தன. இவ்வரியில் கூறப்படும் பொழுது,
   1. அதிகாலை 2. காலை 3. மதியம் 4. மாலை
3. காட்டுவழி என்ற கவிதையின் ஆசிரியர்
   1. டொமினிக் ஜீவா 2. பிசிராந்தையர்
   3. கதிரேசன் 4. பெருமாள் முருகன்
4. பச்சைக்கிளியினங்கள் இரை பற்றிப் படர்ந்தன. கிளி என்பதன் ஒத்தகருத்துச்சொல்,
   1. தத்தை 2. கட்டுகவி 3. அரவம் 4. மயூரம்
5. நிறை அம்புகள் போற் பல தும்பி பறந்தன. இங்கு இடம்பெற்றுள்ள அணி
   1. உருவகஅணி 2. உவமைஅணி
   3. சிலேடை அணி 4. உயர்வு நவற்சி அணி
6. பச்சை, இச்சை, அச்சம், குச்சு ஆகிய சொற்களில் இடம்பெற்றுள்ள அணி
   1. எதுகை அணி 2. மோனை அணி
   3. சிலேடை அணி 4. இயல்பு நவிற்சி அணி
7. 'விண்ணிற் சிறிதுயர்ந்தே வளர் வீரை மரங்களும் காரை இனங்களும்' என்ற தொடரில் இடம்பெற்றுள்ள வாக்கிய வகை
   1. தனி வாக்கியம் 2. கூட்டு வாக்கியம்
   3. கலப்பு வாக்கியம் 4. வினா வாக்கியம்
8. பின்வருவனவற்றுள் திணை வழுவாக அமைவது,
   1. விமலன் அடித்தான் 2. விமலன் அடித்தார்
   3. விமலன் அடித்தாள் 4. விமலன் அடித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. தொன்று தொட்டு வழங்கி வரும் முறையை மாற்றி பிழையாக அழைக்கும் வழு

1. மரபுவழு 2. பால்வழு 3. வினாவிடைவழு 4. எண்வழு

10. பிற உயிர்களையும் எமது உயிரைப் போல கருதுதல் வேண்டும் என்ற கருத்தைத் தரும் பழமொழி,

1. காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு
2. தன்னுயிர் போல் மன்னுயிர் பேண்
3. தனக்கு மிஞ்சித்தான் தானம்
4. இட்டுக்கெட்டார் எங்கும் இல்லை.

## 02.. பின்வரும் சொற்தொடர்களைப் பிரித்து எழுதுக.

1. ஊரிலுள் ளோர்பலர் போயறி யார்

.........................................................................................................

2. நின்றாட்டம் பயின்றன

.........................................................................................................

3. விண்ணிற் சிறிதுயர்ந்தே

.........................................................................................................

4. குளவியினம்

.........................................................................................................

5. மொய்த்திசைப் பாட்டு மொழிந்தன.

.........................................................................................................

6. எனதண்டையிலே கவுதாரிகள் ஓடின.

.........................................................................................................

7. நஞ்சுமிழ் பார்வையின

.........................................................................................................

8. வாவென்றழைத்தன.

.........................................................................................................

9. கூடிக் குதூகலித்தாடிப் பயின்றன

.........................................................................................................

10. செவிக் இன்ப மழலை அளித்தன.

.........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. பின்வரும் சொற்களை வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமைக்க.

1. அறி :- ..........................................................................................

..........................................................................................

2. அரி :- ..........................................................................................

..........................................................................................

3. களி :- ..........................................................................................

..........................................................................................

4. கலி :- ..........................................................................................

..........................................................................................

5. கழி :- ..........................................................................................

..........................................................................................

6. மறை:- ..........................................................................................

..........................................................................................

7. மரை:- ..........................................................................................

..........................................................................................

8. வலை:- ..........................................................................................

..........................................................................................

9. வளை:- ..........................................................................................

..........................................................................................

10. கிளி :- ..........................................................................................

..........................................................................................

11. கிலி :- ..........................................................................................

..........................................................................................

12. கிழி :- ..........................................................................................

..........................................................................................

13. இரை:- ..........................................................................................

..........................................................................................

14. இறை:- ..........................................................................................

..........................................................................................

15. காலை:- ..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

..................................................................................................

16. காளை:- ..........................................................................................

..................................................................................................

## 04. பொருத்தமானவற்றுடன் இணைக்குக.

| | |
|---|---|
| 1. உயர்திணைச் சொல்லை அஃறிணையில் சொல்வது | பால்வழு |
| 2. பெண்பாற் சொல்லை ஆண்பாலுக்குரிய விகுதியில் முடிப்பது | இடவழு |
| 3. ஒரு காலத்தை பிறிதொரு காலத்துடன் சேர்த்துக் கூறுவது | வினா-விடை வழு |
| 4. வினாவிற்குப் பொருத்தமற்ற விடை கூறுவது | திணைவழு |
| 5. தன்மைச் சொல்லை படர்க்கையில் முடித்துக் கூறுவது | காலவழு |

## 05. பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| வழுவகை | உதாரணம் | திருத்தமான வடிவம் |
|---|---|---|
| 1. திணைவழு | .................................. | .................................. |
| 2. .................. | .................................. | மாலா அழைத்தாள் |
| 3. .................. | கதிரை உடைத்தன | .................................. |
| 4. காலவழு | .................................. | .................................. |
| 5. இடவழு | அவர் கூறினாய் | .................................. |
| 6. வினாவிடைவழு | .................................. | .................................. |
| 7. ........................ | யானைக்குஞ்சு | .................................. |

## 06. கீழே தரப்பட்டுள்ள பழமொழிகளைப் பூரணப்படுத்துக

1. ................................................... இலுப்பைப் பூச்சர்க்கரை.
2. அடிமேல் அடி அடித்தால் ...........................................
3. கண்டால் கட்டாடி ....................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. உருட்டும் புரட்டும் ..........................................................

5. திக்கற்றவனுக்கு ..........................................................

6. .......................................................... செந்தமிழும் நாப்பழக்கம்

7. வெளுத்தது எல்லாம் ..........................................................

8. .......................................................... உள்ளளவும் நினை.

9. அலைமோதும் போதே ..........................................................

10. அருமை நண்பனை ..........................................................

**07. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. கவிஞர் சென்ற பாதை எத்தகையது?

   ..........................................................................................................

2. ஒற்றையடிப் பாதையின் சுற்றுப்புறம் எவ்வாறு இருந்தது?

   ..........................................................................................................

   ..........................................................................................................

3. காட்டுவழியில் கவிஞர் சந்தித்த உயிரினங்கள் எவை?

   ..........................................................................................................

   ..........................................................................................................

4. அட்ட திசைகளும் எவை?

   ..........................................................................................................

   ..........................................................................................................

5. காட்டு வழியில் கவிஞர் செல்லும் போது பின்வருவனவற்றின் செயற்பாடுகள் எவ்வாறு இருந்தன எனக் குறிப்பிடுகிறார்?

   i) பல்நிறப்பூச்சிகள் :- ..........................................................

   ii) குளவிகள் :- ..........................................................

   iii) தும்பிகள் :- ..........................................................

   iv) பூவைகள் :- ..........................................................

   v) கவுதாரி :- ..........................................................

   vi) அணில் :- ..........................................................

   vii) முயல் :- ..........................................................

6. கவிதையில் கையாளப்பட்டுள்ள உவமைகளைக் குறிப்பிடுக.

   ..........................................................................................................

   ..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கவிதையில் இடம்பெற்றுள்ள உயர்வு நவிற்சி அணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

8. கவிஞர் காட்டை எவ்வாறு விளித்துக்கவி பாடுகிறார்?

..........................................................................................

9. இருள் சூழ்ந்ததும் யாது நிகழ்ந்ததெனக் கூறப்படுகிறது?

..........................................................................................

10. கவிஞரை கவிபாட வைத்த நிகழ்வுகள் 5 எழுதுக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**08. உமக்குத் தெரிந்த பழமொழிகள் பத்தினை எழுதி அவற்றின் பொருளை எழுதுக.**

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................


..........................................................................................

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. சகுந்தலை நாடகம் II



சகுந்தலை நாடகத்தின் முதலிரு காட்சிகளும் 17ஆம் அலகில் இடம்பெற்றன. மூன்றாம் நான்காம் காட்சிகளை இவ்வலகில் நோக்குவோம்.

**காட்சி மூன்று**

துஷ்யந்தமன்னனின் அத்தினாபுரி அரண்மனைக்கு சகுந்தலையை அழைத்து வந்த சார்ங்கரவனும் தாய் கௌதமியும் வருகை தந்து அரசனுக்கு செய்தியொன்று வழங்கவேண்டுமென வாயிற் காவலுக்கு அறிவித்தனர்.

மன்னன் அரசகாரியங்களை நிறைவு செய்து இளைப்பாறச் சென்றுள்ள போதிலும் கண்ணுவ முனிவரின் செய்தியைத் தாமதப்படுத்த முடியாதென்பதால், அரசனிடம் சென்று ஆச்சிரமவாசிகள் வந்திருப்பதை அறிவித்தான்.

மன்னன் துஷ்யந்தன் ஆச்சிரமவாசிகளை வேத வழக்கின்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்று வேள்விச்சாலைக்கு அழைத்து வருமாறு கூறியதும் வேள்விச்சாலைக்கு அழைத்து வரப்பட்டனர்.

* மன்னன் எல்லோரது நலனையும் விசாரித்தபின், சார்ங்கரவன் கண்ணுவ முனிவரின் செய்தியை முன்வைத்தான்.

* துஷ்யந்தன் துருவாசமுனிவரின் சாபத்தால் சகுந்தலையைக் காந்தர்வ மணம் புரிந்ததை மறந்துவிட்டான். அதனால் சார்ங்கரவன் கூறிய செய்தியை ஏற்க மறுத்து தன்மீது வீண்பழி சுமத்துவதாகக் கூறினான்.

* மன்னன் தன்னை திருமணம் செய்தமைக்குச் சான்றாக அணிவித்த மோதிரத்தை சகுந்தலை காண்பிக்கத் தேடிய போது அதனைக் காணாது பதற்றமடைந்தாள்.

* துஷ்யந்தன், சகுந்தலையும் கௌதமியும் தன்னை ஏமாற்றுவதாகக் கூறி சகுந்தலையை மணந்தமையை மறுத்து அவளை ஏற்க மறுத்தான்.

* சார்ங்கரவன் குருவின் கட்டளையை நிறைவேற்றி விட்டதாகக் கூறி சகுந்தலையை மன்னனிடமே விட்டுச் சென்று விடுகின்றனர்.

* மன்னனும் சகுந்தலையைப் பொறுப்பேற்காமையால், மாதர் பள்ளியில் சிலகாலம் தங்கியிருக்கும்படி புரோகிதர் கூறி சகுந்தலையை அழைத்துச் செல்ல, சோதி ஒன்று தோன்றி ஆகாயமார்க்கமாகத் தூக்கிச் சென்றது.

* துஷ்யந்தன் அச்சத்துடன் ஓய்வெடுக்கச் சென்றான்.

காட்சி நான்கு

* அத்தினாபுரி கடைத் தெருவில் நிகழுகின்றது.

* மீனவன் ஒருவன் மன்னனின் பெயர்பொறிக்கப்பட்ட மோதிரத்தை விற்பதற்காகக் கொண்டு வந்த போது கடற்கரையில் கண்காணிப்பு வேலையில் ஈடுபட்டிருந்த காவலன் ஒருவன் அவனிடம் விசாரணை மேற்கொண்ட போது, வலையில் அகப்பட்ட மீனை அரிந்த போது கணையாழி கிடைத்ததாகக் கூறுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* காவலாளி மீனவனை அழைத்துக் கொண்டு அரசனிடம் சென்று கணையாழியைக் காண்பித்து நடந்தவற்றைக் கூறியதும் துஷ்யந்த மன்னனுக்கு பழைய நிகழ்வுகள் (சகுந்தலையைத் திருமணம் செய்தது) நினைவுக்கு வந்தன.

* மீனவனுக்குப் பொற்காசுகளை வழங்கி அனுப்பி வைத்த மன்னன் சகுந்தலையைக் கண்டு மன்னிப்புக் கேட்பதற்காகப் புறப்படுகின்றான்.

* பல துன்பங்களைச் சந்தித்து ஏமகூட மலையிலுள்ள தவப்பள்ளியில் சகுந்தலையைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தான்.

## மாணவர் செயற்பாடு

01. **பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

1. கண்ணுவ முனிவரின் ஆச்சிரமத்திலிருந்து வந்தவர்கள் யாவர்?

 ..........................................................................................

2. இப் பூவுலகை எந்நேரமும் தாங்கிக் கொண்டிருப்பவர் யார்?

 ..........................................................................................

3. துஷ்யந்த மன்னனின் புரோகிதர் யார்?

 ..........................................................................................

4. மனிதர்கள் ஆணவம் கொள்வதற்குக் காரணமானவை எவை?

 ..........................................................................................

5. சகுந்தலையைத் திருமணம் செய்த துஷ்யந்தன் அதன் அடையாளமாக வழங்கியது எது?

 ..........................................................................................

6. சகுந்தலை அத்தினாபுரம் வரும்போது நீராடியதீர்த்தம் எது?

 ..........................................................................................

7. "அரசே, எங்கள் குருவின் கட்டளையை நிறைவேற்றி விட்டோம்."

 i) இங்கு குரு எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

 ..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii) அவரது கட்டளை யாது?

..........................................................................................................

8. மாதர் பள்ளிக்கு சகுந்தலையை அழைத்துச் சென்றபோது யாது நிகழ்ந்தது?

..........................................................................................................

9. சகுந்தலை நாடகத்தை எழுதியவர் யார்?

..........................................................................................................

10. துஷ்யந்தன் சகுந்தலையை எந்த மலையில் சென்று சந்தித்தான்?

..........................................................................................................

**02. பின்வரும் சொற்களை வைத்து பொருள் விளங்க வாக்கியம் அமைக்க.**

1. குவலயம் :- ..........................................................................

..........................................................................................................

2. சீவனம் :- ..........................................................................

..........................................................................................................

3. அறுவடை :- ..........................................................................

..........................................................................................................

4. நயவஞ்சகர் :- ..........................................................................

..........................................................................................................

5. தபோவனம் :- ..........................................................................

..........................................................................................................

6. கணையாழி :- ..........................................................................

..........................................................................................................

7. செங்கோல் :- ..........................................................................

..........................................................................................................

8. புரோகிதர் :- ..........................................................................

..........................................................................................................

9. ஈனச்செயல் :- ..........................................................................

..........................................................................................................

10. தவப்பள்ளி :- ..........................................................................

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. பின்வரும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.

1. கணையாழி :- ..............................................
2. திருடன் :- ..............................................
3. நாமம் :- ..............................................
4. ஆச்சரியம் :- ..............................................
5. கட்டளை :- ..............................................
6. சாதுரியம் :- ..............................................
7. மடந்தை :- ..............................................
8. பதி :- ..............................................
9. புகழ் :- ..............................................
10. பதிவிரதை :- ..............................................

04. பின்வரும் சொற்களுள் முன்னொட்டுள்ள சொற்களையும் பின்னொட்டுள்ள சொற்களையும் வேறுபடுத்தி எழுதுக.

அசுத்தம், அகாலம், கூர்மை, தத்துவவாதி, பிற்பகல், புத்திமான், அநீதி, உள்ளீடு, அரசியல்வாதி, விவாதம்

| முன்னொட்டுக்கள் | பின்னொட்டுக்கள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

05. பின்வரும் வினாக்களுக்கு விளக்கமான விடை எழுதுக.

1. வாயிற்காவலன் அரசன் ஒருவன் எவ்வாறு ஆட்சி செய்ய வேண்டும் எனக் கூறுகின்றான்?

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.....................................................................................................

.....................................................................................................

2. கண்ணுவ முனிவரின் சிறப்புக்கள் இந்நாடகமூடாக வெளிப்படுவதை எழுதுக.

.....................................................................................................

.....................................................................................................

3. துஷ்யந்தன் சகுந்தலையை மறந்தமைக்குக் காரணம் யாது?

.....................................................................................................

.....................................................................................................

4. 'குயில் அதன் குஞ்சுகளை எவ்வாறு வளர்க்கிறது என்பது இந்தக் குவலயம் அறிந்ததே' என துஷ்யந்தன் சகுந்தலைக்குக் கூறினான். குயில் எவ்வாறு குஞ்சுகளை வளர்க்கிறது?

.....................................................................................................

.....................................................................................................

5. தொலைந்து போன கணையாழி எவ்வாறு கிடைக்கப் பெற்றது?

.....................................................................................................

.....................................................................................................

6. கணையாழி கிடைக்கப் பெற்றதும் துஷ்யந்தன் யாது செய்தான்?

.....................................................................................................

.....................................................................................................

7. சகுந்தலை நாடகத்தில் இடம்பெறும் பின்வரும் கதாபாத்திரங்களின் குணவியல்புகளை எழுதுக.

i) சகுந்தலை :-

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

ii) துஷ்யந்தன் :-

.....................................................................................................

.....................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

iii) கண்ணுவமுனிவர்:-

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

iv) துருவாசமுனிவர்:--

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

8. கண்ணுவமுனிவர் துஷ்யந்த மன்னனுக்கு கூறி அனுப்பிய செய்தி யாது? அதனைக் கேள்வியுற்ற மன்னனின் பதில் என்பவற்றை எழுதுக.

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

9. பின்வரும் கூற்றுக்கள் யாரால், யாருக்குக் கூறப்பட்டன என எழுதுக.

1. 'பரம்பரை பரம்பரையாக இந்தத் தொழிலைத்தான் செய்கிறேன்.'

யாரால் :- ..........................................................

யாருக்கு :- ..........................................................

2. 'அவளைத் தூக்கிக் கொண்டு ஆகாய மார்க்கமாகச் சென்று தேவமாதர் தடாகத்தில் மறைந்துவிட்டது.'

யாரால் :- ..........................................................

யாருக்கு :- ..........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. 'நீங்களும் என்னை விட்டுவிட்டா செல்கிறீர்கள்?'
யாரால் :- ..........................................................
யாருக்கு :- ..........................................................

4. 'தங்களுக்கு மங்களம் உண்டாகுக. எதிலும் வெற்றி பெறுவீராக.'
யாரால் :- ..........................................................
யாருக்கு :- ..........................................................

10. விவாதத்தில் பங்குபற்றி கருத்துக்களை முன் வைக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?

..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
